# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள்





தொகுப்பாசிரியர்
எஸ்.ரகுபதி

வெளியீடு
கோப்பிகுல ஒன்றியம்
எருவில்

5/9/2016.

# சமர்ப்பணம்

## எருவில் அன்னை ஸ்ரீ கண்ணகியம்மன் உறைந்திட வழிசமைத்த எங்கள் மூத்தோர்



| | |
|---|---|
| **அமரர் சின்னவப்போடி** | **அமரர் மாணிக்கப்போடி** |
| **(உடையார்)** | **(தோம்புதோர்)** |

**– அவர்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம் –**

# நுழைவதற்கு முன்

சோழநாட்டிலே பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து நீதியை நிலை நாட்டி, சேர நாட்டிலே தெய்வமானவள். சேரன் செங்குட்டுவன் சேர நாட்டில் கொடுங்களுர் என்ற ஊரில் கண்ணகிக்கோட்ட ம் அமைத்தான். அவ்விழாவிற்குச் சென்ற பாண்டிய மன்னன் வெற்றிவேற்செழியன் சோழ மன்னன் பெருநெற்கன்னி, இலங்கை மன்னன் கஜபாகு மன்னன் ஆகியோர் தங்கள் நாடுகளில் கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபட்டனர்.

கிழக்கிலங்கையில் ஐம்பதுக்கு மேற்பட்ட கண்ணகியம்மன் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அவ்வாலயங்களில் இன்றும் வைகாசி மாதத்தில் ஊர்மக்கள் கூடிவிழா எடுப்பதைக் காண்கின்றோம்.

கிழக்கிலங்கையில் பிரபல்யம் பெற்ற கண்ணகியம்மன் ஆலயங்களில் எருவில் கண்ணகியம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் சடங்கு முறைகள் பற்றிய கும்மி, கோலாட்டம் என்பவற்றையும் கண்ணகித்தாயின் சிறப்புக்களைக் கொண்ட கும்மி, வசந்தன் கூத்துப் பாடல்கள், காவடிச்சிந்து பாடல்களும், கண்ணகி வழக்குரைக்காவியம், ஊர்சுற்றுக்காவியம், காவிய நாயகியின் வரலாற்றையும். திருச்சடங்கு முறைகளையும், உள்வாங்கியதாக "எருவில் கண்ணகி அம்மன் சடங்குமுறைகள்" எனும் சிறிய மலர் வெளிவருகின்றது.

300 வருடங்களுக்கு மேற்பட்ட எமது ஆலயத்தைப்பற்றி எவ்வித செய்திகளும் அச்சு ஊடகங்களிலும் வெளிவராதது மிக கவலையளிக்கின்றது. இந்நூலில் ஆலய வரலாற்றை எழுத நினைத்தேன் அதற்கு ஆலய பரிபால சபையினரின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ஆலய வரலாறு அடுத்து வெளிவரும் "எருவில் வரலாறு" எனும் நூலில் இணைத்துக் கொள்வோம் எனக் கூறிக்கொள்கின்றேன்.

இந்நூல் பல சவால்களையும், தடைகளையும் தாண்டி கண்ணகி த்தாயின் திருவருளினால் எந்தவித மாற்றமுமின்றி ஆலய பரிபாலன சபையின் அங்கீகாரத்துடன் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அவர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்புனித பணியில் இணைந்தவர்களுக்கு என் மானசீகமான நன்றிகள் உரித்தாகட்டும்.

தொகுப்பாசிரியர் :

**எஸ்.ரகுபதி** (C.G.A.O) Hindusim Spi.Trd. B.A, P.G.D.E

# அருளாசியுரை

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"

எங்கும் நீக்கமற நிறைந்த சச்சிதானந்தப் பரம்பொருள் உலகம் உய்யும் பொருட்டுத் தனது ஐம்பெரும் தொழில்கள் ஆகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றை இச்சா, கிரியா, ஞானம் என்ற சக்திகளைக் கொண்டு நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார். இந்த மூன்று சக்திகளையும் தன்னகத்தே கொண்டு சிவனோடு ஐக்கியமாகி சிவசக்தியாக காட்சி தருபவள் அன்னை ஆதிபராசக்தி ஆகும்.

சிவன் இல்லையேல் சக்தி இல்லை சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்ற நிலையில் இரண்டறக் கலந்த சிவசக்தியை நாம் பராசக்தி, இராஜராஜேஸ்வரி, லலிதா, திரிபுரசுந்தரி, அம்பிகை என்றும் அழைக்கின்றோம். இலங்கை மணித் திருநாட்டின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் சக்தி வழிபாட்டில் மூலதெய்வமாகவும், கற்புடைத் தெய்வமாகவும், காவிய நாயகியாகவும் விளங்குபவள் கண்ணகி தெய்வம் இவ்வழிபாட்டின் மூலம் அறநெறி, பண்பாடு ஒழுக்கம் போன்ற கோட்பாடுகள் பேணப்படுகின்றன.

காலத்தின் தேவைக்கு அமைய கண்ணகி வழிபாட்டின் தத்துவங்களையும் கண்ணகியின் சிறப்புக்களையும் எடுத்து உரைக்கும் நூலினை வெளியிடுகின்ற திரு.ச.ரகுபதி ஆசிரியர் அவர்களின் முயற்சியானது ஆன்றோர் வழிகாட்ட அவ்வழியில் வாழ முயற்சிக்க வேண்டும் அம் முயற்சி "வையத்துள் வாழ்வாங்கு வாழ" வழிவகுக்கும் இவ் நூலாசிரியரின் பணி தொடர எமது மனமார்ந்த அருளாசியினைக் கூறுகின்றேன்.

சுபம்

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

கிரியாஜோதி சிவகிரி அகோரசிவாச்சாரியார்
**சிவஸ்ரீ இரா.கு.கோபாலசிங்கம் குருக்கள்**
அபிதாலயம்

# ஆசியுரை

எமது கண்ணகியம்மன் ஆலயத்திற்குரிய வழக்குரைகாவியமும், ஊர் சுற்றுக் காவியமும் ஏட்டுப் பிரதியாக காணப்பட்டது. அக்காவியத்தை இளைஞர்கள் பாடுவதற்கு முன்வருவதில்லை இதன் காரணமாக கடந்த 2001ம் ஆண்டு இக் காவியங்கள் திரு.ச.ரகுபதி ஆசிரியரினால் நூல்வடிவம் பெற்றது. இதன் காரணமாக இளைஞர்கள் பலர் ஆர்வத்துடன் காவியங்களைப் பாடுவதை அவதானிக்கலாம்.

இப்பொழுது காவியங்களுடன் கண்ணகித்தாயின் வரலாறு கண்ணகியின் வழிபாட்டு முறைகள், சடங்கு முறை தொடர்பான கோலாட்டம், கும்மி, காவடிச்சிந்து, வசந்தன் கூத்துப் பாடல்களும், உள்ளடங்கியவாறு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலினை தொகுத்த திரு.ச.ரகுபதி ஆசிரியர் அவர்கட்கும், இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லோருக்கும் கண்ணகித்தாயின் அருள் கிடைக்க வேண்டுமென எம்தாயை பிரார்த்திக்கின்றேன்.

**திரு. கோபால் பத்தினியன்,**
பூசகர்,
ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்

# வாழ்த்துரை

தெய்வப் பெண்ணாகிய உமைமானிடப் பெண்ணாக கண்ணகியாக அவதாரமெடுத்தவள். தனது அவதார நோக்கத்தை நிறைவேற்றி மீண்டும் தெய்வப் பெண்ணாக சென்று தன்னை வழிபடுபவர்களுக்கு அருள் மழை பொழிபவள். அவளுடைய அவதாரம் எமக்கு நல்ல படிப்பினை யையூட்டுகின்றது. அநீதி வழியில் நடந்த பாண்டியனையும் அவனது செயலுக்கு ஒத்து ஊதியவர்களையும் அழிக்கின்றாள். தனக்கு உதவி புரிந்த இடைச்சேரி மக்களுக்கு அருள் புரிகின்றாள். எனவே நாம் தர்மத்தின் வழியில் நடக்க வேண்டும். அவளை சிரம் தாழ்த்தி வணங்க வேண்டும். அப்பொழுதுதான் அவளின் கருணை எமக்கு கிடைக்கும்.

எமது குறைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுகின்றவள் இதனால் எமது வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது கண்ணகி வழிபாடாகும். கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடைய கண்ணகி தோற்றம் காவியங்கள், கண்ணகி வழிபாட்டு முறைகள் சடங்கு தொடர்பான கும்மி, கோலாட்டம், காவடிச்சிந்து, வசந்தன் கூத்து பாடல்களையும் இந்நூல் விபரித்துள்ளது.

கடந்த ஒன்பது வருடங்களாக ஆலய வருடாந்த திருச்சடங்கு பற்றிய பிரசுரம் வெளியிட முயற்சி செய்தேன் முடியவில்லை. காரணம் குடிகளின் பெயர்கள் அக்காலத்தில் கூறப்பட்ட பெயர்களுக்கும் இக்காலத்தில் கூறப்படுகின்ற பெயர்களுக்குமிடையே வேறுபாடு காணப்படுவதாகும். ஆனால் தம்பி ரகுபதி அவர்கள் ஊர் பிரமுகர்களின் வாய்மொழி மூல தகவல்கள் அடிப்படையில் இந்நூல் தொகுக்கப்பட்டு நிருவாக சபையினரின் அங்கீகாரத்துடன் வெளியிடுவதால் எதிர்காலத்தில் பிரசுரம் வெளியிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியமையால் அவருக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் தலைவராக இருக்கும் காலப்பகுதியில் இந்நூல் வெளியிடுவதனால் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவருக்கும் கண்ணகித்தாயின் ஆசியினை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.மா.சுந்தரலிங்கம்**
தலைவர்,
ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலனசபை,
எருவில்.

# வாழ்த்துரை

கற்புக்கரசி கண்ணகியின் வரலாறு பற்றியும், இலங்கை திரு நாட்டிலே கற்புக்கரசி கண்ணகியின் வழிபாடு யாரால் எப்போ கொண்டு வரப்பபட்டது என்பது பற்றியும், கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது பற்றியும் இந்த வரிசையில் எருவில் கிராமத்தில் சுமார் 300 வருடங்களுக்கு முன்னர் அமையப் பெற்ற கண்ணகியம்மன் ஆலயத்தில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சடங்கு முறைகள், உற்சவ காலத்தில் தொடர்ந்து நடைபெறும் பூசை முறைகள் திருச்சடங்கு காலத்தில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபு விதிமுறைகள் பற்றியும், கண்ணகி வழக்குரை காவியம், ஊர்சுற்றுக் காவியம் ஆகியவைகள் அச்சுப் பிரதியாக்கப்பட்டு உள்ளடக்கப்பட்ட இந்த நூலினை எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரனையுடனும் ஆசியுடனும் இந்த நூலின் ஆசிரியர் திரு.சந்திரப்பிள்ளை ரகுபதி ஆசிரியர் அவர்கள் அமரத்துவம் அடைந்தவர்களான சின்னவப்போடி உடையார் மாணிக்கப்போடி தோம்புதோர் ஆகியவர்களுக்கு சமர்ப்பணமாக வெளியிடுவதை இட்டு கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினராகிய நாங்கள் எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்**
**ஆலய பரிபாலன சபையினர்**
**எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்**
**எருவில்.**

# வெளியீட்டுரை

எமது கண்ணகியம்மன் ஆலயம் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இவ்வாலயத்திற்குரிய காவியங்கள் ஏட்டுருவில் காணப்பட்டன. அவை குறிப்பிட்ட சிலரிடமே இருந்தன. இதனால் காவியம் பாடுவதற்கு பலர் முன்வருவதில்லை. இதனைப் போக்குவதற்காக கடந்த 2001ல் வழக்குரைக் காவியம், ஊர்சுற்றுக் காவியம் Y.U.K யின் வெளியீடாக, திரு. ச.ரகுபதி (ஸ்தாபகர், உதயநிலா) அவர்களினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இப்பொழுது சுமார் பதினான்கு வருடங்களின் பின் பலருடைய வேண்டுகோளின்படி இக்காவியங்களுடன் கண்ணகி வரலாறு சடங்கு முறைகள் தொடர்பான கும்மிகள், கோலாட்டம், காவடிச்சிந்து, வசந்தன் கூத்து போன்ற பாடல்களும் தொகுக்கப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம் அமைந்திட வழிசமைத்த சின்னவப்போடி உடையார், மாணிக்கப்போடி தோம்புதோர் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்துள்ளது சிறப்பம்சமாகும். சின்னவப்போடி உடையார் வம்சத்தைச் சேர்ந்த நாங்கள் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இறுதியாக இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எங்களின் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு.சி.சத்தியநாதன்** (அதிபர்)
தலைவர் கோப்பிகுல
ஒன்றியம்
எருவில்

எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபையினரின் அங்கீகாரத்துடன் இந்நூல் வெளியிடப்படுகின்றது

# காவிய நாயகியின் வரலாறு

சோழப் பெருமன்னன் கரிகால்வளவன் ஆட்சிக்காலத்தில் பூம்புகார் நகரில் மாசாத்துவான் எனும் வணிகன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு பிள்ளைப் பேறு இல்லாதது பெருங்குறைபாடாகும். இறையருளால் ஆண் குழந்தை கிடைத்தது. அக்குழந்தைக்கு கோவலன் என பெயரிட்டான்.

பாண்டிய நாட்டிலே பாண்டிய அரசனுக்கு மூன்று கண்கள் இருந்தன. அதனால் அரசன் தான் சிவனுக்கு நிகரானவனென்று கர்வம் கொண்டான் அக்கண்களிலொன்றை மாற்ற வேண்டுமென உமாதேவியார் விரும்பினார். அதை சிவனிடம் கூறினார். சிவன் வகுத்த திட்டப்படி உமை பரராசமுனிவரின் மகளாக பிறந்தாள். அம்மகளே மதுரையில் அரசனின் அரண்மனையில் மாங்கனியாக மாறியது. அம்மாங்கனி நறுமணம் வீசியது. அரசனிடம் காவலாளிகள் அவ்விடயத்தைக் கூறினார்கள். அம்மாங்கனியைப் பறித்துக் கொண்டு வருமாறு அரசன் கட்டளையிட்டான். அம்மாங்கனி யாருடைய கண்களுக்கும் தென்படவில்லை. தானே பறிப்பதாக அரசன் மரத்தடிக்கு வந்து பார்த்து அதை எவ்வாறு பறிப்பது என யோசித்த வேளையில், அவ்வழியே தவசியொருவர் வந்தார். இம்மாங்கனி பற்றி பரராசமுனிவர் தன்னிடம் கூறியுள்ளார் எனக் கூறிவிட்டு தம்பையிலிருந்த அம்பையும், வில்லையும் எடுத்து மாங்கனிக்கு குறிவைத்தார். அம்பு மாங்கனியை அறுத்துவிட்டு மீண்டும் தவசியின் கைக்கு வந்துவிட்டது. ஆனால் மாங்கனியோ நிலத்தில் விழாமல் அந்தரத்தில் நின்று கொண்டிருந்தது. அதுகண்ட தவசி அரசன் தன் கைகளை நீட்டினால் அக்கனி வந்து விழும் என கூறிச் சென்றார். அரசன் தன் கைகளைக் கழுவிக் கொண்டு கைகளை நீட்டினான். அப்போது மாங்கனி அக்கினிப் பிளம்பாக கையில் வந்து விழுந்தது. அரசன் பதைபதைத்து, அதைக் கீழே போட்டுவிட்டுத் தன் கைகளால் நெற்றி வியர்வையைத்துடைத்தான்.

மாங்கனிபட்ட கைபடவே அவனது நெற்றியிலிருந்த கண்ணும் துடைபட்டு மறைந்துபோயிற்று அதைக்கண்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

அரசன் வேதியர்களை அழைத்து ஆலோசனை கேட்டான். வேதியர்களின் ஆலோசனைப்படி, பாண்டிமாதேவியிடம் மாங்கனி கொடுக்கப்பட்டது. அவள் ஒரு பொற்குடத்திலே இட்டாள் மூன்றாம் நாள் மாங்கனி பிள்ளையாக மாறியது. சோதிடர்களின் ஆலோசனைப்படி பேழையொன்று செய்து பிள்ளையை அதில் வைத்து கடலில் இட்டனர். அப்பேழை காவிரிப்பூம்பட்டணத்தை அடைந்தது. அக்கடற்கரையில் மானாகன் மாசாத்துவான் எனும் வணிகர்கள் நடந்து கொண்டிருந்தனர் அப்பேழையைக் கண்டனர். பேழையை திறந்து பார்த்தனர். அழகிய பெண் குழந்தை இருந்தது. தாங்கள் கூறியதற்கேற்ப மனாகர் குழந்தையை எடுத்துக் கொண்டார். தனது ஆண் குழந்தைக்கு இப்பிள்ளையைத் திருமணம் முடித்து வைக்க வேண்டுமென மாசாத்துவர் கூறினார். இதற்கு மானாகர் சம்மதித்தார்.

கோவலன் பதினாறு வயதடைந்தான். கலையுணர்வும், வறியவர்களுக்கு உதவும் நற்பண்புமிக்கவனாக வாழ்ந்தான். மானாகன் தன் மகளுக்கு கண்ணகி என பெயரிட்டான். திருமகள் போன்ற அழகும் பெண்கள் போற்றும் பெருங் குணச்சிறப்பும் கற்புத்திறனும் கொண்டவளாக காணப்பட்டாள். 12 வயதை அடைந்தாள் இரு வீட்டாரின் சம்மதத்துடன் திருமணம் நடந்தேறியது. திருமணத்தால் ஒன்றுபட்ட கோவலனும் கண்ணகியும் மனையறம் பூண்டு சில ஆண்டுகள் அவர்களின் இல்வாழ்வும் இன்பமுடனேயே கழிந்தது. அவர்கள் தனிக் குடும்பமாக வாழத் தொடங்கினர். இல்லறவாழ்வின் பயனாக அமையும் குழந்தைச்செல்வம் அவர்களுக்கு கிடைக்கவில்லை

இருவரும் அன்புமொழி பேசி சங்கமமாகின்ற வேளையில் இருவருக்குமிடையில் அக்கினிச் சுவாலை தோன்றி அணுகமுடியாமல் தடுக்கிறது. தான் யார் என்பதையும் வந்த நோக்கத்தையும் கண்ணகி எடுத்துக் கூறுகின்றாள். எமக்குள் எந்தவித உறவும் கிடையாது எனவும், நீங்கள் விரும்பிய பெண்ணுடன் பொருள் கொடுத்து புணர்ந்து மகிழவும் என கண்ணகி கூறுகிறாள். கோவலன் மாதவியை நாடிச்செல்ல கண்ணகியும் காரணமாக அமைகின்றாள். என சிலம்பு கூறுதல் எனும் இலக்கியம் கூறுகிறது.

இவ்வேளையில் மாதவி என்னும் ஆடல்மகள் சோழன் முன்னர் தன் நாட்டியத்திறன் எல்லாம் தோன்ற ஆடிக்காட்டினாள். அவள் ஆடலைக் கண்டு மகிழ்ந்த சோழ மன்னன். தனது பொன்னரி மாலையையும், "தலைக்கோலி" என்ற பட்டத்தையும் மாதவிக்கு வழங்கினான். 1008 கழஞ்சுப்பொன்னை ஒரு நாள் முறையாகப் பெற்றாள். மாதவியின் தாய் சித்திராபதி தனது மகளின் மாலையை 1008 பொற் கழஞ்சு கொடுத்து வாங்குவோருக்கு மணம்முடித்துக் கொடுப்பதாக கூனிமூலம் செய்தி அனுப்புகின்றாள். நகரத்து இளைஞர்கள் பலரும் திரிந்து கொண்டிருக்கின்ற பெருந்தெருவிலே கூனி மாதவியின் மாலையை விலை கூறினாள் கோவலன் அதற்குரிய ஆயிரம் பொன்னையும் கொடுத்து வாங்கினான். கோவலன் மாதவியுடன் சென்றான். தன் வீட்டையும் கண்ணகியையும் அறவே மறந்து மாதவியின் வீட்டிலேயே தங்கினான். அவ்வேளையில் இந்திர விழா நடைபெற்றது. அதில் மாதவியின் பதினொருவகையான ஆடல்கள் இடம் பெற்றன. பின்னர் கோவலனும், மாதவியும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கே கோவலனும் மாதவியும் யாழிசையுடன் சேர்ந்து கானல் வரிப்பாடல்களைப் பாடுகின்றனர்.மாதவி பாடிய கானல்வரி பாடல் கேட்டு மனம்மாறி கோவலன் மாதவியை வெறுக்கின்றான். இறுதியிலே கோவலனின் மனம் மாறுகின்றது. அவனுடைய ஊழ்வினை சினந்து வந்து அவன்பாற் சேரத்தொடங்கிற்று. கோவலன் மாதவியுடன் செல்லாது தனியாகவே சென்று விட்டான்.

கோவலனின் பிரிவாலே துயரடைந்த மாதவி தன் தோழி வசந்த மாலையைத் தூது அனுப்பினாள் தன் பால் வந்த தூதினை கோவலன் மறுத்தான்.

ஆடை அணிகலங்கள் அனைத்தும் இழந்து ஆத்தி நாரினால் அமைந்த கோவணத்துடன் நடை மெலிந்து பூம்புகார் திரும்பிக் கண்ணகியின் வீடு செல்ல முடியாமல் கூசி ஆல மரத்தடியில் இருக்கிறான். கண்ணகி இதைக் கேள்விப்படுகிறாள் உடனே நல்ல வேட்டி, சால்வை, தலைப்பாகை அணிகலன்கள் ஆகியவற்றோடு முத்துப்பல்லாக்கையும் அனுப்புகிறாள்.

கோவலன் கண்ணகியிடம் மீண்டும் வந்தான். தன் மனைவியின் வாடிய மேனியும் வருத்தமும் கண்டான். தன் குலத்தவர் தந்த மலை போலும் பெரிய பொருட்குவைகள் எல்லாமே தொலைந்து போயின. நான் வாழ்வதற்கு பொருட் செல்வம் இல்லையே எனும் ஏக்கத்தை வெளியிட்டான். கண்ணகியேதன் திருமுகத்திலே முறுவலினைக்காட்டி "சிலம்புகள் உள்ளன எடுத்துக் கொள்ளும்" என்றாள். இருவரும் பொழுது விடியுமுன் வீட்டை விட்டு மதுரை நோக்கிப் பயணமாயினர். கோவலனும், கண்ணகியும் கவுந்தியடிகளுடன் பயணத்தைத் தொடர்ந்தனர் போகும் வழியிலே கானுறை தெய்வம் வசந்தமாலையின் வடிவிலே தோன்றினாள், மாதவியின் பேரிலுள்ள காதலினால் இவன் நமக்கு இசைவான் என்று கருதியது. மாதவி பற்றிக் கூறியது. அக்காட்டில் மயக்கும் தெய்வம் உள்ளது என்பதை முன்கூட்டியே கோவலன் அறிந்து கொண்டான் இதனால் எதற்கும் செவி சாய்க்கவில்லை. அவ்வுருவம் உண்மையை எடுத்துகூறி மறைந்துவிட்டது. மூவரும் இளைப்பாறினர். அங்கே சாலினி தெய்வமேற்று, கண்ணகி வாழ்வின் பின் நிகழ்வுகளைக் கூறியது. மூவரும் தொடர்ந்து பயணித்தனர். அப்பொழுது கௌசிகன் என்பவன் மாதவியின் ஓலையுடன் வந்தான். மாதவியின் துன்ப துயரத்தைக் கூறுகின்றான். அவனின் சொல்லை ஏற்கவில்லை. அவ்வோலையை மாதவியின் பெற்றோரிடம் கொடுக்கும்படி கூறி நடைபயணத்தைத் தொடர்ந்தனர்.

புறஞ்சிறை மூதூரிலே கவுந்தியடிகளையும் கண்ணகியையும் தங்கியிருக்க வைத்துவிட்டுக் கோவலன் மதுரை நகருக்குச் சென்று பல இடங்களை பார்வையிடுகின்றான். வழியிலே மாதரி என்பவளை சந்திக்கின்றனர். அவள் அவர்கள் தங்குவதற்கு வீடு கொடுக்கின்றாள். உணவு சமைத்து உண்கின்றனர். கோவலன் வணிகம் செய்வதற்காக நாகமணிச் சிலம்பை விற்க தீர்மானித்தனர். அதை கழற்ற பல்லி கத்தியது மேகம் கறுத்துத் திரண்டது. காகங்களின் கூட்டம் நிறைந்தது. இவை எல்லாம் சகுணமே ஆனால் கோவலன் விற்கச் செல்கின்றான். வஞ்சகப் பொற் கொல்லனின் சூழ்ச்சியால் மன்னனது ஆணைப்படி கொலை செய்யப்படுகின்றான். நடந்த சம்பவத்தை கனவின் மூலம் கண்ணகியறிகிறாள். அக்கனவை ஆய்ச்சியருக்குக் கூறுகிறாள். கொலையுண்டமையைக் கேட்டுக் கொதித்த கண்ணகி "காய் கதிர் செல்வனே கள்வனோ என் கணவன்" எனக் கேட்க சூரியனும் "உன்

கணவன் கள்வன் அல்லன். கள்வன் என்று சொன்ன இந்த ஊரினை "பெருந் தீ உண்ணப்போகின்றது" என அசரீதி கேட்டது. தான் அரசனையும் மதுரையையும் அழித்துத் தட்டானின் இரத்தம் குடிப்பேன் என சபதமிடுகின்றாள்.

கண்ணகி இறந்த கணவனைக் கண்டாள் நான் "பத்தினியாகில் நீ உடனே உயிர் பெற்று எழுந்திருத்தல் வேண்டும்" என்றாள் கோபலனை உயிர் பெறச் செய்கின்றாள் நடந்ததைக் கேட்டறிகின்றாள் பின் அரச சபைக்கு சென்றாள் பாண்டியன் முன் நின்றாள் "பழி முடிப்பேன்" என்றாள். கோவலனைக் கொன்றது குற்றமே என்றாள். கோவலனிடம் பறித்த சிலம்பைக் கொண்டு வா என்றாள் "கோதை சொற்கேட்கும் கொற்றவன் நானில்லை" என்றான் கண்ணகி உடனே "அன்றெனக்கு மணமுடிக்க வையர் செய்து காலிலிட்ட நன்று நாகமணிச்சிலம்பே நற்சபையில் வருவாயே" என அழைத்தாள் குரல் கேட்ட சிலம்பு பெட்டியுள் இருந்து நகைத்தது கலகலத்தது பூட்டைஉடைத்தது புறப்பட்டுவந்தது "எச்சிற்பட்ட சிலம்பே என்கிட்டே வராதே எட்டநில்" என இயம்பினாள். சிலம்பு அப்படியே நின்றது அவையோர் அது கண்டு அஞ்சினர்.

அரச சபையில் தட்டானைப் பார்த்து அரசியின் சேதமுற்ற காற்சிலம்பை பழுது பார்ப்பதற்கு உன் வீட்டுக்குக் கொண்டு சென்றாய். சிலம்பிற்கு வெண்காரம் பூசப்பட்டு சுவரில் வைக்கப்பட்டிருந்த சிலம்பை கருடன் தூக்கிச் சென்றது எனக் கூறினாள். தட்டான் ஏளனமாக சிரித்தான். காற்சிலம்பை கருடன் தூக்குவதா? என்று கூறினான். கண்ணகி அங்கு நடந்த சம்பவத்தை விபரிக்கின்றாள். உன் மனைவி வீட்டின் பின்புறத்தில் கீரை பறிக்கச் சென்ற போது காலில் காரை முள்குத்துகிறது கருடனின் கூட்டிலிருந்துதான் முள் வந்தது என உன்னிடம் கூறுகிறாள் நீ கூட்டைக் கலைக்கிறாய் உனது பிள்ளைகள் முட்டைகளை உடைத்து குஞ்சுகளை கொன்று விடுகின்றார்கள். இரை தேடச் சென்ற கருடன் தான் குஞ்சுகளுக்கு நேர்ந்த கதியை நினைத்து கவலையுறுகின்றது. இதனால் சிலம்பைத் தூக்கிச் சென்றது என கூறினாள். கருடனை நினைத்து உடனே சிலம்பைக் கொண்டுவா? என நினைத்தாள் உடனே சிலம்பை கருடன் அரசசபையில் கொண்டு போட்டது. எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். மேலும் பாண்டியனே கொடியதட்டான் சொற்கேட்டு

தீரவிசாரியாது எனது கணவனின் உடலைப் பிளந்தாயே அந்த பழிக்கு எனக்கு ஈடு செய்வாயா? என வினாத்தொடுக்கிறாள்? பாண்டியன் அநீதி இழைத்தவன் என்பதை ஏற்கவைக்கிறாள். பாண்டியனும் அரசியும் இறக்கின்றார்கள்.

அரண்மனையைவிட்டு வெளியே வந்த கண்ணகி என் கணவனை நியாயமற்ற முறையில் கொன்றதால் இந்த பாண்டியன் மீது மட்டுமல்லாது இந்த மதுரை மாநகரத்தின் மீதும் கோபம் கொண்டுள்ளேன் நகரினை மூன்றுமுறை வலம் வந்து தனது இடது முலையை திரிகிப் பெயர்த்து வீதியில் சபித்து எறிந்தாள் அக்னி தேவனிடம் அந்தணர் அரவோர், பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழந்தைகள், நோயாளிகள் என்போரை விட்டு விடு எனக் கூறினாள். அக்கினி தேவன் அந்தணர் உருவில் வந்து செந்தழல் கொணர்ந்து எரியூட்டினான். காவல் தெய்வங்கள் அந்நகரைவிட்டு நீங்கின. மதுரையை தீயுண்டது. கணவனை இழந்துவிட்ட பிரிவுத்துயரோடு உள்ளம் கொதித்து, தெருக்களிலே கால்போன இடமெல்லாம் அவள் சுழன்று திரிந்தாள். குறுந்தெருக்களிலே கவலையுடன் நிற்பாள், மயங்கி செயலிழந்து மயக்கமுற்றாள் கண்ணகியின் சீற்றம் குறையவில்லை. பின்னர் இடைச்சேரி செல்கின்றாள். கண்ணகியின் அகோரம் போக்க குடை பிடிக்கின்றனர். சாமரை வீசுகின்றனர். குளிர்ச்சி பொருந்திய பன்னீர், புனுகு வாசனை மிகுந்த சந்தணக் குழம்பு, கஸ்தூரி முதலியவற்றை வீசுகின்றனர். வெண்ணை கொண்டு வந்து அப்பி இரத்தப் பெருக்கை நிறுத்தினர் பறைச்சியர் புதிய துணியும் பஞ்சும் கொண்டு வந்து அம்மையின் உடலிற்கு பூசி வெம்மையைக் குறைத்தனர். வெண் பஞ்சை, அழுத்தி இரத்தப் போக்கைக் தடுத்தனர் கண்ணகியின் கோபம் தணிப்பதற்காகவே இடையர் குலத்தினர் கொம்பு முறி விளையாட்டினையும். வசந்தன் கூத்தினையும் ஆடினர். குளிர்த்திப் பாடல்களையும் பாடினர். இதனால் அம்மை சினந்தணிந்து மதுரையை எரிக்கின்ற அக்கினியை நோக்கி

"இச்சேரி அழிந்தாலும் - இடைச்சேரியை எரிக்காதே
பட்சேரி எரிக்கினும் நீ - பறைச்சேரி எரிக்காதே"

எனக் கூறிய போது இச்சேரிகளைத் தவிர்த்து ஏனையவற்றையெல்லாம் அக்கினி பற்றியழித்தது. என்னவரம் வேண்டுமெனக் கேட்கிறாள். மதுரைநகர் எரிந்து கொண்டிருக்கிறது. அக்கினியை தணிக்க அருள்மழை பொழிய வேண்டுமென கூறினர். உடனே சப்த மேகங்களை நினைத்ததும் மழை பொழிந்தது. அக்கினி தணிந்தது என இச்சம்பவத்தை சிலம்பு கூறல் குறிப்பிடுகின்றது.

ஆனால் கண்ணகி வழக்குரையில் நகரினை மூன்று முறை வலம் வந்து தன் இடதுமுலையை திருகிப் பெயர்த்து வீதியில் சபித்து எறிந்தாள்.

ஆயர்சேரி சென்றாள் கண்ணகியின் கோபத்தைத் தணிப்பதற்காக பலவாறு தேற்றினார்கள் கண்ணகி உள்ளம் குளிர்ச்சியடைந்து மழை பொழிந்தது.

கண்ணகி மலர்கள் நிறைந்த ஒரு வேங்கை மர நிழலில் நின்ற போது மதுரா புரித் தெய்வம் தோன்றி. முற்பிறப்புக் கதைபற்றிக் கூறத் தொடங்கியது.

# கோவலன் கண்ணகி முற்பிறப்புக் கதை

## பெரிய எழுத்துக் கோவலன் கதை எனும் இலக்கியத்திலிருந்து.

மதுரையில் வாழ்ந்த மலையரசன் எனும் வணிகனுக்கு நான்கு மைந்தர்கள். அதில் மூவர் முதல் தாரத்திற்கும், மற்றையவன் இளைய தாரத்திற்கும் பிறந்தவன். மலையரசன் தன் சொத்தை இரண்டாகப் பிரித்தான் ஒரு பகுதியை முதல்தார பிள்ளைகளுக்கும் அடுத்த பகுதியை இரண்டாம் தார மகனுக்கும் கொடுக்கின்றான் இளைய தாரத்தின் மகன் எண்ணெய் விற்கின்றான். பாண்டிய நாட்டு மன்னனுக்கு பிள்ளைப் பேறு இல்லை இதனால் அங்குள்ள காளிகோயிலை பூட்டி விடுகின்றான். இக்கோயிலைத் திறந்து விளக்கேற்றுபவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என கட்டளை பிறப்பிக்கின்றான். வணிகன் தனது எண்ணெய் முழுவதும் விற்றால் கோயிலுக்கு விளக்கேற்றுவதாக நேர்கடன் வைக்கிறான். எண்ணை முழுவதும் விற்கப்படுகின்றது. தனது நேர்கடனை செலுத்துகின்றான் இதனை கேள்வி உற்ற மன்னன். காளியின் முன் வணிகனின் தலையை துண்டிக்கின்றான்.

அவனது தலை காளியின் மடிமீது வீழ்ந்து நியாயம் கேட்கின்றது. அதற்காக மன்னனை பழிவாங்குவதாகக் கூறி காளி உயிர் துறக்கிறாள் வணிகனின் மனைவியான (ஊர்வசி) அவன்மேல் விழுந்து உயிர் துறக்கிறாள். மூவருடைய உயிர்களையும் சொக்கநாதர் சிமிழில் வைத்து அடைக்கிறார். காவிரிப் பூம்பட்டினத்தில் முத்துச் செட்டி எனும் வணிகனின் மனைவியான வர்ணமாலை பிள்ளை வரம் கேட்டு தவமிருந்த போது வணிகனின் (ஜயந்தனின்) உயிரை அவளது கருவில் உருவாக்கச் செய்தார். சொக்கநாதர் அவ்வாறு பிறந்தவரே கோவலன் எனவும், பாண்டிமாதேவி பிள்ளைவரம் வேண்டி தவமிருந்த போது காளியின் உயிரை எலுமிச்சங்கனியாக்கி அவனுக்கு சொக்க நாதர் கொடுக்க அதனையுண்டு கர்ப்பம் தரித்து பெண்பிள்ளை பெற்றாள் அக்குழந்தையே கண்ணகி எனவும் அவளின் வலது காலில் செஞ்சிலம்பும், இடதுகையில் செப்பேடும், கழுத்திலே பூமாலையும் கொண்டு கன்னம் வழியாக பிறந்தமையால், சோதிடர்களின் ஆலோசனைக்கேற்ப குழந்தை பேழையில் வைத்து கங்கையில் விடப்பட்டது அப்பேழை காவேரிப் பூம்பட்டணத்தை அடைந்தது பேழையில் இருந்த பிள்ளையை மாநாகன் எடுத்து வளர்க்கின்றான்

எனவும், கடையூரில் வசிக்கும் தேவதாசியான வசந்தமாலை பிள்ளைவரம் கேட்டு தவமிருந்த போது முன்பு வணிகனுடன் உயிர் நீர்த்த வணிச்சியின் உயிரை சொர்க்கநாதர் எலுமிச்சங்கனியாக்கிக் கொடுக்க அதனையுண்ணும் வசந்தமாலைக்குப் பெண்குழந்தை பிறக்கின்றது. அக்குழந்தையே மாதவி எனவும். கூறுகின்றாள் ஊழ்வினைப்பயனே இவ்வாறு நிகழ்ந்தது எனக் கூறுகின்றாள் (இக்கதை பெரிய எழுத்து கோவலன் கதை எனும் இலக்கியம் குறிப்பிடுகின்றது. இதனை புகழேந்திப் புலவர் இயற்றியுள்ளார்)

**சிலப்பதிகாரம் எனும் இலக்கியத்திலிருந்து**

கலிங்க நாட்டிலே வேற்படைகொண்ட வசு என்பவன் சிங்கபுரத்தையும் குமரன் என்பவன் மூங்கில் காடுகள் நிறைந்த கபில புரத்தையும் அரசாட்சி புரிந்தனர். இரு மன்னர்களுக்கும் பகைமை காணப்பட்டது. அச்சமயம் பொருளீட்டும் நோக்குடன் பெரும் பொருளைச் சுமந்து கொண்டு எவரும் அறியாதவகையில் சங்கமன் என்பவன் தன் மனைவியோடு கபிலபுரத்தைவிட்டு சிங்கபுரத்தின் கடைவீதியில் உள்ள கடையில் நகை விற்றுக்கொண்டு வந்தான். இவன் பகை நாட்டு ஒற்றன் என பரதன் என்பவன் குற்றம் சுமத்துகிறான். சங்கமன் அரச தண்டனை பெறுகின்றான். இப்பிறப்பில் கோவலனே அப்பிறப்பில் பரதன் என பெயர் பெற்றிருந்தான். சங்கமனது மனைவி நீலி என்பவள். பெருஞ்சினம் கொண்டு கதறியழுது ஊரைக் கூட்டி இச்செயல்முறை தகுமோ எனக் கேட்டாள். 14 நாட்கள் திரிந்தலைந்து ஒரு மலை உச்சியை அடைந்து உயிர் துறந்தாள். தான் அடைந்த துயரத்தை தனக்கு துயர்விளைவித்தவனும் அடைய வேண்டுமென சாபமிட்டாள். அச்சாபமே இப்பிறப்பில் கோவலன் கொலைவாய்ப்படுவதற்கு காரணமென கூறப்படுகின்றது. சங்கமன் பொற்கொல்லனாகவும், வசு என்பவன் பாண்டியனாகவும் பரதன் கோவலனாகவும் பிறக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

**சிலம்பு கூறல் எனும் இலக்கியத்திலிருந்து**

குழந்தைப் பேறில்லாத பாண்டிய மன்னன் சிவனைக் குறித்துத் தவமிருக்கின்றான். தவத்தைமெச்சிய சிவபெருமான் உமையம்மையோடு காட்சியளித்து பாண்டியன் கோரிக்கைக்குப் பெண்குழந்தையைக் கொடுப்பதாகத் திருவாய் மலருகின்றார். மகிழ்ச்சியடைந்த மன்னன் முதலில் சிவபெருமானது பாதத்தில் வீழ்ந்து வணங்கியதன் பின்னர் உமை அம்மையார் கால்களிலும் வீழ்ந்து வணங்கிவிட்டு எழுகின்ற வேளையில் காற்றடித்ததால் மேற்சேலை விலக அம்பிகையின் மார்பு அவன் கண்ணில் பட்டது. அதைப்பார்த்ததும் சிறிது சிந்தை தடுமாறுகின்றான். அன்னை வெகுண்டாள் பாண்டியனுக்கு மகளாகப் பிறந்து அவனைத் தண்டிக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்றாள். இவனது பிழையான சிந்தையால் அம்மை கோபம் கொண்டதையும் பின்னர் பாண்டியன் சிவபெருமானது அருள் பெற்றாலும் அம்மையின் கோபக் கனல் இரண்டு பொறியாக மாமரத்தில் இரண்டு பூவாக விழுகின்றன.

அவ்வாறு மாமரத்தில் பூவாக விழுந்த பொறிகள் இரண்டும் வடுவாகி, காயாகி, மாங்கனியாக விழுகின்றன. நன்றாகப் பழுத்ததைச் சுந்தரேஸ்வரருக்கு நிவேதித்த பாண்டியன் செங்காயாக இருந்த மற்றையதைக் குடத்திலே வைத்து மூடிவிடுகின்றான். பின்னர் குடத்தைத் திறந்து பார்த்தபோது அழகிய பெண்குழந்தை ஒன்று காலில் நாகமணிப் பொற்சிலம்புடன் இருக்க கண்டு மகிழ்ந்தான். தூக்கி அரவணைத்து மனைவியிடங்கொடுத்தான்.

அரசி பிள்ளையை வாங்கி அன்புடன் முத்தமிடும் போது அவளது ஸ்தனத்தில் இருந்து பால்பீறிட்டுப் பாய்கின்றது. அதனைக் குழந்தைக்கு ஊட்ட முயன்றபோது பல்லி சொல்கின்றது. காகங்கள் கூட்டமாகக் கூடிக்கரைகின்றன. வைத்திருந்த கும்பமொன்று வெடித்துவிடுகின்றது. ஆகாயத்தில் இடியும் மின்னலும் தோன்றுகின்றது. இத்தகைய துர்நிமித்தங்களைக் கண்டுகலங்கிய அரசி இக்குழந்தை காரணமாகவே துர்ச்சகுணங்கள் தோன்றுகின்றன என்று மன்னனுக்குக் கூற மன்னனும்

தமக்கு இறைவன் குழந்தைவரம் கொடுத்த போது இறைவியிட்ட சாபத்தைக் கூறிப் பின்னர் மாங்கனியில் இருந்து பெண்குழந்தை தோன்றியதையும் அரசிக்கு எடுத்துக் கூறுகின்றான்.

அதெல்லாம் அன்னையின் செயலென்று அரசி கூறிப் பலவித தானங்களை வழங்கிக் குழந்தையை தொட்டிலில் இடுகின்றனர். அன்றிரவு இருவரும் கனவு காண்கின்றனர். அரசனுக்குத் தீராதநோய்வந்து சேர அதற்கான மருந்து காட்டிலுள்ள ஒரு மூலிகை என்று வைத்தியர் கூறி அது இருக்கும் இடத்தின் அடையாளம் கூற அரசன் அங்கு செல்லும் போது மாதா தோன்றி வந்திருக்கும் காரணம் கேட்டறிந்து இத்துடன் கொடிய பிணி நீங்கிவிடும் என்று கூறினாள். தன்னுடலைப் பார்த்த மன்னன் அது மாறித் தன்னுடல் அழகாக விளங்குவதைக் கண்டு மகிழ்ந்தான் மாதாவின் அழகிய வடிவத்தைக் கொண்ட அன்னை மீது மோகம் கொள்கின்றான்.

நிலவுமுகம் நெருப்புமுகமாக மாறுகின்றது. கழுத்து மாலையைக் கழற்றிவிட்டு மறைந்துவிடுகின்றாள். அந்த மாலையை எடுத்த மன்னன் தனது மனைவியின் கழுத்தில் போடுகின்றான் போட்டமாலை நாகபாம்பாக மாறுகின்றது. அதனைக் கண்டு பயந்த பாண்டியன் கண்விழிக்கின்றான். கனவு கலைந்துவிடுகின்றது. இந்தக் கனவைப் பாண்டியன் கூற பாண்டிமாதேவி தான் கண்ட கனவைக் கூறினாள். இக்குழந்தையால் தீங்குவரும் என்று பலர் கூற மதுரை நகர சோதிடர்கள் வரவழைக்கப்படுகின்றார்கள். எல்லோரும் இக்குழந்தை அரசனுக்கு ஆகாது, இந்த நாட்டுக்கு ஆகாது என்று கூறினர். அவர்களது ஆலோசனைப்படி அழகிய பேழையிலே வைத்து குழந்தையைக் கடலில் விடுவதாகக் கூறப்படுகிறது . இது முற்பிறப்புக் கதையாகும்.

முற்பிறப்புக் கதையினை எடுத்துக் கூறிய மதுராபுரித் தெய்வம் "உன் கணவன் கோவலனை 14ம் நாள் பகற் பொழுது கழிந்தபின்னர் வானோர்களின் வடிவில் காண்பதல்லாது மக்கள் வடிவில் இனி காண முடியாது என்று சொல்லிய பின்னர் அத்தெய்வம் மதுராமா நகரைப்பற்றிய நெருப்பை அணைத்துவிட்டுச் சென்றது.

வேங்கை மரத்தடியில் நின்ற கண்ணகி "என் உள்ளத்தில் நிறைந்த கணவனைக் கண்டபின் அல்லாது ஓரிடத்தில் இருக்க மாட்டேன்" என்று கூறிக் கொண்டு கொற்றவைக் கோயிலுக்குச் சென்று தன் பொன் வளையல்களை உடைத்தாள். கால் போன போக்கில் நடந்து திரிந்தாள். இவற்றையெல்லாம் அவதானித்த குறக்குடியினர் ஒரு முலையிழந்தவளாக விரித்த கூந்தலுடனும் வெஞ்சினம் கொண்ட பார்வையில் விளங்கும் உங்களைக் கண்டு எங்கள் மனம் நடுங்குகின்றது. நீங்கள் யாரோ? உங்கள் வரலாறு என்ன? கூறுங்கள் என்று கேட்டார்கள். கண்ணகி கோபப்படாது தன்வரலாற்றைக் கூறியது. குறக்குடியினர் அவளைப் பணிந்தனர் இரு கைகூப்பித் தொழுதனர் மதுராபதித் தெய்வம் உரைத்தபடியே 14ம் நாள் எல்லையில் பகற்பொழுது கழிந்த பின்னர் தேவர்கள் தோன்றி, பெருமைமிக்க கண்ணகியின் பெரும் பெயரை வாழ்த்தி, வாடாத மலர்களைப் மாரி எனப் பெய்தனர். கணவன் கோபலனுடன் வானவூர்தி ஏறியவளாக விண்ணுலகம் சென்றாள் இக்காட்சியை அங்குள்ள குறவர் குடியினர் கண்டனர்.

"இவள் போலும் ஒரு பெரிய தெய்வம் நம் குலத்திற்கு இதுவரையில் இல்லையெனக்கூறி ஊரவரை எல்லாம் கண்ணகி தெய்வத்திற்கு வழிபாடு செய்ய வருமாறு கூவி அழைத்தனர்.

ஒரு முலை இழந்தவளான கண்ணகியை விரைந்து வந்து வழிபாடு செய்யுங்கள் அவளிடம் இப்பெரிய நாடானது ஓயாது வளம் சுரக்க அருள்வாய் அன்னையே என வேண்டுங்கள் என்றனர்.

அவளைத்தம் குல தெய்வமாகவே கொண்டு வழிபட்டுப் பணிந்து போற்றிக் குறவைக் கூத்தாடினர்.

மலைவளம் காணச்சென்ற சேரன்செங்குட்டுவனிடம் இச்சம்பவத்தைப் பார்த்த குன்றக்குரவர்கள் கூறினர். அவ்விடத்திலிருந்த சாத்தனார் கண்ணகி வழக்குரைத்ததையும் மதுரை தீயுண்டதையும் கூறினார். சேரன் கண்ணகிக்கு கல்நட்டு வழிபட எண்ணினான். செங்குட்டுவன்

இமயத்திலே பத்தினிக்குக் கல்லெடுத்து அக் கல்லிலே படிவம் அமைத்து அதனை முறைப்படி விழாக் கோலத்துடன் தெய்வ மாக்கினான். இவ்விழாவிற்கு ஆரிய மன்னர்களும், சோழ அரசர்களும், மகததேச மன்னர்களும், இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்து சிறப்பித்தனர்.

பத்தினி வழிபாடு கி.பி.2ம் நூற்றாண்டில் சேர மன்னன் செங்குட்டுவனால் தோற்றுவிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் பரவிச் செல்வதைக் காண்கின்றோம். சேர நாட்டில் கொடுங்க;ர் என்ற ஊரில் சேரன்செங்குட்டுவனால் கண்ணகிக்கு பத்தினிக்கோட்டம் அமைக்கப்பட்டது. அவ்விழாவிற்கு இலங்கை மன்னன் கஜபாகு, பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியன், சோழ மன்னன் பெருநெற்கிள்ளி என்பவரும் சமூகம் கொடுத்தனர். இவர்கள் தங்கள் தங்கள் நாடுகளில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைத்து விழா எடுத்தனர். பாண்டிய நாட்டில் மழை குறைந்து பஞ்சம் நிலவியதுடன் வெப்பு நோய்களும் ஏற்பட்டன. இவ்வேளையில் பாண்டியன் வெற்றிவேற் செழியன் கண்ணகிக்கு விழாவெடுத்ததுடன் மழை பெய்து பஞ்சம் நீங்கி செழிக்க நோயும் துன்பமும் நீங்கியதாக உரைபெறு கட்டுரை கூறுகின்றது. சேரன் செங்குட்டுவனினால் நிர்மானிக்கப்பட்ட கண்ணகி கோட்டங்களில் ஒன்றாகிய நெடுங்குன்றத்து மலை (நெடுவேல் குன்றம்) கண்ணகிக் கோட்டத்தை 1ம் ராஜராஜ சோழன் புனரமைத்துள்ளான். சோழர் காலத்தில் அம்மன் பூரணகிரி ஆளுடைய நாச்சியார் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இன்று நெடுங்குன்றம் கண்ணகி கோட்டத்தில் கண்ணகியின் தெய்வீக சிலையில்லாமல் 200 சதுரஅடி கொண்ட அழகிய பீடம் காணப்படுகின்றது. மேலும் சேர நாட்டில் கொடுங்கோ;ர் எனும் இடத்தில் சேரன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகி கோட்டத்தில் கோயில் கொண்டிருக்கும் "பகவதியம்மன் ஒன்றை முலைச்சி அம்மனாக" வழிபட்டு வருகின்றனர். கொங்கு நாட்டில் கருவூரில் அமைந்திருக்கும் வஞ்சியம்மன், வலங்கையம்மன் என்ற இரு கோயில்களிலும் வலங்கையம்மன் கோயில் வழிபாடும் கண்ணகி வழிபாட்டை நினைவுபடுத்துவதாகக் கூறப்படுகின்றது.

சேர நாட்டில் திருவனந்தபுரம் கிழக்கே ஆற்றுக்கால் எனும் ஊராகும். அங்குள்ள பகவதியம்மன் கோயில் கண்ணகியின் அவதாரமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இங்குள்ள கோபுரத்தில் சிலப்பதிகாரக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. மதுரையை எரித்த கண்ணகி கன்னியாகுமரி வழியாக சேரநாடு சென்றதாகவும் ஆற்றுக்காலில் தங்கியதாகவும் கூறப்படுகின்றது. கண்ணகி தன்கைவளையல்களை உடைத்த இடம் செட்டி நாட்டிலுள்ள கீழைக் கோட்டையாகும். இங்கே ஒரு காளி கோயில் உள்ளது. இதுபழைய ஆலயமாகும். மதுரையில் கண்ணகிக்கு செண்பகச் செல்வி என்ற கோயிலுண்டு. இங்குதான் கண்ணகியை பிடாரியம்மன் என்ற கிழவியிடம் கோவலன் செல்வதற்கு முன் விட்டுச் சென்றான். இங்கிருந்துதான் முந்தைய திருவாங்கூருக்கு கண்ணகி புறப்பட்டுச் சென்றாள். எனச் சிலம்பு கூறுகின்றது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கருகிலே செல்வத்தம்மன் என்றழைக்கப்படும் துர்க்கை கோயிலில் ஒற்றைக்கால் சிலம்புடன் காணப்படும் சிலை கண்ணகியின் படிபமாகவே இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவ்வாறு ஒற்றைக்காலில் சிலம்பு பூண்ட சிலையொன்று கங்கை கொண்ட சோழபுரத்து பெருங் கோயிலிலும் காணப்படுகின்றது.

மேலும் சென்னை நகரிலுள்ள திருவொற்றியூரில் அமைந்திருக்கும் சிவாலயத்தில் வடக்கு வீதியிலே ஒரு துர்க்கை கோயில் தனியாகவுள்ளது. இக்காளி கண்ணகியின் மறுவடிவம் எனக் கூறப்படுகின்றது. இக்கோயிலின் விழாவிலே இறுதி நாளன்று கண்ணகி மதுரையை எரித்த நினைவாக பொய்ப் பந்தல் ஒன்று அமைத்து அதனை எரியூட்டுவதும் இக்கோயிலைக் கண்ணகிக்கு உரித்தாக்கின்றது.

சோழர் காலத்தில் முதலாம் ராஜராஜ சோழன் இலங்கையைக் கைப்பற்றி 5ம் மகிந்தனையும், மனைவியையும் சிறைபிடித்து தஞ்சையில் சிறைப்படுத்தியிருந்தான் 5ம் மகிந்தனின் மனைவியின் வேண்டுகோளிற்கு இணங்க தஞ்சைப்பெரிய கோயிலுக்கு சிறிது தூரத்தில் கண்ணகி கோயிலமைத்து விழா ஏற்பாடு செய்தான் எனவும் இக்கோயில் இன்றும் உள்ளது.

சேரன் செங்குட்டுவனினால் தோற்றுவிக்கப்பட்ட கண்ணகி வழிபாடு தமிழகம் எங்கும் பரவியது. ஆனால் மணிமேகலை இலக்கியத்துடன் கண்ணகி வழிபாடு பௌத்த மதத்துடன் இணைந்த தன்மையைக் காண்கின்றோம். மணிமேகலை கண்ணகியையும், கோவலனையும் படிமக் கோலத்தில் பார்ப்பதற்கு கோயிலுக்குச் சென்றதாகவும் அங்கு மணிமேகலை கண்ணகியிடம் நடந்த வரலாற்றைக் கூறுமாறு கேட்டபோது கண்ணகி நடந்த சம்பவத்தை எடுத்துக் கூறியதோடு பௌத்த மதத்தை பின்பற்றுமாறு கூறியதாகவும் அதன்படி மணிமேகலை பௌத்த மதத்தை நாடியதாகவும் கூறப்படுகின்றது.

இதன் மூலம் பத்தினித் தெய்வம் பௌத்த மக்களால் வழிபடப்பட்ட தெய்வம் என்பதையறியலாம். பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக பௌத்தமதம் செல்வாக்கிழந்தது. பின்னர் விஜயநகர நாயக்கர் காலத்திலும் பௌத்தமதம் படிப்படியாக மறையத் தொடங்கியது. இதன் காரணமாக பத்தினித் தெய்வவழிபாடும் வழக்கொழிந்து போனது. இதன் காரணமாக கண்ணகி ஆலயங்கள் சக்தி ஆலயங்களாக மாற்றமடைந்தன. கொற்றவை வழிபாடாகவும், காளி, துர்க்கை, மாரி, பகவதி, நீலி ஆலயங்களாகவும் மாற்ற மடைந்தன. இவ்வாலயங்களில் கண்ணகிவழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும் இடம்பெறுவதைக் காணலாம். எனவே தமிழகத்தில் கண்ணகி வழிபாடு சக்தி வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளதைக் காணலாம்.

**உதவி செய்தவை**


01. கூடல், பரல் - 2, 3
கண்ணகி கலை இலக்கிய விழா மலர் - 2013, 2014
கண்ணகி கலை இலக்கிய கூடல், மட்டக்களப்பு.

02. திரு.வி.சி.கந்தையா,
மட்டக்களப்பு தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் யாழ்ப்பாணம்.

03. சிலப்பதிகாரம்

04. இணையத்தளம்

05. கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம்
சிலம்பு கூறலும் கண்ணகி வழக்குரையும் ஒப்பாய்வு.

# இலங்கைப் பதியில் பத்தினித் தெய்வ வழிபாடு

## வட இலங்கையில் கண்ணகி வழிபாடு

சேரன் செங்குட்டுவனின் அழைப்பை ஏற்று அனுராதபுரத்தை ஆட்சி செய்த கஜபாகு மன்னன் கண்ணகிக்கு எடுத்த விழாவிற்கு செல்கின்றான். அங்கு பத்தினி தெய்வம் செய்த அற்புதங்களை கேள்வியுறுகின்றான். தானும் வழிபட விரும்புகின்றான். சேரன் செங்குட்டுவனிடம் கூறுகின்றான். செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும், ஒரு கற்சிலம்பையும் சந்தனமரப் பேழையில் வைத்து கஜபாகுவிடம் பரிசாக கையளிக்கின்றான். கஜபாகு மன்னன் கண்ணகி விக்கிரகத்துடன் இலங்கைக்குத் திரும்பும் போது தன்னுடன் பன்னிரெண்டாயிரத்துக்கு மேற்பட்ட பல்குடி மக்களையும் அழைத்து "சம்புகோளா" எனப்படும் சம்புத்துறைமுகம் வழியாக வந்தான். இத்துறைமுகம் யாழ்ப்பாணத்திலுள்ளது. அதற்கருகிலுள்ள "அங்கணாமைக்கடவை" எனும் இடத்தில் முதலாவது கண்ணகி கோயிலைக் கட்டினான் எனக் கூறப்படுகின்றது.

அங்கணாக்கடவையிலிருந்து அநுராதபுரத்திற்கு பூநகரி வழியாக செல்லும் பாதைகளில் உள்ள ஊர்களில் எல்லாம் கஜபாகு மன்னன் கண்ணகிக்கு ஆலயம் அமைத்தான் என முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிடுகின்றார். நாடெங்கும் கண்ணகிக்கு கோயிலமைத்துவழிபட வேண்டுமென கஜபாகு மன்னன் கட்டளையைத் தொடர்ந்து வரோதைய சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாண பகுதியில் கண்ணகியம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.

வட இலங்கையில் தோற்றம் பெற்ற முக்கிய கண்ணகியம்மன் ஆலயங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அங்கணாக்கடவை கண்ணகியம்மன் ஆலயம்
2. வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம்
3. காரைநகர் கண்ணகியம்மன் ஆலயம்
4. மண்டைத்தீவு கண்ணகியம்மன் ஆலயம்

5. ஏழாலை கண்ணகியம்மன் ஆலயம்
6. பருத்தித்துறை கண்ணகியம்மன் ஆலயம்
7. கைதடி கண்ணகியம்மன் ஆலயம்
8. கோயில்குளம் கண்ணகியம்மன் ஆலயம்
9. பூநகரி கண்ணகியம்மன் ஆலயம்
10. நாகர் கோயில் கண்ணகியம்மன் ஆலயம்

வட இலங்கையில் உள்ள முக்கிய ஆலயங்களை நோக்கும் போது காரை நகர் கண்ணகியம்மன் கோயில் 1925ல் ஸ்தாபிக்கப்பட்ட கோயிலாகும். இங்கு சந்தண மரத்திலான கண்ணகியம்மனும் வைரவரும் உண்டு. வருடா வருடம் சித்திரை வருடப் பிறப்பை அடுத்து வரும் முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்து ஒன்பது நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகின்றது. இதேபோல் அங்கணாமைக்கடவை கோயிலை எடுத்துக் கொண்டால் இங்கு கண்ணகிம்மன் சிலம்போடு இணைந்தவாறு அமைக்கப்பட்டுள்ளாள் இங்கு கஜபாகு கொண்டு வந்த பாதச் சிலம்புகளும், கண்ணகியம்மனின் மிதிவடிக்கட்டயும் இருந்தன. தற்போது அவற்றில் ஒரு சோடி சிலம்பு மட்டுமே காணப்படுகின்றது. இங்கு பூசாரிகளை பூசைகளை மேற்கொண்டனர். ஆனால் இப்பொழுது பிராமணர்களால் பூசை நிகழ்த்தப்படுகின்றது.

வட இலங்கையில் கண்ணகி வழிபாடு தொடர்பாக தோற்றம் பெற்ற இலக்கியங்களை நோக்கும் போது கோவலனார் கதை, மந்திகைக் கண்ணகியம்மன் அந்தாதி, மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் ஊஞ்சல், வற்றாப்பளையில் சிலம்பு கூறல், வற்றாப்பளை கண்ணகியம்மன் வசந்தன்பாடல், மழைக்காவியம், பனிச்சை பாடிய பாடற் சிந்து மற்றும் அம்மானைப் பாடல்களும் முக்கியம் வாய்ந்தவையாகும்.

யாழ்குடா நாட்டிலுள்ள ஆலயங்களில் கோவலன் கதை படிக்கப்படும். வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் சிலம்பு கூறல் கதை படிக்கப்படும். கிழக்கிலங்கையிலுள்ள ஆலயங்களில் கண்ணகி வழக்குரை படிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகியம்மன் கோயில்கள் ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயங்களாகவும், மாரியம்மன் கோயில்களாகவும் மாற்றமடைந்தன. கண்ணகியம்மன் தொடர்பான நாவலரின் கண்டனங்களும், கந்தபுராணத்தின் செல்வாக்கும், பிராமணர்களின் பிரச்சாரங்களுமே இதற்குக் காரணம்.

ஆனால் வன்னியிலுள்ள வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலும் அப்பகுதியிலுள்ள ஏனைய கண்ணகியம்மன் கோயில்களும் சிறப்புற்றுச் செல்வதைக் காண்கின்றோம்.

முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து 3Km தூரத்திலுள்ள நந்திக்கடல் அருகே அமைந்துள்ள ஆலயம் வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயமாகும். இவ்வாலயம் பிரசித்திபெற்ற கண்ணகியம்மன் ஆலயமாகும். கஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட பத்தாவது ஆலயம் என ஒரு சாரார் கருதுகின்றனர். கண்ணகி மதுரையை எரித்த பின்னர் ஈழத்தின் பல இடங்களுக்கும் சென்று பத்தாவது தலமாக வற்றாப் பளையை அடைந்தாள் என இன்னுமொரு சாரார் கருதுகின்றனர். பத்தாம்பளை (பளை - தங்குமிடம்) என்பது மருவி பேச்சு வழக்கில் வற்றாப்பளை என பெயர் பெற்றது என கூறப்படுகின்றது. இவ்வாலயம் அற்புதம் நிறைந்திருந்ததாகும். வைகாசிப்பொங்கலன்று கடல் நீரில் அம்மனுக்கு பயபக்தியோடு விளக்கேற்றி வழிபடும் மரபு இன்றும் காணப்படுகின்றது. மேலும் போர்த்துக்கேய அதிகாரி இவ்வாலயத்தை பரிகாசம் செய்ய, குதிரையில் இவ்வாலயத்தைத் தாண்டிச் செல்லும் போது தலவிருட்சமான அனிச்சமரம் பயங்கரமாகக் குரைத்ததுடன் அனிச்சம் காய்கள் பயங்கர காற்றுடன் அந்த அதிகாரி மேலே வீசி எறியப்பட்டனவாம். இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தரையில் விழுந்தாராம். இதற்குப் பிறகு அந்த அனிச்ச மரம் இன்று வரையும் பூப்பதில்லை, காய்ப்பதில்லை இதுவும் அம்மனின் அற்புதமாகும்.

# பௌத்த மதத்துடனான தொடர்பு

கஜபாகு மன்னன் அனுராதபுரத்தில் (கி.பி. 171 - 186) பத்தினி தெய்வத்திற்கு கோயில் அமைத்தான். அத்தெய்வத்திற்கு ஆடிமாதம் தோறும் விழா எடுத்தான். அக்காலப்பகுதியில் ஆடிமாதப்பூரணை தோறும் "பெரஹரா" என ஊர்வலமாக பத்தினி தெய்வம் "நாத தெய்யோ" (சிவன்), "விட்டுணு தெய்யோ" (விஷ்ணு) கதிர்காமத் தெய்யோ (முருகன்) ஆகிய தெய்வங்களின் சிலைகளை வைத்து ஊர்வலம் நடத்தினான். இப் பெரஹரா நிகழ்வு பல தலைநகரங்களிலும் இடம்பெற்றன. இவ்வாறே கண்டியில் "எசல பெரஹரா" வில் இத்தெய்வங்களின் சிலைகள் இடம் பெற்றன. காலப்போக்கில் புத்தரின் புனித தந்த பேழைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்றும் கண்டி தலதா மாளிகைக்கு அருகில் பத்தினிக் கோயில் காணப்படுகின்றது. அநுராதபுரத்திலே பத்தினி வழிபாடு இடம் பெற்றது என்பதை 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "ராஜாவலிய" என்ற சிங்கள இலக்கியம் குறிப்பிடுகின்றது. சிங்களப் பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர்களும் தத்தம் இடங்களில் பத்தினி வழிபாட்டை பின்பற்றியதாக கூறப்படுகின்றது. தென்னிந்திய பத்தினி தெய்வ வழிபாடு பௌத்த சமயத்தோடு தொடர்புபட்டிருந்தது. தென்னிந்திய பௌத்தசமயத் தொடர்பின் விளைவாக இலங்கையிலும் அவ்வழிபாடு பரவியது.

இலங்கையின் சிங்களப் பிரதேசங்களில் பௌத்த சமய மரபிலும் தமிழர் வாழும் பிரதேசங்களில் இந்து மரபிலும் கண்ணகி வழிபாடு சங்கமமாகிவிட்டது.

அநுராதபுரத்தில் பத்தினி வழிபாடு ஆரம்பித்த பின்னர் சிங்கள குறுநில மன்னர்களும் தத்தம் இடங்களில் அவ்வழிபாட்டை மேற்கொண்டனர். ஆடி (எசலா) மாதப் பூரணை நாளில் சிங்கள மக்கள் பத்தினி தெய்வத்திற்கு விழா எடுத்தனர். அத்தோடு அங்கெலிய என்ற கொம்பு முறித்தலும் போர்த் தேங்காய் அடிக்கின்ற பழக்கமும் பத்தினி வழிபாட்டில் இடம் பெற்றன. இதனை ராஜாவலிய, கஜபாகுகதா, இராஜரத்தினாகர் போன்ற சிங்கள இலக்கியங்கள் பத்தினி பற்றிய பலவர்ணனைகள் காணப்படுகின்றன.

மேலும் பௌத்த மக்கள் நாற்றிசை காவல்தெய்வங்களாக இந்துக்களின் தெய்வங்களாகிய விஷ்ணு, பத்தினி, இந்திரன், கதிர்காம கந்தன் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். குருநாகல் பிரதேசத்தில் வில்வாவ கிராமத்தில் ஒரு குன்றின் மேல் பத்தினிக் கோயில் கஜபாகு மன்னனால் கட்டப்பட்டதும் மேலும் இரத்தினபுரியில் அம்மடுவ பத்தினி தேவாலயம் நுவரெலியாவிலுள்ள ஹங்குறான்கெட்ட பத்தினி தேவாலயம் தெவிநுவர கொடகெதற பத்தினி தேவாலயம் நறுகல பத்தினி தேவாலயம், கல்மடுவ பத்தினி கோவில், கல்மங்கொட பத்தினிகோயில், இரத்தினபுரி சமன் தேவாலயம், கடுவல புராண ரண்கடு பத்தினி மகாதேவாலயம், மடுவ பத்தினி தேவாலயம், மற்றும் கொழும்பு அவிசாவளையில் களனி கங்கைக்கு அண்மையில் அமைந்த நவகமுவ பத்தினி தெய்வம் புகழ்பெற்றதாகும். போர்த்துக்கேய தளபதி இவ்வாலயத்தையும் இடிக்குமாறு கட்டளை பிறப்பித்ததாகவும், மக்கள் பத்தினி தெய்வத்திடம் இரந்து வழிபட்டதாகவும், கோட்டை மன்னனின் கனவில் அம்மாள் தோன்றி கோயிலை இடிக்காமல் காப்பாற்றுமாறு கூறியதாகவும் அதன் பிரகாரம் கோட்டை மன்னனின் வேண்டுகோளை ஏற்று இவ்வாலயம் இடிக்கப்படவில்லை இவ்வாலயம் இன்றும் காணப்படுகின்றது. பத்தினி வழிபாடு சிங்கள மக்களுக்கே அதிகம் உரிய என பேராசிரியர் கணநாதர் ஒபயசேர மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு பத்தினி ஒரு சிங்கள பௌத்த தெய்வம், சடங்கு இங்குதான் நடக்க வேண்டும் ஏனெனில் பௌத்தம் இந்தியாவில் செத்து விட்டது என சிங்கள கப்புறாளை பேட்டியில் குறிப்பிட்டதாக பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேலும் சிங்கள பௌத்தமக்கள் பத்தினித் தெய்வத்தை சிறப்பாக வழிபட்டனர். கண்ணகி வழிபாடு தொடர்பாக பல சிங்கள இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவற்றுள் தபஸ்கமன, குயில்விடு தூது, பத்தினி கொல்முரா, சிலம்புக்கதரி, பத்தினி படிமா, மந்தாரம்புவ புவக்த, பத்தினி அதகில்ல, ராஜா வலிய போன்ற சிங்கள இலக்கியங்கள் கண்ணகி தொடர்பான கதைகளைக் குறிப்பிடுகின்றன. இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களின் காரணமாக பௌத்த சமயம் தமிழரிடையே வழக்கொழிந்த காலத்திலே பத்தினி வழிபாடு தொடர்ந்து நிலை பெற்றதோடு காலப்போக்கில் சைவ சமயத்தோடு சங்கமமாகிவிட்டது. தமிழ். மக்களின் வாழ்வில் எவ்வாறு பத்தினி வழிபாடு கண்ணகி வழிபாடாக மாறியது என்பதை நோக்கும் போது அநுராதபுரத்திலிருந்து முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளைக்கும் அங்கிருந்து கடல் வழியாக மட்டக்களப்புப் பகுதிக்கும் கொண்டு சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு

கண்டியில் பத்தினி வழிபாடு இடம்பெற்ற போது அவ்வழிபாடே மட்டக்களப்பிற்கு கண்ணகி வழிபாடாக வந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. கண்டி நாட்டாரும் மட்டக்களப்பாரும் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கு செல்வதற்கு காட்டு வழிப்பாதை இருந்ததாகவும் அது காரைதீவிலிருந்தும் சம்மாந்துறை யிலிருந்தும் வீரமுனையூடாகச் சென்றது. மண்டூரிலிருந்தும், பழுகாமத் திலிருந்தும் வந்த கண்டிக்குச் செல்லும் காட்டுவழி இரண்டும் ஊவா மாகாண எல்லையைச் சார்ந்துள்ள "கண்டியக்கட்டு" எனும் இடத்தில் வீரமுனை வழியோடு ஒன்று படுகின்றன எனவே கண்டியிலிருந்து வீரமுனை வழியாக காரைதீவு, தம்பிலுவில் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்கு வழிபாடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப் படுகின்றது.

கிழக்கிலங்கையில் 50க்கு மேற்பட்ட கண்ணகியம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன ஆனால் சுற்றுக்காவியத்தில் பட்டிநகர், தம்பிலுவில், காரைநகர், வீரமுனை, கல்முனை, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, சித்தாண்டி, மண்முனை போன்ற இடங்களில் ஆலயம் உள்ளதாக குறிப்பிடுகின்றது.

"பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவிசு பெறு கல்முனை கல்லாறு மகிழூர் எருவில்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு செல்வ
முதலைக்குடா கொக்கட்டிச்சோலை
அட்டதிக்கும் புகழ் வந்தாறுமூலை
அன்பான சித்தாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்க வினை மாறியோடிடுமே"

(ஊர் சுற்றுக் காவியம் - 71 பாடல்)

இப்பாடலில் குறிப்பிடப்படாத மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான், தாண்டவன்வெளி, களுவாஞ்சிகுடி, துறைநீலாவணை, அக்கரைப்பற்று, பொத்துவில், பாண்டிருப்பு, அமிர்தகழி, கோயில்போரதீவு, கன்னங்குடா, மகிழடித்தீவு, ஈச்சன் தீவு, பழுகாமம், நாவற்கேணி, 13ம் கொலனி, போன்ற இடங்களிலும் அம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

கண்ணகியம்மன் ஆலயங்களில் நடக்கும் பூசையினை "திருச்சடங்கு" என அழைப்பர். இச்சடங்கானது வருடந்தோறும் வைகாசிச் சடங்கு பௌர்ணமியை திருக்குளிர்த்திச் சடங்காகவும், அதன் முன்னுள்ள மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் திருச்சடங்கு இடம் பெறும், சில ஆலயங்களில் வைகாசி பௌர்ணமியை அண்மித்த திங்கட்கிழமை திருக்குளிர்த்தி நாளாகக் கொண்டு அதன் முன்னுள்ள 3 அல்லது 5 அல்லது 7 நாட்கள் திருச்சடங்கு இடம் பெறும்.

வைகாசித் திங்கட்கிழமையை திருக்குளிர்த்தியாகக் கொண்ட கோயில்களில் காரைதீவு, எருவில், கல்முனை, கல்முனை கடற்கரைக் கண்ணகை, துறைநீலாவணை, செட்டிபாளையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வைகாசி பௌர்ணமியில் திருக்குளிர்த்தி நடைபெறும் ஆலயங்களில் வீரமுனை, கோட்டைக்கல்லாறு, களுவாஞ்சிகுடி, மகிழூர், தம்பிலுவில், கோளாவில், திருக்கோயில், கோயிற்போரதீவு போன்ற கோயில்களைக் குறிப்பிடலாம்.

வைகாசி மாதத்தில் கண்ணகியின் திருச்சடங்கு நடைபெறுவதற்கும் காரணமுண்டு.

கோவலன் கொலையுண்ட 14ம் நாள் தேவர்களுடன் கோவலன் விண்ணகத்திலிருந்து வானவூர்தியில் வந்து தேவர்கள் பூச்சொரிய கண்ணகி புஸ்ப விமானத்தில் ஏறுகின்ற போது அன்னையே இப்பதியை விட்டு தாங்கள் சென்றால் நாங்களும் உங்களுடன் வருவோம் என சீத்தலை சாத்தனாரும் சில அடியவர்களும் கூற "வைகாசித் திங்கள் வருவேன்" என கூறினாள் அதனால் வைகாசித் திங்களில் திருச்சடங்கு செய்யுமாறு சாத்தனார் கூறியதற்கு இணங்க வைகாசித் திங்களில் திருச்சடங்கு இடம் பெறுகின்றது.

# சடங்கு முறைகள்

கண்ணகியம்மன் ஆலயங்களில் வருடாந்த திருச்சடங்கின் போது வைகாசிப் பூரணையை அல்லது பூரணைக்கு அண்மித்த திங்களை திருக்குளிர்த்தியாகக் கொண்டு மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் சடங்கு இடம்பெறும். ஊர்க்காவல் பண்ணுதல், கதவு திறத்தல், பூரண கும்பம் வைத்தல், கால்யாணக்கால் (கன்னிக்கால்) வெட்டுதல், கல்யாணச்சடங்கு, வட்டுக்குத்துப் பூசை, கண்ணகி வழக்குரை படித்தல், மடை பரவுதல், விநாயகர் பானை எழுந்தருளப்பண்ணல், திருக்குளிர்த்திப் பாடுதல், திருக்கதவு அடைத்தல் எட்டாம் சடங்கு போன்ற சடங்கு முறைகள் இடம்பெறும். இவை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஆலயங்களில் இடம்பெறும் சடங்கு முறையாகும். இச்சடங்கு காலத்தின் போது பெண்கள் குரவை போடுதல், மடிப்பிச்சை எடுத்தல், நெல்குற்றுதல், பாளைவிற்றல், மடை கொடுத்தல், பிள்ளை விற்று வாங்குதல், தென்னம்பிள்ளை, கோழி, ஆடு, மாடு, நேர்கடனாக கொடுத்தல், அள்ளு காணிக்கை கொடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், தீச்சட்டி எடுத்தல், அம்மனக்காய், சிலம்பு கிலுக்குதல், காவடி எடுத்தல், கொம்பு முறிவிளையாட்டு, வசந்தன் கூத்து, போர்த்தேங்காய் உடைத்தல் போன்றவை இடம்பெறுவதைக் காணலாம்.

வன்னிப்பகுதியிலுள்ள ஆலயங்களின் சடங்கு முறை சற்று வேறுபடுவதைக் காண்கின்றோம். பஞ்சாங்கம் பார்த்தல், பாக்குத் தெண்டல், ஊர்காவல் பண்ணல், பண்டம் எடுத்தல், பரிகலம் அடித்தல், கும்பம் வைத்தல் தூளி பிடித்தல், தீர்த்தம் எடுத்தல், கச்சு நேர்தல், நோற்புக் குற்றல், பரிகலம் வழிவிடல் என்பவற்றோடு கொம்பு முறித்தல், கோவலன் கூத்து போன்ற நிகழ்வுகளும் இடம் பெறும்.

## கலை கலாசாரம்

வைகாசித் திருச்சடங்கின் போது தமிழர்களினது கலை கலாசாரங்கள் பேணப்படுவதைக் காண்கின்றோம்.கலைஞர்கள் தங்களின் கலைத்திறன்

களை வெளிப்படுத்துவர். வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் ஆடுவர். புராண இதிகாச நாடகங்களை மேடையேற்றுவர். சிறுமியர்கள் கும்பி, கோலாட்டம், கரகம், செம்பு நடனம், சுளகு நடனம் போன்ற கிராமிய நடனங்களையாடுவர். வசந்தன் கூத்தும் மேடையேற்றப்படும். போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல் போன்ற விளையாட்டு க்களும் இடம் பெறும். இவ்விரு விளையாட்டுக்கள் பற்றி இளையதலை முறையினருக்குத் தெரியாது. காரணம் தற்போது அவை மருகிவிட்டது எனவே அவை பற்றி குறிப்பிட வேண்டியுள்ளது.

கோவலனை கொலை செய்த பாண்டிய மன்னனையும் அவன் ஆட்சி செய்த மதுரையையும் எரித்த கண்ணகியின் கோபம் தணியாத காரணத்தினால் இடையர்குல இளைஞர்கள் ஒரு காதல் கலந்த விளையாட்டு விழாவாக கொம்பு முறி விளையாட்டை நடாத்தி கண்ணகியை குளிர்ச்சியடைய (மகிழ்ச்சியடைய) செய்தனர். அத்தோடு மழைவளம் குன்றிப் பசியும் பிணியும் மிகுந்த மக்கள் கொடிய வெயிலினால் நலிந்து அல்லற்படும் வேளையில் கொடிய வெப்ப நிலைக்குக் காரணம் அந்த வீரபத்தினியின் சீற்ற மிகுதியே என்றும் அதனால் சாந்தி நிலையைக் கண்ணகிக்கு ஊட்டுவதற்காகவே ஊர் முழுவதும் மகிழ்வூட்டும் கலையாக கொம்புமுறி விளையாட்டு விளையாடப்படுகின்றது. இவ்விளையாட்டு முடிந்ததும் மழை பொழியும் நிகழ்வு இடம்பெறுவதைக் காணலாம். அத்தோடு கடும் வரட்சி ஏற்படும் போது மழையை வேண்டி மழைக்காவியம் பாடியதும் திடீரென மழை பொழிவதாக கூறப்படுகின்றது.

கொம்பு விளையாட்டுக்களை கொம்பு மரங்களின் இயல்பாக அமைந்து காணப்படும் வளைத்தடியே பயன்படுத்தப்படுகின்றது. கொம்புமுறி விளையாட்டிற்காக வடசேரி (கோவலன்) தென்சேரி (கண்ணகி) என இரு பிரிவாக கிராமத்தவர்கள் பிரிக்கப்படுவார்கள். குடிவழி தாய்வழியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இவ்விளையாட்டில் தந்தை வழியடிப்படையிலே பிரிக்கப்பட்டு விளையாடப்படும்.

வடசேரிக் கொம்பு $90^0$ பாகை வளைவுடையதாகவும், தென்சேரிக் கொம்பு அதிலும் சற்று ஒடங்கியதாகவும் இருக்க வேண்டியது. பொது

இயல்பாகும். விளையாட்டு பொது இடத்தில் ஆரம்பமாகும். ஓர் இரவு போர்த்தேங்காய் அடித்தலைக் கொம்பு முறித்தலின் முதல் விழாவாக இருக்கும். இரு பகுதியினரின் பிரதி நிதிகளில் ஒருவர் தம் கையிற் கொண்டுள்ள வலிவுடையதான சிறிய போர்த்தேங்காய் முறையே எதிர்த்தரப்பார் உருட்டியனுப்பும் தேங்காய்கள் ஒவ்வொன்றாய் உடைப்பர். ஒரு பகுதினரால் உடைக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கையைக் கொண்டு வெற்றி தீர்மானிக்கப்படும். அது முடிந்ததும் கொம்பு விளையாட்டின் முதற்குறியாக ஒரு கொம்பை முறித்து விளையாட்டை ஆரம்பித்து வைப்பர். முதலாவது உடைக்கும் தேங்காயிலும், போர்த் தேங்காய் உடைத்தல் நடந்த பின் முறிக்கும் முதற் கொம்பிலும் தென்சேரி அம்மனின் பகுதிக்கு வெற்றியை கொடுத்தல் மரபாகும் அதுவே கண்ணகியை சாந்தமடைய வைக்கலாம் என கருதப்படுகிறது.

மறுநாளிலிருந்து கொம்பு முறித்தல் நடக்கும். கொழுகொம்பு, கொம்புத்தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என ஐவகைப்படும். ஒவ்வொரு இரவும் கொம்பு முறித்தல் இடம் பெறும். அன்று கொம்பை முறித்தவர்கள் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுவர். ஆடிப்பாடி மகிழ்வர் கொம்பு முறித்த பின்னர் இரவு தோறும் இரு கட்சிக்காரருக்கும் பொதுவான கொம்புத்தட்டில் (ஒரு பூம்பந்தர் அமைவுடன் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் பூந்தட்டில்) நன்கு அலங்கரிக்கப்பட்ட அம்மன் சிலையினையும் வைத்து ஊர்வலம் செய்வர். நடுச்சந்தியில் தட்டை வைத்து வசந்தன் கூத்து, ஊர் சுற்றுக்காவியம், வெற்றிப் பாடல்களைப் பாடுவர். வேடர், குறவர், போர் வீரர், முடி மன்னர், முனிவர், ஆண்டிகள் முதலான வேடங்களை தாங்கி ஆடல் புரிவர்.

இவ்வாறு பாரம்பரிய விளையாட்டுக்கள் கண்ணகி வழிபாட்டோடு ஒன்றிணைந்து காணப்படுகின்றது. பல கிராமங்களில் கொம்பு முறி விளையாட்டு இடம் பெற்றதற்கு ஆதாரமாக அவ்விளையாட்டு இடம் பெற்ற இடத்தை அப் பெயர் கொண்டு அழைப்பதைக் காண்கின்றோம். உ-ம் : எருவில் கொம்புச்சந்தி, களுதாவளை கொம்புச் சந்தி, காரைதீவு கொம்புச்சந்தி என்ற பெயர்கள் இன்றும் உண்டு. எனவே மருவிச் சென்றுள்ள பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு புத்துயிர் கொடுப்பது எமது கடமையாகும்.

## திருச்சடங்கு காலத்தில் பின்பற்றப்படும் மரபுகள்

கண்ணகியின் திருச்சடங்கின் போது சில மரபுகளை பின்பற்றுவதைக் காண்கின்றோம். மா, மஞ்சல் போன்றவை இடித்தல், உணவுப் பதார்த்தங்கள் பொரித்தல், துவைத்தல், வறுத்தல், ஊசி நூல் கொண்டு தைத்தல், தூரபயணம் செல்லல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன. கோயிலுக்கு அண்மையிலுள்ள வீடுகளில் வீட்டுக்கு தொடக்கானவர்களும் தூர இடங்களுக்கு செல்வதும், மரணச் சம்பவம் இடம் பெற்றால், ஆலய பூசைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நல்லடக்கம் செய்யப்படும் வீடுகளில் மங்கலகரமான காரியங்களைத் தவிர்ப்பர். கண்ணகியின் திருச்சடங்கிற்கே முதன்மை கொடுப்பர். வழிபாட்டிலே ஈடுபடுபவர் தங்களுக்கு ஏற்படும் நோய் பிணிகளை தீர்ப்பதற்காகவும், குடும்ப நலனிற்காகவும் பல நேர்கடன்களை வைத்து நேர்த்திகளை கொடுப்பதைக் காண்கின்றோம். ஊர் மக்கள் தங்கள் உட்பகைகளை மறந்து குடி (சாஹித்தியம்) என்ற ரீதியில் ஒன்றுபட்டு திருச்சடங்கினை சிறப்பாக செய்வதையே குறிக்கோளாக கருதுவர். திருச்சடங்கினை முன்னிட்டு வீடுகள் அழகுபடுத்தப்படுவதோடு, தெருக்களும் சுத்தம் செய்யப்படும். வெளி நாடுகளிலும், வெளிப் பிரதேசங்களில் இருப்பவர்களும் திருச்சடங்கில் பங்கேற்பதற்காக கிராமங்களுக்கு வருகை தருவதைக் காணலாம். இதனால் ஒவ்வொரு வீடுகளிலும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிரம்பிக் காணப்படும்.

### இலக்கியங்கள் :

தமிழகத்தில் கண்ணகி வரலாற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கையில் வடக்குப் பகுதியில் கண்ணகி மீது பல பிரபந்தங்கள் எழுந்துள்ளன. அவற்றுள் வன்னி மாவட்டத்து சிலம்பு கூறல் காவியம், யாழ்ப்பாணத்தில் கோவலன் கதை போன்ற நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதேபோல் கிழக்கிலங்கையில் கண்ணகி வழக்குரைக் காவியம் முக்கியத்துவம் பெறுகின்றது.

**கண்ணகி வழக்குரை :**

மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகி வழக்குரை மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. ஆரிய சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற தலை சிறந்த இலக்கியமாகும் 14ம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் வாழ்ந்த சகவீரர் என்பவரால் பாடப்பட்ட நூலாகும். 1965 இல் வித்துவான் F.X.C. நடராஜா அவர்கள் முதல் இரு காதைகளையும் பதிப்பித்தார். பின்னர் 1968 ல் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் முழுமையாகப் பதிப்பித்தார். இது பதினொருகாதைகளையும் 2226 பாடல்களையும் கொண்டது. இதில் வெடி அரசன், வீரநாராயணன். மற்றும் விளங்குதேவன் போர், மீகாமன் கதை, தாரி யோட்டு மணி வாங்கிய கதை, மாதவி அரங்கேற்றும் கதை, பொன்னுக்கு மறிப்பு போன்ற காதைகள் கண்ணகி வணக்கத்தோடும் பூசை முறைகளோடும் தொடர்பில்லாதவையாகும். இந்நூலில் இடம்பெறும் வரம் பெறும் காதை, குளிர்ச்சிக் காதை, கப்பல் வைத்த கதையின் இலங்கைச் சம்பவங்கள் சிலப்பதிகாரத்தில் இருந்து வேறுபடுகின்றது. பாண்டிய மன்னனின் செருக்கை அடக்குவதற்காகவே கண்ணகி அவதரித்தவள் எனவும் தெய்வப் பெண்ணாகப் பிறந்து மானிட வாழ்க்கை வாழ்ந்து மீண்டும் வழிபாட்டுக்குரிய பெண்ணாக மாறியவள் என கூறுகின்றது. இது சைவ சமயம் சார்பாக கண்ணகி வழக்குரை காணப்படுகின்றது. கண்ணகியம்மன் வழிபாட்டு வேளையில் இந்நூல் இசை தொகுத்து இருவரால் மாறி மாறிப் படிக்கப்படும். இதற்கான இசை கேட்போர் மனதை கவரக் கூடியது. இதனுள் ஊர் சுற்றுக் காவியம், மழைக்காவியம், ஊஞ்சல் போன்றவை அடங்குகின்றன.

**சிலம்பு கூறல் :**

யாழ்ப்பாணத்தையாண்ட செகராச சேகரன் காலத்தில் வாழ்ந்த காங்கேயப்புலவரால் பாடப்பட்டது. அவ்வேடு சிதைவுற்றமையால் வெற்றிவேற் புலவரால் பாடப்பட்டது.

இக்கதை கண்ணகி சாதாரண மானிடப் பெண்ணாக அவதரித்து கற்பு நெறியால் தெய்வநிலை அடைந்தவள் எனவும், அவள் உமையின்

அவதாரம் எனவும், இதில் கோவலன், கண்ணகி பிறப்பு, இருவரின் திருமணம், மாதவியை கோவலன் நாடிச் செல்லல், கண்ணகி பாண்டியன் சபையில் வழக்குரைத்தமை, பாண்டியனின் இறப்பு, மதுரை எரிப்பு இடைச்சேரியில் தனது அகோரத்தை நீக்கி சொக்கநாதரின் வேண்டுகோளுக்கேற்ப இலங்கையில் வற்றாப்பளைக்கு வந்து அற்புதம் புரிந்தமை பற்றிக் கூறுகின்றது. சிலம்பு கூறல் வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலில் படிக்கப்படுகின்ற காவியமாகும்.

**கோவலன் கதை :**

இந்நூலினை வெற்றிவேலுச் சட்டம்பியர் இயற்றியதாகவும். தென்புலோலியூர் ம.சே.செல்லையா 1962ல் அச்சிட்டதாகக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகியம்மன் கோயில்களில் படிக்கப்படும் பல ஏடுகளை மந்திகைக் கண்ணகியம்மன் ஏட்டுடன் ஒப்பு நோக்கிப் பதிப்பிக்கப்பட்டது. அந்தாதி வடிவில் பாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகியம்மன் கோயில்களில் கோவலனார் கதை பாடப்படுகின்றது.

**சிலப்பதிகாரம் :**

இந்நூல் இளங்கோவடிகள் எனும் சமண துறவியினால் இயற்றப்பட்டது.

இந்நூல் புகார்க் காண்டம், வஞ்சிக் காண்டம், மதுரைக் காண்டம் எனும் மூன்று காண்டங்களையும், முப்பது உட்பிரிவுகளையும் கொண்டது.

இந்நூல் கண்ணகியின் வரலாற்றை "அரசியல் பிழைத்தோர்க்கறங் கூற்றாவதும்," "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுவதும்" ஊழ்வினை மீண்டும் வந்து உறுத்தும் எனும் மூன்று நோக்கங்களை நிறைவேற்ற தோற்றம் பெற்றது.

சிலம்பின் காரணமாக விளைந்த வரலாற்றைக் கூறுவதால் சிலப்பதிகாரம் எனும் பெயர்பெறுகின்றது முத்தமிழாகிய இயல், இசை, நாடகத்தை எடுத்துக் கூறுகின்றது.

இந்நூல் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் பெருமைகளையும், அவற்றின் தலை நகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி ஆகியவற்றின் சிறப்பினையும் மூவேந்தர்களின் ஆட்சி சிறப்பினையும், கோவலன், கண்ணகி, மாதவியின் வாழ்க்கை வரலாற்றையும் அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், சமயநிலை, வாணிபம், நற்பண்புகள் போன்றவற்றை எடுத்துக் கூறுகின்றது.

இளங்கோவடிகள், கோவலன், கண்ணகி காலத்தில் வாழ்ந்தவர் அவர்களின் வாழ்க்கை சம்பவங்களை நேரில் கண்டும் அறிந்தும் சிலப்பதிகாரத்தை உருவாக்கினார். இவர் எந்த சமயத்தை சார்ந்தவர் என்பதை அறியாதவாறு நூலை எழுதியுள்ளார். கற்கோயில் அமைத்த சேரன் செங்குட்டுவனின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொம்பு முறிப்பாடல்கள்

01. கோலப் பனிச் சேலை கொய்துடுத்து
கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பர் வந்து மடிபிடித்து
மெத்தவும் சிக்கிக்கொண்டார்தோழி

02. காப்பணி மங்கையர் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வேலன்
சீப்புடன் மல்லிகைப் பூமாலைதந்து
சேர்வமென்றாரடி தோழியரே

### குறவள்ளியும் தோழியருமாகக் கோலம் புனைந்து தம்முட் படித்தாடும் பாடல்கள்

01. ஆற்றோரம் போறமயில் - அது
ஆண்மயிலோ ஆண்மயிலோ
பார்த்துவாடா வடசேரியான் - உனக்கு
பாவற்பழம்போல மாலைதாறேன்

02. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
அங்கேநின்று படைபொருதி
வேர்த்துவாறான் தென்சேரியான் - அவனை
வெள்ளி மடல்கொண்டு வீசுங்கடி

03. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
அங்கேநின்று படைபொருதி
தோற்றுவாறான் வடசேரியான் - அவனைத்
துடைப்பங் கட்டாலே அடியுங்கடி

04. வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள தாழையின் மேலேமேலே
தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே
செம்பரப்பற்றைக்குக் உள்ளே உள்ளே

05. வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
வண்ணாண்ட சாடிக்கு உள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே
சித்திரத் தேருக்கு மேலேமேலே

## வசைப்பாடல்கள்

பால்போல் நிலவெறிக்கப்
படலை திறந்தவன் ஆர்தோழி
நான்தாண்டி தென்சேரியான் - உனக்கு
நாழிப்பணம் கொண் டுவாவுறண்டி

## தனிவசைப் பாடல்

01. கற்பகனார் நிதம் அர்ச்சனை செய்யக்
கரிமிசை வாறவர் ஆர்தோழி
முப்புரம் நீறெழச் செய்த சிவனருள்
முருகவேளாமடி மானாரே

02. மஞ்சட் குருவி போலே
மடி நிறைந்ததோர் மல்லிகைப்பூ
சிந்தித் தெருவில் வாற
சிறுக்கனல்லோடி தென்சேரியான்

03. மானே மடப்பிடியே எங்கள்
வண்ண விரலுக்கு மோதிரமே
நானே தருவேனென்று - என்னை
நளும்புறானடி நல்லன்னமே

04. நத்தை மிதந்தாற் போலே
நாவற்சருகு பறந்தாற் போலே
பாவட்டம் பத்தைக்குள்ளேயிலிருந்து பயல்
பாய்ந்துகரத்தைப் பிடித்தானடி

## வேடர் வேடம் புனைந்து ஆடுவோர் பாடும் பாடல்கள்

01. மலையோரம் வேட்டைக்குப் போய்
மானடி பார்த்து வருகையிலே
கலையோ கலைமானோ
காடேறி மேய்ந்ததோர் பெண்மானோ

02. புல்லாந்திப் பத்தைக்குள்ளே
புலி கிடந்து உறுமுகுது
ஒக்க மிதிப்பாய் புல்லாந்தி - அதை
ஒருகுத்தாய்க் குத்தாய் புல்லாந்தி

## வசந்தன் பாடல்கள் (வேளாண்மை)

பச்சைப் பெருமாள், கறுப்பன், பாளை, முகவன் - செழும்
பன்றிக் கூரன், வெள்ளை வாலன், பச்சைச் சம்பா
மெச்சியே பலரும் விரும்பும் வெள்ளை வாணன் - இந்த
மேதினி எல்லாம் புகழும் முத்துச் சம்பா

முத்துச்சம்பா நெல்முளைய முன்னே விதைப்போம் - நல்ல
முருங்கன் கறுப்பன்களை மேட்டில் விதைப்போம்
சித்தியுடன் நெல்வயல் முற்றும் விதைப்போம் - பயிர்
செழித்தபின்பு வேலிகாவல் செப்ப னிடுவோம்

## தம்பிலுவில் மழைக்காவியம்

ஆறுமுறு கடலிநீர் வானமது வருஷித்து
அகலமுறும் ஆறுகுளம் நிறைய மழைபொழியக்
கோளதுகு ணக்கிடப ராசியது மேவியுங்
கொடியவெயி லல்லாது மழையில்லை யம்மா
நாளது தெரிந்துமறை வேதியர்க ளோதவே
நாங்கள்படு துயர்கண்டு தாங்கரிய வெள்ளம்
தாழுமுறு குளமதுகள் நிறையவே யுன்கிருபை
தந்துதவு தம்பிலுவில் தங்குமா தாவே.

## மூல ஆதாரங்கள் :


01. மட்டக்களப்பு தமிழகம் - திரு.வி.சி.கந்தையா

02. வழக்குரைக் காதை - திரு.வி.சி.கந்தையா

03. இந்துக் கலைக்களஞ்சியம் - தொகுதி 10
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

04. சிலப்பதிகாரம் கூறும் இந்துப்பண்பாடுகள் - ரகுவரன்

05. சிலப்பதிகாரம் - புலியூர் கேசிகன்

06. இயலுள் கண்ணகி காப்பியம்
இரா.சிறிகிருஷ்ணன்

07. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு
திரு.நா.நவநாயகமூர்த்தி

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்கள்

01. எமது ஆலயத்தில் பல வருடங்களாக கட்டாடியாராக (பூசகராக) பணிபுரிந்தவர் அமரர் கறுவல் தம்பி அவர்கள் பத்தினி தெய்வத்தின் மீது அதிக நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவர். அவர் எருவில் ஈஸ்ரன் சிஸ்டம் குறாப் தோட்டத்தில் தேங்காய்களை எண்ணைக்காக நெருப்பிலே வாட்டியெடுக்கும் பகுதியில் வேலை செய்தார். அப்போது ஒரு நாள் கொப்பறாத்தேங்காய்களை வாட்டுகின்ற நெருப்பினிலே கால் இடறி விழுந்துவிட்டார். கொழுந்து விட்டெறியும் கொப்பறாத்தீயின் மத்தியிலே மஞ்சள் நிறத்துணியணிந்த பெண்ணொருத்தி ஓடிவந்து அவரைத் தூக்கி தீயிலிருந்து காப்பாற்றினார். உடனே அப்பெண் மாயமாக மறைந்துவிட்டார். தன்னைக் காப்பாற்றியது கண்ணகித்தாய் என்பதை உணர்ந்து கொண்டார். கண்ணகித் தாயை உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு அருள் வழங்குபவள் என்பது புலனாகின்றது. இச் சம்பவம் 1965ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றது.

02. கடந்த 1993ம் ஆண்டு கண்ணகியம்மன் ஆலயத்தில் குடமுழுக்கு இடம்பெற்றது. அக்கிரியைகளை அகோரதேசிகர் இரா. கோபாலசிங்கம் குருக்கள் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அப்பொழுது கண்ணகியம்மன் சிலை ஒன்று மூன்றாவது மண்டபத்தில் நெற்குவியலுக்கு மேல் வைக்கப்பட்டது. கிரியைகளுக்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றன கண்ணகியம்மன் சிலையை அவதானித்ததும் அச்சிலை அங்கில்லை. எல்லோரும் அதிர்ச்சியுற்றனர். ஆலய பூசகர் அவ்விடத்திற்கு வந்தார் விடயம் கூறப்பட்டது. கட்டாடியாருக்கு உரு ஏறியது. நெற்குவியல் பெருகுவதை அவதானித்தார். கட்டாடியார் நெற்குவியலை பிரித்தார் உள்ளிருந்து கண்ணகியம்மன் சிலையை எடுத்தார். கண்ணகித்தாயின் அற்புதம் எம்மை மெய் மறக்க செய்கிறது.

03. எமது கண்ணகியம்மன் ஆலயத்தின் பிரதான முகப்பில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரமாக கட்டப்பட்ட வாயிற் தோரணத்திற்குரிய வேலைகளை இந்தியாவிலிருந்து வருகை தந்த சிற்பி கண்ணகியம்மன், காவல் தெய்வங்களை செதுக்கியபோது

கண்ணகித்தாயின் கையில் வைப்பதற்கு சிலம்பு தேவை என கூறினார்கள். கோயிலில் உற்சவகாலமாக இல்லாத காரணத்தினால் கோயிலிருந்து சிலம்பு எடுக்க முடியாது என ஆலய நிர்வாக சபையினர் கவலையடைந்தனர். ஏற்கனவே துப்பரவு செய்யப்பட்டு சிற்பிகளுக்கு வழங்கப்பட்ட இடத்தை நாளாந்தம் வேலைகள் செய்யும் போது துப்பரவு செய்து ஒதுக்கிய குவியலில் இருந்து வெட்டும் கம்பியைத் தேடும் போது அற்புதமான அழகிய புதிய சிலம்பை கண்டெடுத்தனர். எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர். அம்மனின் அருளை நினைத்து வியந்தனர். அம்மனை வணங்கி அச்சிலம்பை கண்ணகியின் கையில் வைத்துப்பொருத்தினார்கள். கிரியைகள் இடம்பெற்றன இதனூடாக அம்மன் எம் குறைகளை நிறைவாக்கு பவள், மனநிறைவைத் தருபவள் என்பது தெளிவாகின்றது.

04. எமது ஆலயத்தில் ஒரு நள்ளிரவு களவெடுப்பதற்காக ஒருவர் ஆலயத்திற்குள் சென்றார். உடனே அவருடைய கண்பார்வை யில்லாமல் போய்விட்டது. அவரால் களவெடுக்கவும் முடியவில்லை வெளியில் செல்லவும் முடியவில்லை அடுத்த நாள் அடியவர்களால் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

05. ஒருநாள் ஒரு நபர் நடுநிசியில் ஆலயத்தின் கருவறையின் கதவினை தீயிட்டு கொழுத்திவிட்டு பெறுமதியான பொருட்களை சூரையாடினார். எந்தவித தடயங்களும் கிடைக்கவில்லை ஆனால் தாயாரின் அருளினால் கள்வன் பிடிபட்டான்.

இதன் மூலம் கண்ணகித்தாய் அநீதி வழியில் நடந்த பாண்டியனையும் அவனது செயலுக்கு ஒத்து ஊதியவர்களையும் அழித்தது போல் அநீதி வழியில் நடப்பவர்களைத் தண்டிப்பாள் என்பது புலனாகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

**வாய்மொழிமூலத் தகவல் -**

திரு.மா.சுந்தரலிங்கம் - தலைவர் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்

திரு.சோ.தினகரன்பிள்ளை - மணியகாரர் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்

திரு.ச.ரகுராமமூர்த்தி - மருந்தகவியலாளர்

திரு.என்.பேரின்பராஜா

திரு.த.சத்தியமூர்த்தி (ஓய்வுநிலை தபால் உத்தியோகத்தர்)

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள்

வருடாந்த திருச்சடங்கானது வைகாசிமாத பூரணையைச்சார்ந்து வருகின்ற திங்கட்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தியாகக் கொண்டு அதன்முன்னுள்ள ஏழுநாட்கள் சடங்கு இடம்பெறும்.

கண்ணகியின் திருச்சடங்கு விதிமுறைகளை தமது முதாதையர் களிடமிருந்து முன்னோர் நிகழ்த்திய அதே முறையில் பாரம்பரிய மரபுகளுக்கேற்ப சடங்கினை ஆற்றுப்படுத்துபவர் கட்டாடியார் என அழைக்கப்படுகின்றார். இவர் சடங்கு முறைகள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்ட பத்ததி (பத்தாசி) முறையில் சடங்கினை நடத்துவார். பத்ததிகள் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருவதால் திருச்சடங்கு கோயில் பூசாரியாக குறித்த பரம்பரையினரே செய்து வருகின்றனர். கோயிலுக்கு அருகில் அமர்த்தப்பட்ட பத்தினாச்சி குடியினரே கட்டாடியாராகவும் (பூசகராகவும்) உதவியாளர்களாகவும், தொண்டூழியம் புரிபவர்களாகவும் செயற்படுவது ஆலய பாரம்பரிய மரபை பின்பற்றுவது சிறப்பம்சமாகும்.

## 01. பூசைமுறைகள்

ஆலய திருக்கதவு திறக்கும் நிகழ்வு திங்கள் பின்னிரவு, (செவ்வாய் கிழமை அதிகாலை) இடம்பெறும். இச்சடங்கினை பணிக்கொணாக் குடியினர் சிறப்பாக நடத்துகின்றனர். அன்றிரவுச்சடங்கினை பெத்தான்குடியினர் அம்மனுக்கு எடுக்கின்றனர். புதன்கிழமை பகல் பூசையினை எருவில் வாழ்கின்ற கரவாகு பணிக்கொணாக் குடியினர் செய்கின்றனர். அன்றைய இரவுப் பூசையினை எருவில் வாழ்கின்ற களுதாவளை பெத்தான்குடியினர் எடுக்கின்றனர். வியாழக்கிழமை பகல் சடங்கினை கச்சிலாகுடி மக்களும் இரவுப்பூசையினை வேளாளர் குடியினரும் நடத்துகின்றனர். வெள்ளிக்கிழமை இடம்பெறும் பகல் பூசையினை பத்தினாச்சி குடியினரும் இரவுப் பூசையினை மருத்துவக் குடியினரும் நடத்துகின்றனர். சனிக்கிழமை பகல் பூசையினை

செட்டிகுடியினரும் மாலைப் பூசை கன்னிக்கால் வெட்டும் நிகழ்வை கண்டன் குடியினரும் சிறப்பாக நடத்துகின்றனர். ஞாயிற்றுக்கிழமை பகல் பூசையாக திருக்கல்யாணச் சடங்கினை கோப்பிகுல மக்கள் விமர்சையாக செய்கின்றனர். அன்றைய இரவுப் பூசையினை படையாண்டகுல மக்கள் சிறப்பாக நடத்துகின்றனர். திங்கட்கிழமை பகல் பூசையினை உலகிப்போடிகுடி மக்கள் அம்மனுக்கு விழா எடுக்கின்றனர். திங்கட்கிழமை மாலை வட்டுக்குத்துப் பூசையினையும் அதிகாலையில் இடம்பெறும் திருக்குளிர்த்தில் சடங்கினையும் காலிங்காகுல மக்களும், எருவில் வாழ்கின்ற மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சியடிப்படையில் வருடாவருடம் மாறிமாறிச் செய்கின்றனர்.

## 02. முக்கிய சடங்குகள் செய்யப்படும் முறைகள் :

### (அ) ஊர்காவல் பண்ணல்

திங்கட்கிழமை மாலை வேளையில் ஊர் காவல் பண்ணல் நிகழ்வு இடம்பெறும் கட்டாடியார் ஊர்காவல் அம்மனையும் பாளையையும் வேப்பிலையையும் தன் மார்பில் இரு கைகளாலும் அணைத்தவாறு செல்வார் அவருக்கு அருகில் உதவியாளர்களும், காவியம் பாடுபவர்களும் உடுக்கை சிந்த நிருவாகிகளும், அடியவர்களும் தீச்சுடர் ஏந்தியவாறு பிரதான எல்லைகளின் ஊடாக செல்வார்கள் வழக்குரைக்காவியம் பாடிக்கொண்டு செல்ல பாதைகளில் அடியவர்கள் நிறைகுடம் வைத்து அம்மனை வழிபடுவார்கள். முக்கியமான சந்திகளிலும் கெட்ட பிசாசுகளுள்ள இடங்களிலும் தேங்காய் வெட்டப்படும் கெட்ட ஆவிகள், பிசாசுகள், கெட்டதெய்வங்கள் ஊரில் நுழையாமல் தடுப்பதே ஆகும். ஊரிலுள்ள கெட்ட தெய்வங்கள், ஆவிகள், பிசாசுகளை விரட்டியடித்து தூய்மைப்படுத்துவதாகும். இதனூடாக ஆலயமும் தூய்மைப்படுவதுடன் இறைசக்தி கிடைக்கும் என நம்பப்படுகின்றது ஆலய திருச்சடங்கு காலத்தில் மக்கள் பய பீதியின்றி இரவுவேளைகளிலும் எந்த நேரங்களிலும் வீதிகளில் நடமாடித்திரிவார்கள். அத்தோடு அக்காலத்தில் கிராமத்தில் மச்சம், மாமிஷம் பூரணமாக தவிர்க்கப்படும் இதனால் கிராமம் தூய்மையடைகின்றது. இறை சக்தி பெருகின்றது.

### (ஆ) கதவு திறத்தல்

திங்கள் பின்னிரவு (செவ்வாய்க்கிழமை அதிகாலை) நான்கு மணிக்கு கதவு திறத்தல் பூசை இடம்பெறும் ஆலயத்தின் கருவறையின் கதவின் படிக்கட்டில் மடைவைக்கப்படும் ஆலய வண்ணக்கரிடமுள்ள திறப்பு மடையில் வைக்கப்படும் பூசை ஆரம்பமாகும். உடுக்கை, பறை ஒலியுடன் காவியம் பாடப்படும் தேங்காய் உடைக்கப்படும் ஆலய வண்ணக்கரால் கதவில் திறப்பு போடப்படும். பின்னர் காட்டாடியார் கோயிலை திறப்பார். கட்டாடியார் மாத்திரம் உட்செல்வார். அங்குள்ள பேழையை எடுத்து வெளியிலுள்ளவர்களிடம் காண்பிப்பார் பின்னர் கருவறை சுத்தப்படுத்தப்படும். கண்ணகியின் சிலையை பீடத்தில் உரிய இடத்தில் வைப்பார். பின்னர் மடை வைக்கப்பட்டு பூசை இடம்பெறும் இவ்வருடபூசை எந்தவித இடையூறுமின்றி இடம்பெற வேண்டுமென கண்ணகித்தாயை மன்றாடும் நிகழ்வும் இடம்பெறும். திருக்கதவு திறக்கும் பூசையினை பணிக்கொணாக்குடியினர் சிறப்பாக நடத்துகின்றனர். ஆலய நிருவாகிகளும் நிகழ்வில் பங்கேற்பர். பூசை முடிவுற்ற பின்னர் பணிக்கொணாக்குடியினரால் கண்ணகி வழக்குரை ஏடுதனை ஆரம்பித்து பாடுவது சிறப்பம்சமாகும். அத்தோடு திருச்சடங்கு முடிவுற்றதும் அவ் ஏட்டினை கட்டி பத்திரப்படுத்தி வைப்பதும் அக்குடியினரின் மரபாகும். உற்சவகாலத்தின் போது கண்ணகி வழக்குரை படிப்பது மரபாகும். இத்திருச்சடங்கு காலத்தில் பூசை தவிர்ந்த ஏனைய நேரங்களில் இருவரால் மாறி மாறிப் பாடப்படுகின்றது இது ஒரு சிறப்பம்சமாகும்.

கண்ணகித்தாயின் வாழ்வில் பலதுன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டன. அவளின் வாழ்வில் இருள் கௌவ்வியது. அவளது அவதார நோக்கம் நிறைவேறியதும் தெய்வமானவள். எனவே கதவு திறத்தல் மூலம் அவளின் வாழ்வில் ஒளி பிறக்கின்றது எனும் நம்பிக்கை ஏற்படுகின்றது அவளை வழிபடுவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது அதன் மூலம் அவள் மகிழ்வடைகின்றாள். எமக்கு அருள் மழை பொழிகின்றாள். எனவே கதவு திறத்தல் என்பது கண்ணகித்தாய்க்கும், எமக்கும் மகிழ்ச்சியளிக்கும் நிகழ்வாகும்.

### (இ) கன்னிக்கால் வெட்டுதல்

ஆலயத்தில் கன்னிக்கால் வெட்டுவதற்கான திருச்சடங்கு சனிக்கிழமை மாலை கண்டங்குடி மக்களால் சிறப்பாக நடத்தப்படும். ஆலயத்தில் பூசை முடிவுற்ற பின்னர் ஆலயத்தின் வடதிசையில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் கன்னிக்கால் (பூவரசை மரத்தை) வெட்டுவதற்காக புறப்படுவார்கள் உரிய இடத்திற்கு சென்று கன்னிக்காலாக வெட்டவுள்ள பூவரச மரத்தடியில் மடைவைக்கப்படும். பறை, உடுக்கை ஓசையுடன் வழக்குரைக் காவியம் பாடப்படும் பூசை இடம்பெறும் பின்னர் கட்டாடியரால் கன்னிக்கால் மூன்றுமுறை வெட்டப்படும் அதன்பின்னர் கண்டங்குடி தலைவரினால் கன்னிக்கால் வெட்டி வீழ்த்தப்படுகின்றது இச்சந்தர்ப்பத்தில் பெண்களினால் குரவை, அரோஹரா போடப்படும் பட்டாசுகள் கொளுத்தப்படும், வீழ்த்தப்பட்ட கன்னிக்காலினை கோப்பிகுல மக்கள் தாங்குவார்கள் அதை பக்குவப்படுத்துவர் (பிரித்தெடுக்கப்படுகின்ற பட்டைகளை எடுப்பதற்கு அடியவர்கள் முண்டியடிப்பார்கள் அவற்றை வீட்டில் சுவாமியறையில் வைத்து தீராத நோய்கள் வரும்போது தாயத்துக்களாக அணிவார்கள். நோய்கள் தீர்ந்துவருகின்றன.)

கல்யாணக்கால் வெட்டிய பின்னர் மீண்டும் மடைவைத்து பூசை இடம்பெறும். திருநீறு, சந்தனம், மஞ்சள் பூசப்படும் வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு தங்க தையல் ஊசியினால் தைக்கப்படும். கோப்பிகுல மக்களால் தோளில் சுமக்கப்பட்டு பவனிவரும் வீதியின் இருமருங்கிலும் நிறைகுடம் வைத்து அம்மனை வரவேற்பர் வழிபடுபவர் ஆடவர்கள் ஆடிப்பாடி வருவார்கள் ஊர் மக்கள் ஒன்று கூடிவருவர். பாரம்பரியமாகவுள்ள கல்யாண வாயிலான மேற்கு வாயிலினூடாக அவர்களினால் அமைக்கப்பட்ட கண்ணகியின் திருமணக்காட்சி வடிவமைக்கப்பட்ட வாயிலினூடாக வந்து ஆலயத்தை வலம் வந்து கல்யாண மண்டபத்திற்கு கொண்டு செல்வர். அங்கு நவதானியங்கள் இடப்பட்டு மண்டபத்தின் மத்தியில் நடப்படும் நான்கு பக்கமும் மேலும் நான்கு கால்கள் நாட்டப்படும் நடுவிலுள்ள கால் கண்ணகியாகவும், ஏனைய நான்கு கால்களும் அவருடைய தோழிகளாகவும் கருதப்படுகின்றன. அடியவர்களினால் வழங்கப்படுகின்ற அழகிய

சருகைச்சாறிகளால் கால்களும் ஆலயத்தின் மேற்குப்புற வாயிற்பக்கம் கல்யாண மண்டபமும் அலங்கரிக்கப்படும். இது கோப்பிகுல மக்களுடன் ஏனைய குடி மக்களும், ஆலய நிருவாக சபையினரும் இணைந்து கொண்டு அலங்கரிப்புப் பணியில் ஈடுபடுவது சிறப்பம்சமாகும்.

கண்ணகிக்கு சேலை உடுத்து சட்டை அணிவிக்கப்படும். பழவகைகள், பலகாரங்கள், இளநீர் கொண்டு அலங்கரிக்கப்படும். திருமணச் சடங்கிற்கு தயார்படுத்துவர். அதிகாலை கண்ணகியம்மனுக்கு கன்னிக் கழிப்பு எனும் சடங்கு இடம்பெறுவது மரபாகும்.

கண்ணகி மானிட பெண்ணாக அவதரித்தபோது திருமண வயதையடைந்ததும் திருமணம் செய்து கொடுப்பதற்கு பெண்பார்த்தல் நிட்சயார்த்தம் என்பன இடம்பெற்றன. அதேபோல் தமது அடியவர்களும் நடாத்தி கண்ணகித்தாயை மகிழ்ச்சியடையச் செய்வதற்காகவே இந்நிகழ்வை நடத்துகின்றனர். அவருடைய மனதைக்குளிர வைத்து அருளினை பெறுவதே நோக்கமாகும். கன்னிக்காலாக பூவரசமரம் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. பூவரசு என்பதை பூ அரசு என பிரிக்கப் படுகின்றது. பூ என்பது அழகானது மென்மையானது என பொருள் கொள்ளலாம். எனவே அழகானமரம் என பொருள்கொள்ளலாம் பெண்களை பூவுக்கும், அழகுக்கும் ஒப்பிடுவார்கள் எனவேதான் பூவரசமரத்தை கன்னிக்காலாக பயன்படுத்துகின்றார்கள். அத்தோடு பூவரச மரத்தின் பட்டையை உரித்ததும் அழகிய பெண்ணின் உடம்பில் மஞ்சள் பூசியதும் எவ்வாறு காணப்படுகின்றதோ அவ்வாறே பூவரசமரத்தை உரித்ததும் காணப்படுகின்றது. எனவே இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

## (ஈ) திருக்கல்யாணத் திருச்சடங்கு

திருக்கல்யாணத்திற்கு கண்ணகியும் தோழிகளும் அலங்கரிக்கப்பட்டு அழகுப்படுத்தப்பட்டது போல் கட்டாடியாரும் சேலை உடுத்து தன்னை அழகாக அழகுபடுத்துவார். கோவலனாக தன்னை கருதுவார். அதேபோல் கோயிலுக்கு வரும் அடியவர்களும் திருமணவீட்டிற்கு செல்லும் உணர்வோடு பட்டுச்சேலைகள் உடுத்தும் ஆபரணங்கள் அணிந்தும் செல்வர். ஆண்கள் அழகிய பட்டு வேட்டிகள் அணிவர். சிறுவர்களும் தங்களை அழகுபடுத்திக் கொள்வர்.

வழமையான பூசையுடன் திருக்கல்யாண பூசையும் இடம்பெறும் ஓமம் வளர்க்கப்பட்டு கண்ணகித்தாய்க்கு கோவலனால் (கட்டாடியாரால்) தாலி எடுத்துக்கொடுக்க வண்ணக்கரினால் மூன்று முடிச்சு போடப்படும். இச்சந்தர்ப்பத்தில் நிருவாகசபையினர் புடைசூழ்ந்து காணப்படுவர். குரவை, அரோகரா ஓசையுடனும் மேளதாள வாத்தியங்களுடனும் இந்நிகழ்வு இடம்பெறும் பின்னர் கல்யாணப்படிப்பு பாடப்படும் கோப்பிகுடித்தலைவரால் பன்னீர் தெளிக்கப்படும். சிறுமிகளால் சிலம்பு, அம்மனக்காய் குலுக்குதல் பிள்ளைவிற்று வாங்குதல் நிகழ்வும் இடம்பெறும். பின்னர் பிரசாதமாக பஞ்சாமிர்தம், பலகாரங்கள், வாழைப்பழம், தாம்பூலம் என்பன வழங்கப்படும் தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். இறுதியாக கோப்பிகுல மக்களால் தங்களுக்கு மச்சான், மச்சாள் முறையுள்ளவர்களுடன் மஞ்சள் குளிப்பு நடைபெறும்.

இல்லறம் என்பது திருமணத்திலே ஆரம்பிக்கின்றது. கண்ணகிக்கு பன்னிரண்டு வயதிலும் கோவலனுக்கு பதினாறு வயதிலும் திருமணம் நடக்கின்றன. கடல்வாணிபத்தில் ஈடுபடுகின்ற பெருஞ்செல்வந்தர்களின் திருமணம் முதிய அந்தணர் ஒருவரால் ஓமம் வளர்க்கப்பட்டு வைதீக முறைப்படி நடந்தது அதேபோல் சிறப்பாக திருமணமொன்றை நடத்துவதாக பாவனை பண்ணுவதே திருக்கல்யாணச்சடங்காகும். இதனால் அம்மனின் மனதைக் குளிரச் செய்து இறையருள்பெறுவதே நோக்கமாகும்.

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது அதாவது பொது மக்கள் மத்தியில் கண்ணகி பத்தினி (கற்புடைய) தெய்வம் என போற்றப்படுகின்றாள். இல்லறத் துக்குரிய கொள்கைகளிலிருந்து வழுவாது நடப்பவள் பத்தினி, கண்ணகி அப்படியே நடந்தவள் உதாரணமாக கோவலன் மாதவியுடன் குடும்பம் நடத்திய போது அவர்களுக்குரிய பொருட்களை அனுப்பியவள் கோவலனைத்தேடிச் செல்லாதவள். மீண்டும் கோவலன் வந்த போது மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே நாமும் இல்லறத்தை நல்லறமாக நடத்த வேண்டும் எனும் உணர்வை போதிப்பதே இந்நிகழ்வாகும்.

**(உ) வட்டுக்குத்துச்சடங்கு :**

வட்டுக்குத்துச் சடங்கு திங்கட்கிழமை மாலை வேளையில் இடம்பெறும் இச்சடங்கினை கலிங்ககுலமக்களும், எருவில்வாழ் மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சியடிப்படையில் வருடாவருடம் மாறிமாறிச் செய்வர். வட்டுக்குத்து இடம்பெறும் இடம் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மடிப்பிச்சை மூலம் பெறப்பட்ட நெல் மணிகள் காயவைக்கப்படும்.

அந்த நெல் பெட்டியிலிடப்பட்டு ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் அம்மனுக்கு பூசைமுடிந்ததும் அப்பெட்டிகளை வட்டுக்குத்து இடம்பெறும் இடத்திற்கு கொண்டுவருவர். கட்டாடியார் அம்மனைப்போல் பெண்வேடம் பூண்டிருப்பார். நெல்குற்றும் இடத்தில் மடை வைக்கப்பட்டு பூசைஇடம் பெறும் பின்னர் உரல், உலக்கைக்குப் பூசை செய்வார். இதன்போது வழக்குரைக் காவியம் பாடப்படும். நெல் உரலில் இடப்பட்டு உலக்கையால் கட்டாடியார் மூன்று தடவை குத்துவார் பின்னர் பூசை உபயகாரர்கள் குத்துவார்கள் அதைத் தொடர்ந்து அடியவர்களால் குத்தப்பட்டு விநாயகர்பானைக்கு இடக்கூடிய அரிசியாக மாற்றப்படும்.

**(ஊ) திருக்குளித்திச் சடங்கு**

திருக்குளித்திச் சடங்கு திங்கட்கிழமை அதிகாலை (செவ்வாய்க்கிழமை) இடம்பெறும் இச்சடங்கினை கலிங்ககுல மக்களும், எருவில்வாழ் மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சி முறையில் செய்வார்கள்.

**(எ) விநாயகர் பானை எழுந்தருளல்**

கோயில் மண்டபத்தின் வெளியில் விநாயகர்பானை பொங்கலுக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறும். புதிய மண்பானைகள் மூன்று வாங்கப்படும் அதில் ஒரு பானை அம்மனுக்குரியது. மற்றைய இருபானைகளும சிறிதாக காணப்படும். அவை மழுவரசனுக்கும் பிள்ளையாருக்கும்

உரியதாகும். மூன்று பானைகளும் மூலஸ்தானத்திலிருந்து அதிகாலை இரண்டு மணிக்கு முன் மண்டபத்திற்கு கொண்டுவரப்படும் இளநீரால் மூட்டப்பட்ட அடுப்பில் வைக்கப்படும் அம்மனுக்குரிய பானை நடுவிலும் பிள்ளையாருக்குரிய பானை கிழக்கு திசையிலும் மழுவரசனுக்குரிய பானை மேற்குப் பக்கமும் வைக்கப்பட்டு தீ மூட்டப்படும். கட்டாடியாரால் பால் ஊற்றப்படும் பொங்கிவரும் வேளையில் பச்சையரிசி இடப்படும். அம்மனுக்குரிய பானை கட்டாடியாராலும், ஏனைய இருபானைகளும் பூசை உபயகாரர்களால் பொங்கப்படும். பொங்கல் முடியும்வரை வழக்குரைக்காவியம் பாடப்படும்.

## (ஏ) திருக்குளித்திப்பாடுதல்

(சூரிய உதயத்திற்கு முன்) பின்னிரவு பட்ஷிகள் பூமியில் விழுவதற்கு முன் குளித்திபாடுவதற்குரிய வேலைகள் இடம்பெறும் திருக்குளித்தி பாடுதல் நிகழ்வு வெளிமண்டபத்தில் இடம்பெறும் உரல் வைக்கப்படும் அதற்குள் நெல் இடப்படும் மூலஸ்தானத்திலிருந்து தீர்த்தசட்டி கொண்டுவரப்பட்டு உரல் மேல் வைப்பர் வெள்ளைத்துணியினால் மூடிவிடுவர் அதன்மேல் ஏடு வைக்கப்படும் பின் ஏட்டினை கட்டாடியார் தலைவரிடம் கொடுப்பார். தலைவர் குளிர்த்திப்பாடல் பாடுபவர்களிடம் கொடுப்பார். கட்டாடியார் குறிப்பால் கூறியதும் இருவர் மாறி மாறிப் பாடுவார்கள்.

கட்டாடியார்ஊர்காவல் அம்மன் சிலையை பாளை வேப்பிலையுடன் மார்பில் அணைத்தவாறு தீர்த்தத்தை வேப்பிலையால் அம்மனுக்கும் பக்தர்களுக்கும் தெளிப்பார். இவ்வேளையில் பெண்கள் கற்பூரச்சட்டி எடுப்பார்கள். குரவை போடுவார்கள் குளித்திப்பாடல்கள் விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பமாகிக் கோவலன் கொலையுண்ட நிகழ்வு அம்மனின் பெருமை என்பவற்றைக் குறிப்பதாகவும் மதுரையை எரித்த கண்ணகியைக் குளிரச்செய்வதாகவும் அமைந்து இறுதியில் வாழிபாடுவதாக அமைந்துள்ளது. குளித்திபாடும்போது ஆலயத்தை மூன்று தடவை வலம் வருவர் இறுதியாக கட்டாடியாரால் வண்ணக்கர், தலைவர், மணியகாரர், செயலாளர் பின்பு ஆலய நிருவாகிகளுக்கு வெற்றிலை மூலம் தீர்த்தம் கொடுக்கப்படும் பின்னர் பூசை உபயகாரர்களால் அடியவர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

பின்னர் வேண்டுதல் இடம்பெறும் அதாவது இவ்வருட பூசையினை தங்களின் கருணையினால் தடையின்றி முடித்துவிட்டோம் எம்மக்களையும் கிராமத்தையும் எந்தவித கஸ்ரமில்லாமல் காப்பாற்றிக்கொள்ளம்மா என கட்டாடியார் வேண்டிக்கொள்வார். அத்தோடு நிருவாக சபையினரும் அடியவர்களும் மண்டியிட்டு வணங்குவர். பின் கருவறையிலுள்ள மடைபிரிக்கப்பட்டு பறைமேளம் அடிக்கப்பட்டு கதவு அடைக்கப்படும்.

பாண்டிய மன்னனையும், மதுரையையும் அழித்த கண்ணகி கோபக்கனலுடன் இடைச்சேரி செல்கின்றாள். இடையர்கள் வெப்பம் போக்க குடைபிடிக்கின்றனர். சாமரம் வீசுகின்றனர். குளிர்ச்சி பொருந்திய வாசனைத்திரவியங்களை பூசுகின்றனர். பந்தலிட்டு முக்கனிவர்க்கம், வெற்றிலை பாக்கு, பூ கொண்டுவந்து பரப்பி கும்பம் வைத்து வழிபடுகின்றனர். கொம்புமுறி நடனம் புரிகின்றனர். தாயே குளிர்ந்தருள்வாய் என வேண்டினர். கண்ணகித்தாய் குளிர்ச்சியடைந்தாள் என்ன வரம் வேண்டும் என கேட்டாள். மதுரை நகர் எரிந்து கொண்டிருக்கின்றது அக்கினியை தணிக்க அருள்மழை பொழிக எனவேண்டினர். கண்ணகித்தாய் சப்தமேகங்களை நினைத்ததும் மழை பொழிந்ததது அக்கினி தணிந்தது. எல்லோரும் மகிழ்ந்தனர். நான் வைகாசித்திங்கள் வருவேன் எனக்கூறி வானுலகம் செல்கின்றாள் வைகாசித் திங்கள் வருவேனென்று வரிசைக்கியைந்து விடைகொடுத்தாரே என குளிர்த்திப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

வைகாசித்திங்கள் என்பதில் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று வைகாசிப் பூரணையைக்குறிப்பது. மற்றையது வைகாசிப்பூரணையை சார்ந்து வருகின்ற திங்களைக் குறிக்கின்றது இவை திருக்குளிர்த்திச் சடங்கை குறிக்கின்றது.

எனவே நாம் தெரிந்தும், தெரியாமலும் செய்த குற்றங்களையும், குறைகளையும் பொறுத்தருள்வாய் தாயே குளிர்ந்தருள்வாய் என பிரார்த்திக்கும்போது எம்மீது இரக்கப்பட்டு அருள்மழை பொழிவாள் என்ற நம்பிக்கையில் திருக்குளிர்த்திச் சடங்கினை நடத்துகின்றோம்.

### தெளிசடங்கு

திருக்கதவு அடைக்கப்பட்டு எட்டாம்நாள் இடம்பெறும் சடங்கை தெளிசடங்கு என அழைப்பர். தெளிசடங்கினை ஆலய நிருவாக சபையினரால் வழங்கப்படும் பொருட்களின் உதவியுடன் கட்டாடியாரின் செலவில் இடம்பெறுவது சிறப்பம்சமாகும். திருச்சடங்கு காலத்தில் வழிபட முடியாதவர்களும், பொங்கல் பொங்குவதற்கு வாய்ப்பு கிடையாதவர்களும் தெளிசடங்கை பயன்படுத்துவர். அன்று பொங்கல், ரொட்டி நைவேத்தியமாக்கப்படும். மீண்டும் திருக்கதவு திறக்கப்படும். பேழையிலுள்ள அம்மன்சிலை பீடத்தில் வைக்கப்படும். அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும். நைவேத்தியம் படைக்கப்படும். அத்தோடு பரிவாரத்தெய்வங்களுக்கும் நைவேத்தியம் படைக்கப்படும். திருச்சடங்கு இடம்பெறும் பின்னர் அம்மனை வேண்டுதல் நிகழ்வு இடம்பெறும். கட்டாடியார் "உமது விருப்பப்படி இவ்வாண்டுச்சடங்கை நாங்கள் சந்தோஷமாக நடத்தி முடித்து விட்டோம். எதிர்வரும் காலங்களில் இவ்வூருக்கும், இவ்வூர் மக்களுக்கும் எந்தவித தீங்கும் வராமல் காத்தருளவேண்டும்." என வேண்டிக்கொண்டு பூப்போடுவார். அதைத் தொடர்ந்து எல்லோரும் பூப்போட்டு வணங்குவார்கள் பின் பீடத்திலுள்ள மடைகள் பிரிக்கப்படும். அம்மன் சிலையை பேழையில் வைத்து அடைக்கப்படும். கதவு மூடப்படும்.

தெளிசடங்கு வைரவர் பூசைஎன கொள்ளப்படுகின்றது. இதனால்தான் பொங்கல், ரொட்டி படைக்கப்படுகின்றது. திருச்சடங்கு முடிவுற்றதும் ஆலய எல்லையை காவல் செய்வதை வைரவரிடம் ஒப்படைக்கப்படும் நிகழ்வாகவே கருதப்படுகின்றது. அடுத்த வருட உற்சவம்வரை வைரவரே பாதுகாத்துக் கொள்வார்.

### (ஓ) சித்திரை வருடப்பிறப்பு பூசை

சித்திரை வருடப்பிறப்பன்று கருவறை திறக்கப்படுகின்றது. பேழையிலுள்ள அம்மனை பீடத்தில் வைப்பார். அம்மனுக்கு மருத்துநீர் வைக்கப்படும். அபிஷேகம் செய்யப்படும். மடை வைக்கப்பட்டு பூசை இடம்பெறும் ஆலய மணியகாரரால் கட்டாடியார் தலைவர், வண்ணக்கர்,

செயலாளருக்கு கைவிசேடம் வழங்கப்படும். பின் அடியவர்களுக்கு கைவிசேடம் கொடுக்கப்படும். மீண்டும் அம்மனை பேழையில் வைத்து கதவு சாத்தப்படும்.

நாம் சித்திரைப் பிறப்பன்று மருத்துநீர் வைத்து நீராடி, புதிய ஆடையணிந்து சைவிசேடம் பெற்று விருந்து உண்கின்றோம். அதுபோல மானிடப் பெண்ணாக பிறந்த காவிய நாயகிக்கும் மருத்துநீர் வைத்து அபிஷேகம் செய்து விரும்பிய பொருட்கள் படைத்து பூசைசெய்து கற்புடையாளை மகிழ்விக்கின்றோம். பத்தினித்தெய்வத்தின் கருணைமழை கிடைக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

### (ஓ) சித்திராப் பௌர்ணமி விரதம்

ஆலயத்தின் வெளிமண்டபத்தில் கோப்பிகுடி மக்களின் சின்னவப்போடி உடையாரின் வம்சத்தினரால் சித்திரா பௌர்ணமியன்று சித்திர புத்திரநாயனார் விரதப்பூசை இடம்பெறுகின்றது. பூசைக்குரிய பொருட்களாக பூசை உபயகாரர்களின் வீட்டிலிருந்து நெல் அளக்கும் மரைக்காலில் நெல்லுடன் பாக்கு, வெற்றிலை, எழுத்தாணி கொண்டுவரப்படும் இதை நிறைநாளி எனவும், நிறை மரைக்கால் எனவும் கூறுவர். அரிசி புடைக்கின்ற சுளகில் கொத்தோடு மாங்காய், குலையோடு தேங்காய், இலையோடு பலாக்காய் மற்றும் ஏழு மரக்கறியும் கொண்டு வரப்படும்.

நைவேத்தியமாக சித்திரக்கஞ்சி, பொங்கல், உப்பில்லாத ஏழு மரக்கறி என்பன படைக்கப்படும் சித்திரபுத்திரநாயனார் கதை படிக்கப்படும் அடியவர்கள் அமைதியாக இருந்து கதைகேட்பார்கள். அக்கதையில் நாம் செய்கின்ற வினைக்கேற்ப பிறப்பெடுக்கின்றோம். என்கின்ற வாழ்க்கை தத்துவத்தை எடுத்துக் கூறுகிறது. அடியவர்கள் இறந்த தாயின் ஆத்மசாந்திக்காக விரதம் அனுட்டிப்பர்.

சித்திரை மாதமும் சித்திரை நட்சத்திரமும், பௌர்ணமி திதியும் கூடும் இவ்விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் 365 நாட்களும் பூசை செய்த பலன் கிட்டும் எனக் கூறப்படுகின்றது இந்திரன் சிவனை நோக்கி விரதமிருந்து தீவினை நீங்கப்பெற்றான் என திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. நாம்விரதமிருந்தால் பாவகாரியங்கள் நீங்கி புண்ணிய சீலர்களாக வாழ்வோம். எனக் கூறப்படுகின்றது.

# வழிபாட்டு முறைகள்

மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள், நோய்கள் ஏற்படும் போது பொற்புடையாளிடம் வேண்டுதல் செய்வர். வேண்டுதல் பூர்த்தி செய்யப்பட்டதும் அல்லது வேண்டுதல் நிறைவேறாத வேளையிலும் வேண்டுதலை நிறைவேற்றித் தரும்படியும் வழிபாடுகளில் ஈடுபடுவார்கள் அவ்வழிபாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். மடைப்பெட்டி எடுத்தல், அடையாளப் பொருட்கள் கொடுத்தல், தீச்சட்டி ஏந்துதல், காவடி எடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், அங்கப்பிரதட்சனை செய்தல், அள்ளுகாணிக்கை வழங்குதல், வாயலகு எடுத்தல், பிள்ளைவிற்று வாங்கல், அம்மானைக்காய், சிலம்பு, கிலுக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் முக்கியமானவற்றை பார்ப்போம்.

## (அ) மடைப்பெட்டி எடுத்தல் :

சிலம்பின் செல்விக்கு பதினைந்து திருச்சடங்கினை நடாத்துகின்ற பதினைந்து குடியினரும் மடைப்பெட்டி எடுக்கும் நிகழ்வை சிறப்பாக நிகழ்த்துவதைக் காண்கின்றோம். அம்மன் பூசைக்குரிய மங்கலகரமான பொருட்களான பழவகைகள் அபிஷேகப் பொருட்கள் அடங்கிய பெட்டி, மடைப்பெட்டி என அழைக்கப்படுகின்றன. தங்களின் சாகித்ய மக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வளமான வாழ்வு கிடைக்க வேண்டும். என்பதற்காக அம்மனை பிரார்த்திப்பதற்காக மடைப்பெட்டி கொண்டு செல்கின்றனர்.

அம்மனுக்கு பகல் பூசை செய்பவர்கள் அதன் முதல் நாள் இரவிலும், இரவுப்பூசை செய்பவர்கள் அன்றைய பகல் வேளையிலும் மடைப்பெட்டி எடுப்பார்கள். ஒவ்வொரு குடியினரும் ஒவ்வொரு ஒன்றியங்களை அமைத்துள்ளனர். அதற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் என நிருவாக சபையுண்டு. அவர்களே பூசைக்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பர்.

மக்கள் தங்களின் உட்பகைகளை மறந்து "குடி" என்ற ரீதியில் ஒன்று படுகின்றனர். சுழற்சிமுறையில் தங்கள் குடியின் வகுத்துவார் (குடும்பம்) என்ற ரீதியில் மடைப்பெட்டி எடுக்கும் முறையை பின்பற்றுவர். பூசைப்பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் எல்லோரும் இணைந்து ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் சாப்பிடக் கூடியவாறு அறுசுவை உணவு தயார்ப்படுத்தப்படும். குடிமக்களும் உறவுரீதியான ஏனைய குடியினரும், நிருவாக சபையினரும் ஆலயத்தில் தொண்டூழியம் புரிபவர்களுக்கும் உணவு வழங்கப்படும் எல்லோரும் மகிழ்வுடன் உண்பார்கள்.

பூசைப்பொருட்கள் ஓலைப்பெட்டிகளில் வைக்கப்படும். அவை வெள்ளைச் சீலைகளால் கட்டப்படும் குடியிலுள்ள அனைவரையும் உள்ளடக்கியவாறு பெட்டிகள் பொறுப்பளிக்கப்படும். வெள்ளைச்சீலை மேல் தட்டியாக விரிக்கப்பட்டு அதற்குள் நிறைகுடம், குத்துவிளக்கு, மடைப்பெட்டிகள், வாழைக்குலைகள், காவு போன்றவை ஒழுங்கு படுத்தப்பட்டு ஆலயம் நோக்கிச் செல்வர். பெண்கள் குரவை, ஆரோஹரா ஓசை எழுப்புவார்கள் பட்டாசுகள் கொளுத்தப்படும் மேளதாளங்கள் பறை ஓசை இசைக்கப்படும் ஒலிபெருக்கியினால் அம்மன் பாடல்களை ஒலிபரப்புவார்கள். இளைஞர்கள், சிறுவர்கள், ஆடிப்பாடிச் செல்வார்கள். ஆலயத்தை சென்றடைந்ததும் ஆலயத்தை வலம் வருவர். ஆலய பரிபாலன சபையினரும் தொண்டூழியர்களும் ஆலய முகப்பில் வரவேற்பார்கள் அவர்களிடம் மடைப்பெட்டி ஒப்படைக்கப்படும் அடியவர்களுக்கு விபூதி, சந்தனம், தீர்த்தம், பிரசாதம் வழங்கப்படும்.

பின் பூசையில் பங்கேற்பவர்கள். தங்களின் குறைகளையும் மனச்சுமை களையும் அம்மனிடம் வேண்டுவார்கள். அம்மன் அவர்களின் வாழ்வை மேம்படுத்துவார். மடைப்பெட்டி எடுக்கும் நிகழ்வு நாங்கள், எமது எனும் உணர்வை ஏற்படுத்துகின்றது. சமூக ஒற்றுமையையும் கூட்டுப் பொறுப்பினையும், சமூக ஒத்திசைபையும், ஏற்படுத்துகின்றது.

### (ஆ) அடையாளப் பொருட்கள் கொடுத்தல் :

தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும் காப்பாற்றிய காவிய நாயகிக்குரிய பூசைப்பொருட்களும், ஏனைய

பொருட்களும் அடையாளப் பொருட்களாகக் கொடுக்கப்படுகின்றது. உதாரணமாக வெள்ளி தங்கத்தினால் செய்யப்பட்ட கண், பாதம், சிலம்பு, அம்மனக்காய், மாலை போன்றவைகளும் சாறி, தென்னம்பிள்ளை, கோழி, ஆடு, மாடு போன்றவைகளையும் குறிப்பிடலாம். மக்கள் உரிமையோடு கொடுக்கல் வாங்கல் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். எங்களுக்கு சுகத்தையும், இன்பத்தையும் தந்தால் நாம் உனக்குரிவற்றை தருகின்றோம் என வழிபடுவதைக் காண்கின்றோம்.

### (இ) காவடி எடுத்தல் :

ஆண்கள் கண்ணகிக்காக திங்கட்கிழமை மாலைப்பொழுதில் காவடி எடுக்கின்றார்கள். சிறுவர்கள் பாற்காவடியும், பெரியவர்கள் முள்ளுக்காவடியும், பறவைக்காவடியும் எடுப்பார்கள் வாயலகு போடுவார்கள் எருவில் சிவனார் மடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலும் எருவில் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்தும், அரசடி பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் கோடைமேடு உச்சிட்டப் பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் காவடி எடுப்பதற்கான உருவேற்றும் நிகழ்வும் இடம்பெறும் காவடி எடுப்பவர்களும், வாயலகு எடுப்பவர்களும் அதற்கு முதல் நள்ளிரவு, கோயிலுக்குச் சென்று உபவாசமிருப்பார்கள் உருவேற்றப்படும். மத்தள இசைக்கேற்ப ஆடிப்பாடுவார்கள் நூற்றுக்கு மேற்பட்ட காவடிகள் பவனிவரும்.

ஒவ்வொரு ஆலயங்களாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவார்கள் இறுதியாக கண்ணகியம்மன் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தை வலம் வந்து ஆலயத்தின் பின்புற வீதியில் உடம்பில் பாய்ச்சிய முட்கள் கழற்றப்படும். அம்மனின் விபூதியை முள் ஏற்றிய இடத்தில் பூசுவார்கள் காவடி எடுத்தல் நிகழ்வு மெய்சிலிக்க வைக்கும் நிகழ்வாகும்.

காவடி எடுத்தலின் ஆரம்பத்தை நோக்கும்பொது சூரனின் குருவான இடும்பன் அகத்தியரின் ஆணைப்படி திருக்கைலையிலிருந்து சிவமலை, சக்திமலை எனும் இரு மலைகளைத்தன் தோள்களில் சுமந்து

இறைவனை வழிபட்டதிலிருந்து ஆரம்பமானது இது பக்தியின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. எனது உடல்,—உயிர் அனைத்தையுமே உன்னிடம் ஒப்படைக்கின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றது.

### (ஈ) கற்பூரச்சட்டி எடுத்தல் :

கற்பூரச்சட்டி எடுத்தல் அல்லது தீச்சட்டி ஏந்தல் வழிபாடு கண்ணகி யம்மன் வழிபாட்டோடு தொடர்பானது. பெண்கள் உபவாசமிருந்து இந்நிகழ்வில் பங்கேற்பர். திங்கட்கிழமை மாலை வட்டுக்குத்து பூசை இடம்பெறும் போதும், திருக்குளித்திபாடுதல் நிகழ்வு இடம்பெறும் போதும் தீச்சட்டி எடுப்பார்கள் தலையிலே வேப்பிலை வைத்து புதிய சட்டியினை அதன்மேல் வைத்து அவருக்கு உதவியாக வருபவர் சட்டியினுள் கற்பூரத்தையிட்டு தீயிடுவார்கள் ஆலய உள்வீதியை வலம் வருவார்கள்.

கண்ணகித்தாய் தீயினால் தீயவற்றையழித்து நல்லவற்றைக் காத்தவள், எனவே எமது தீமைகளை இல்லாமல் செய்து நன்மைகளை தந்தருள்வாய் என தாயை வேண்டியே தீச்சட்டி எடுக்கின்றோம். அத்தோடு நாம் தீமைகளை செய்ய மாட்டோம் நன்மைகளைச் செய்வோம் என திடசங்கற்பம் எடுப்பதாகவும் தீச்சட்டி ஏந்தல் நிகழ்வு இடம்பெறும்.

### (உ) அங்கப்பிரதட்சணம் செய்தல் :

ஆண்கள் உபவாசமிருந்து காவியுடைதரித்து நீராடி திருநீரு தரித்து உருத்திராக்க மாலை கழுத்தில் அணிந்து கொண்டு கைகளில் முடித்தேங்காய் பிடித்தவாறு உடலின் எல்லா அங்கங்களும் நிலத்தில் படுமாறு உள்வீதியில் உருண்டு செல்வதே அங்கப்பிரதட்சனை என்கின்றோம். இந்நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையிலும் திங்கட்கிழமை அதிகாலைப் பொழுதிலும் இடம்பெறும்.

ஆலயங்கள் பெரிய மகான்கள், முனிவர்கள், தேவர்கள் வழிபட்டதலமாகும் பல முனிவர்கள் வழிபட்டு அவர்களின் பாவ

விமோசனம் பெற்ற இடமாகும். எனவே அவர்களின் பாதம் பட்ட புனிதத்தன்மையாலும், இறைவனின் தெய்வீக அருள் நிறைந்த இடத்தில் எமது உடல் படுகின்றபோது எம்பாவங்கள் அகலும் நற்பயன் கிடைக்கும் என்பதற்காகவே அங்கப்பிரதட்சனை செய்கின்றோம்.

**(ஊ) மடிப்பிச்சை எடுத்தல் :**

திருமணமான, திருமணமாகாத பெண்கள் உபவாசமிருந்து திங்கட்கிழமை காலையில் தங்களால் விரும்பப்படுகின்ற ஏழுவீடுகளுக்குச் சென்று “கண்ணகியம்மன் பேரால் மடிப்பிச்சை தாருங்கள்” என கேட்பார்கள் வீட்டுக்காரர்கள் பாத்திரமொன்றில் நெல் கொடுப்பார்கள் அதனை தங்களுடைய சேலைத்தலைப்பாகிய மடியில் இடுவார்கள். வீட்டுக்காரர்களுக்கு விபூதி, சந்தனம், வேப்பம்பத்திரம் என்பன கொடுப்பார்கள். இவ்வாறு ஏழு வீட்டுக்குச் சென்ற பின்னர் நெல்லை மடியில் ஏந்தியவாறு ஆலயத்தை வலம் வந்து நெல்லை காய வைக்கின்ற இடத்தில் இடுவார்கள்.

**(எ) பாளை விற்பனை செய்தல் :**

ஆலயத்தின் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி திருக்குளிர்த்தி பாடும் வரையுள்ள காலப்பகுதியில் பூசை ஆரம்பிப்பதற்கு முன்னரும், பூசை முடிந்த பின்னரும், பாளை விற்பனை நிகழ்ச்சி இடம்பெறும் பாளை விற்பனை நிலையத்தில் பதிவாளர்களும் அறிவிப்பாளர்களும் இருப்பர்கள் அங்கு ஆலய நிருவாகத்தால் ஒப்படைக்கப்பட்ட வட்டாமடை காணப்படும். இதில் கமுகம்பாளை, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, பூ என்பன பட்டுத்துணியினால் மூடிக்காணப்படும். அன்றைய பூசையினை நடாத்தும் குடியின் தலைவர் பாளைவிற்பனையை ஆரம்பித்து வைப்பார் அதன்பின் அடியவர்கள் பணம் செலுத்துவார்கள். இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் தனது குடும்பத்தினருக்காகவும் உற்றார், உறவினர்களுக்காகவும் கண்ணகியின் அருள் வேண்டி பாளைக்கு மக்கள் போட்டி போட்டுக்கொண்டு பணம் செலுத்துவார்கள்.இறுதியில் அம்மனுக்கு சாத்துகின்ற பாளைக்கு உரிமை கொண்டாடுவதில் கடும் போட்டி

நிகழும் நிருவாகத்தினரால் இரகசியமாக நேரம் கணிப்பீடு செய்யப்பட்டு அலாரம் ஒலிக்கும் போது யாருடைய பெயர் ஒலிபெருக்கியில் கூறப்படுகின்றதோ அவரே பாளைக்கு உரிமையாளராக கருதப்படுவர். அவரிடம் பாளை ஒப்படைக்கப்பட்டு பறைமேளத்துடன் ஆலயம் வலம் வந்து அம்மனுக்கு பாளை சாற்றப்படுவது சிறப்பம்சமாகும். இப்பாளை விற்பனை மூலம் ஒரு இலட்சத்தை விட கூடுதலான பணம் அன்பளிப்பாக கிடைக்கின்றது.

**(ஏ) கலை கலாசாரம் :**

கண்ணகித்தாயின் திருச்சடங்கு காலத்தில் தமிழர்களின் கலை கலாசாரம் பேணப்படுவதைக் காண்கின்றோம். ஆண்கள் வேட்டியும் சால்வையும் அணிந்து கொண்டு தினமும் ஆலய தரிசனத்தில் ஈடுபடுவதையும், திருமணமானவர்களும், கன்னிப்பெண்களும், பட்டுச்சாறிகளும், சருகைச் சாறிகள் அணிந்து தலையில் பூவைத்து ஆபரணங்கள் அணிந்து கொண்டு ஆலய தரிசனத்தில் ஈடுபடுவதையும் சிறுமிகள் பாவாடை சட்டையுடன் ஆலயம் செல்வது சிறப்பம்சமாகும். ஆலயங்களின் வாயில்களிலும், வீதிகளிலும் தோரணங்களும், சோடினைகளும் காணப்படும்.

நகரின் நான்கு திசைகளிலும் ஒலிப்பெருக்கி பொருத்தப்பட்டிருக்கும், கண்ணகி காவியங்கள் கண்ணகிவழக்குரை காவியம், காவடிச்சிந்து, அம்மன் பாடல்கள், கூட்டுவழிபாடுகள், சமய சொற்பொழிவுகள், கும்மி, கோலாட்டப் பாடல்கள், ஒலிபரப்பப்படும். அவை பக்தியினை ஏற்படுத்தும் உடுக்கை, மணி, பறைமேளம், மேளதாளங்கள், நாதஸ்வரங்கள் போன்ற இசைக்கருவிகளின் ஓசைகள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் இவையெல்லாம் ஒன்றினைத்து பக்திச் சூழலை உருவாக்குகின்றது

கண்ணகியம்மன் திருச்சடங்கு காலத்தில் உள்ளூர், வெளியூர் கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் ஆலயத்தின் வெளிவீதியில் அமைந்துள்ள பூம்புகார் அரங்கில் மேடையேற்றப்படுகின்றன. அதில் புராண இதிகாசநாடகங்கள் நாட்டுக் கூத்துக்கள், கரகங்கள், கும்மிகள்,

கோலாட்டங்கள், வசந்தன் கூத்து என பல கிராமிய கலைப்படைப்புக்கள் இடம்பெறும் அத்தோடு நகைச் சுவை நாடகங்கள் இசை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறுகின்றன.

## (ஐ) கண்ணகியம்மனின் திருச்சடங்கு காலத்தில் பின்பற்றப்படும் மரபுகள

01. கண்ணகியம்மனின் வருடாந்த உற்சவம் பற்றி அறிவிக்கும் பொதுக்கூட்டம் இடம்பெறுவதற்கு முதல் நாளிரவு மருத்துவக்குடியினரால் தெருச்சந்திகளில் பலர் ஒன்றுகூடி கூட்டறிவித்தலை வாய்மொழி மூலம் அறிவிப்பார்கள். ஆனால் கடந்த 1990க்குப் பின்னர் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கின்றனர்.

02. வீடுகளும் வீதிகளும் சுத்தப்படுத்தப்படும் வீடுகளுக்கு நிறப்பூச்சு அடிக்கப்படும்

03. திருச்சடங்கு காலத்திற்கு முன்னரே மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், அரிசிமா என்பன இடித்து வைக்கப்படும்.

04. உற்சவ காலங்களில் பதார்த்தங்கள் பொரித்தல், இடித்தல், துவைத்தல், வறுத்தல், ஊசிநூல் கொண்டு தைத்தல் (கன்னிக்கால் வெட்டும்வரை) தூர இடங்களுக்குப் பயணம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடமாட்டார்கள்.

05. ஆலயத்திற்கு அண்மித்துள்ளவர்களுக்கு பிள்ளைப்பேறு, பூப்பூவெய்தல், வீட்டுத் தொடக்கு ஏற்படும் போது கோயிலுக்கு தூர உள்ள இடங்களிலுள்ள உறவினர்களின் வீடுகளில் தங்குதல்.

06. திடீரென மரணச்சம்பவங்கள் ஏற்படின் ஆலய உற்சவத்திற்கு பாதிப்பு ஏற்படாது எளிமையாக அடக்கம் செய்தல்.

07. திருச்சடங்கு காலத்தில் வீடுகளில் மங்கலகரமான நிகழ்வுகளையோ வைரவர் பூசை, சக்கரை அமுது (அம்மாளுக்குப் பூசை செய்தல்) போன்றவற்றை தவிர்த்துக் கொள்வர்.

## உசாத்துணைகள்

**வாய்மொழிமூல தகவல்கள்**

01. திரு.மா. சுந்தரலிங்கம், தலைவர், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்.

02. திரு ஐ. சுப்பிரமணியம், (J.P)ஓய்வுநிலை நிருவாக உத்தியோகத்தர்

03. திரு. சோ.பவளசிங்கம் (ஆலய பரிபாலனசபை உறுப்பினர்)

04. திரு.சோ.தினகரன்பிள்ளை, மணியகாரர், ஆலய பரிபாலனசபை

05. திரு.க. விவேகானந்தராஜா (முகாமைத்துவ உதவியாளர்)

நூல்கள்

06. கிழக்கிலங்கை சடங்குகள் திரு வ. இன்பமோகன்

**கல்யாணப் படிப்பு**

எமது ஆலயத்தில் திருக்கல்யாணச் சடங்கை நடாத்தும் கோப்பி குல மக்களால் கல்யாணக்கதை படிக்கப்படுவது மரபாகும். அது அவர்களால் மாத்திரமே பாடப்படும் இதன் காரணமாக அவ்வேட்டுப்பாடல்களை பிரசுரிக்கவில்லை அவ்வேட்டில் கல்யாணக்கதை யாரால் எழுதப்பட்டது எனக் குறிப்பிடப்படவில்லை. அவ்வேடு பழுதடைந்தமையால் எருவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஐயரின் புத்திரன் ஆறுமுகன் என்பவரும், கணபதிப்பிள்ளை வைத்தியரின் புத்திரன் கிருஷ்ணபிள்ளை வைத்தியரும் பெரிய போடியாரின் புத்திரன் மாரிமுத்து என்பவர்கள் மூவரும் சுவடியை களுதாவளை கந்தப் பெருமான் பெரியதம்பி சாஸ்திரி என்பவரிடம் சுவடு எழுதி நிறைவேற்றும்படி அனுமதித்ததால் 1949.05.09ந் திகதி எழுதி நிறைவேற்றியதாக ஏட்டுப் பிரதி குறிப்பிடுகின்றது.

**மூலாதாரம் : ஏட்டுப்பிரதி**
**திரு.க.அற்புதராஜா**
**வண்ணக்கர் ஆலய பரிபாலன சபை.**

# வழக்குரை காவியம்

**திருச்சிற்றம்பலம்**

**(இக்காவியம் ஊர் சுற்றிக் காவல் பண்ணல், திருக்கல்யாணச் சடங்கு, விநாயகர் பானை எழுந்தருளப்பண்ணல், விநாயகர் பானை பொங்கும் சந்தர்ப்பங்களிலும் பாடப்பட்டு வருகின்றது)**

01. திருமருவு கைலாய மலையின் மிசை நிலவு புனை
சிவனும் உமையவளுமொரு சிங்காசனத்தில்
மருவு பொழுதுமையவ ளெழுந்தடி பணிந்து
வள்ளலே மதிமரபில் வந்த தமிழ் மாறன்
வெருவுதலில்லாமலே வருநுதலின் விழி கண்டு
வெட்கினேன் எனதுயர் விடையருளுமென்ன
தருமருவு மிதழி செந்தாமசேகரனும்
தையலுன் மன நினைவு தரமுயலுமென்றார்.

02. முயலுமென விடைகொடா தவசிடையிருந்தே
முயல் வடிவில் மதியணையமுகமது சிறந்து
அயலில் வரு நாகமங்கையென்னும் மணங்கை
அன்பினுடனே திருக்கண்ணருள் சுரந்து
புயல முன்னாள் விலங்கிட்ட மதுரேசன்
பொன்னுலவு நெற்றிக் கண்ணை மறை என்றார்
மயலறவுரைத்தினிது சட்டையெடு கனல்வந்து
மணி மடிதரித்தரசன் மதுரை எரி என்றார்.

03. என்ற பணி விடைகொண்டு கைலயங் கிரிநின்
நிறங்கியே விண் தெய்வலோ கத்திருந்து
தண்டரளத் திருமார்பன் முத்து மாளிகையிலொரு
சறடு கொண்டிளைகள் நூல் ஏணிதனில் இறங்கி
துன்ற மீனக்கொடிகள் வழுதிதிரு வாசலில்
சூதமாவின் கனிய தாய் உதித்தமயால்
இன்று மாயோர் தமக்கென்றருளியேதான்
இனிதானனுதலில் விழிதனை மறைத்தவளே.

04. தவமனைய நுதலில் விழிமறையவும் குலவழுதி
தன்கையில் கனிதனைக் கொடு நடத்தே தான்
நவமணி பொன்னிலகு முத்து மாளிகையிலொரு
பொற்பேழை நடுவறையில் மூடிவைத்தந்த நாள்
பவனமுற மற்ற நாளிற்றிறந்தே வழுதி
பார்த்த பொழுதே மதலையாய்க் குரவை கண்டு
கவலை யாய் கணிதரை அழைத்திதென மாயம்
கட்டுரையுமென்ன அவர் கட்டுரைத்தனரே.

05. கட்டழகு தருமதலை தன்னால் உன்னரசுரிமை
கண்ணழகும் உம்முடைய கமழ் மதுரை நகரும்
கெட்டிடுமெனக் கணிதர் சொன்னதையறிந்து
கிரணமணியால் பசும் பொன்னால் சமைத்த
பெட்டக மதுட்பட அமைத்துநதி வைகையாம்
பேராற்றிலே விடவும் நீரோட்ட வழியால்
மட்டற மிதந்து வந்தலை கடலிற் றோன்றி
மானாகர் மகளாக வளர்ந்த மாதாவே.

06. மானாகர் மகளாக வளர்கின்ற நாளில்
வலியகொரு விடையரவின் மணிபுனைவள் என்று
மேனாளிலுள்ள படி அறிந்து மானாகரும்
வேல்வனவனைத்தொழுது விண்ணப்பமென்றார்
தேனாரென் மகளுக்கு நாகமணி உள்ளீடு
சிலம்பில்லாது வதுவை செய்யொண்ணா தெனவே
கானாறுதாதாகி புயவளவர் கோனும்
மீகாமனையழைத்து நற்கன வரிசை செய்தார்

07. செய்து சில கப்பல்கள்கொடுத்தவர் விடுத்தார்
செத்தவர் கிழைக்கவரம் உத்தமியளித்தாள்
எய்து நரகிற் புகுத் பேர்கள் அனைவோரும்
ஈடழிவு இல்லாமலே நாகமலை சென்று
பையரவினைத் தொழுது நாகமணி தன்னைப்
பாலித்து வேண்டியவர் ஆலித்து மீண்டு
துய்ய புகழ் வளவள் முன் வைத்திட மகிழ்ந்தே
தொல்வரிசை மீகாமனுக்கருளி விட்டார்

08. விட்டு நல்ல வணிகர் குல மானாகர் மகளுக்கு
மிகுநாக மணிகொண்டு மகிழ் வோடு நல்கி
எட்டோடிரண்டரைக்குள்ளான பசும்பொன்னால்
சிலம்பிற்கு நாகமணி உள்தரிசிஇட்டு
திட்டமுடனே பொருள்வழங்க மாசாத்தார்
சிறுவனாங் கோவலற்கே மணமுடித்து
மட்டுலவு செந்திருவும் மாலுமயனும் போல்
வையகம் மதிக்கஅவர் வாழ்ந்திருந்தனரே

09. வாழ்பொழுது சோழன்முன் நாடகம் நடிக்கும்
மாதவி தன்னால் மனது கோவலர் மயங்கி
நாள் ஒர் இரவக்காஆயிரத் தொண் களஞ்சிப் பொன்
நல்கிஉள கைப்பொருள்கள் பற்றற இழந்து
வாளரவின் மணியீடு சிலம்பாகுதல் விற்க
வாங்குவாரில்லையென மதுரை நகர் சென்று
நீள் தெருவில் விலை கூறி வரு கோவலன் தன்னை
நேர் கண்டு தட்டானும் நின்றெதிரே சொல்வான்

10. சொல்லரிது விலையிதற் கல்லாது கடல் வழுதி
தொல்லுலகில் உள்ளவர்கள் எவர் தருவர் உண்டோ
நல்லமணி வாசலன காகநீர்வாரும் இதை விற்று
நான்தருவேன் என்று கொடு போந்த கம்மாளன்
தொல்லை முன்னால் விலங்கிட்ட மதிரேசன்
தேவி புனை பரிபுரத் திருடன் இவனெனவே
கொல்லும் நீர் கள்ளவன் இவனென்று தட்டானும்
கும்பிட்டு நின்றபடி கொற்றவன் உரைத்தான்.

11. கொற்றவனும் நம்முடய சிலம்போ இதுவல்ல
குல மனைவி கையில் கொடுத்தறியுமென்று
சித்தமொடுரைக்க அவர் செம்பொற் சிலம்பை
தேவி நிகர் பாண்டிமா தேவி கையில் வாங்கி
மாற்றெனது பரிபுரமுமல்ல இது நாகமணி
மண்ணிலுள்ளோர் புனையவுந் தலை பெறாது
செப்பிடிர் மன்னக்கு என வந்த சேடியரகள்
சொல்லினர் கம்மியனும் அல்லவே என்றான்.

12. அல்லவே செய்தொழில் அடியேனறியேனோ
அண்ணலே பெண்மதியினாலவர் உரைத்தார்.
கொல்லும் நீர் கள்வனிவனென்று தட்டானும்
கும்பிட்டு நின்றபடி கொற்றவர் மயங்கி
வல்லசுர மேகநாதனை அழைத்திங்கு இவனை
வதையுமென மதயானை வதையாததாலே
கல்லின் மேல் கனமழுவினால் பிளப்பித்த
காரணங் கனவினிை கண்ட கண்ணகையே.

13. கண்ணருவி களபமுலை கருகி விழயாயரிட
கடிமனையகன்று தெரு மருங்கிலே நடந்து
தண்ணமரு நிழல் வேங்கை தன்னிலிரு பிளவான
தன்கணவனைக் கண்டு கண்களிலறைந்து
மண்ணதனில் வீழ்ந்து கணவாகோவெனவே
மரணமுறவேவந்த வகையறியவே தான்
விண்ணுலகுதனை நினைந்தே பொன்னின் நூல் ஊசி வாங்கி
மீளவு மெடுத்துயிரை மீட்டபத்தினியே.

14. மீட்டுயிரை வரலாறு சொல்லுமெனவேதான்
வினவ வருங் கோவலர் விழித்தினி துரைக்க
கேட்டுருவி நூலை நிழலில் கிடவுமெனவே
கிரணமணி யார் சிலம்பொருகை தனில் ஏந்தி
நீட்டு தெருவிற்குளை வலக்கையிடை சென்று
நெற்றியில் கண்ணிடை நெருப்பு மழை தூவ
பாடடொலி மதிற்பரவு வேம்பணி புயத்தான்
பார்த்தீபனிருந்த திசை பார்த்து வந்தனளே

15. வந்து தலை வாசல்தனில் நின்றவளழைக்க
வழுதியு மெழுந்து திருவாசல்தனில் வரவே
கொந்தளக மயிர்குலைய நின்ற மயில் கண்டு
கொலைகாரனோ கொடுங்கோல் அரசன் நியோ?
என் கணவனைப் பிளப்பித்தவனும் நீயோ
இச்சிலம்புக்கு இணைச் சிலம்பெங்கே?
தந்துபாருனதேவி தனதோ இது எனதோ
சபையில் உள்ளோர் களிதைத் தாமுரையுமென்றார்.

16. தாமுரையுமென்று கயல் நூபுர எடுத்து
தரைதனில் அடித்திட தகர்ந்தது நெருப்பாய்
பொன் பொரி போல் அணி வகை தெறித்துப்
புரவலர் நடுங்கியுயி போய்க் கதவடைத்தார்
தன்னருகில் நின்ற தட்டானையு மெரித்து
தடமுலை தனைத் திருகி எறிய அது சென்று
மீனவனடைத்தகந் கதவேளையும் உடைக்க
வேந்தன் மணி மார்புருக வீழ்ந்துயர் இழந்தான்

17. வீழ்ந்துயிரிழக்கமது ரேசனை அழித்தும்
மெல்லியர் தம் மனதிலுறு கோபமமையாமல்
காய்ந்த கனலிட்டு மதுரைப் பதி எரித்த
கன்னிவரு போதிடையர் கன்னியர் பணிந்து
வேந்தனை அழிக்க வென்றே திருகு கொங்கை தனி
வெண்ணெய்தனை அப்பியவர் கண்ணுறவணங்கி
போந்த பொழுதே சீத்தலைச்சாத்தாரும் வந்து
பூவையே நின் கோபம் ஆறிவிடுமென்றார்.

18. ஆறிநின்றே தெய்வலோமதை நோக்கினாள்
அங்குநின்றெழு பெண்களப் போதிறங்கி
மாறுல்வுகைக்குளை அவர்கினிதளித்து
மாதரொடு கூடி நல் மஞ்சள் நீராடி
தாறுமலர் சூடி நல்ல பாக்கிலை அருந்தி
தையல் நின்றம் மானை தானாடியேதான்
மாது திருவுள்ளம் குளிர்ந்திருந்தாள் இந்த
மண்ணிலுள்ளவர்கள் மிக வாழவென்றேதான்.

19. வாழவென்றே அபயபதமோடு வனிதிவாளை?
வாவிவாழ் செங்கழுநீர் மலருட நிருப்ப
தாள் கொண்ட சீத்தலைச் சாற்றுவார் வந்து
தம்மாலே இவ்வுலகமீடேற வேணும்
நாளும் நீர் புவி வரு நாள் ஏதெனப் புகல
நண்ணுதல் வைகாசிதனில் நான் வருவேனென்று
நீழும் ஒரு கலை மண்ணிலே தான் நிறுத்தி
நேரிளையும் வானுலகமேறி நின்றனளே

20. நேரினை தன் ஒரு கலை நான்கு கலையாகி
நிலவு போலே நின்று நிறை பூசை கொண்டு
பாரிலுள்ளோர்களிட நோய் பிணி தவிர்த்து
பக்தி செறி தம்பிலுவில் ஊர்தனிலிருந்து
ஏர்செறியும் ஐங்கோணாமைக்கடவை நகர்எருவில்
பட்டிமேடுயர் செட்டிபாளையம் வந்தாறுமூலை
பேரான காரைநகர் எங்கணும் மிருந்து
பெருமை செறி வருமளித்தினிது காப்பவளே

\- சுபம் -

மூலாதாரம் :
எருவில் கண்ணகியம்மன் ஆலய ஏட்டுப் பிரதி

## திருக்குளிர்த்திப் பாடல்கள்

எமது ஆலயத்தில் திருக்குளிர்த்திச் சடங்கை கலிங்க குல மக்களும், எருவில் வாழ் மன்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சி அடிப்படையில் நடாத்துகின்றனர். இச்சடங்கின் போது திருக்குளிர்த்திப் பாடல்களை இரு குடியினரும் தங்கள் பூசையின் போது பாடுகின்றனர். அவர்களுக்கே பாடுகின்ற உரிமையுள்ளது. இதனால் திருக்குளிர்த்திப் பாடல்களை பிரசுரிக்கவில்லை. இப்பாடல்கள் எப்பொழுது? யாரால்? எழுதப்பட்டது என்பதை அவ்வேடு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

980ம் ஆண்டு சித்தாத்தி வருஷம் வைகாசி மாதம் 15ந் திகதி எருவில் நிலமை வைகாலிப்போடி சின்னவப்போடி உடையார் எழுதி நிறை வேற்றியது. அது மோசம் போனபடியால் 1920ம் ஆண்டு வைகாசி மாதம் 3ந் திகதி பூர்வபட்சத்து திதி ஏகாதசியும் அமிர்த சித்த யோகமும் திங்கட்கிழமையும் கூடிய சுபதினத்தில் எருவிலில் குடியிருந்த வேளாளரான பொலிஸ் தலைமை ஞானமுத்து பரமக்குட்டிப் போடி எழுதி நிறைவேற்றியது. எனக் குறிப்பிடுகின்றது.

மூலாதாரம் : ஏட்டுப்பிரதி

திரு.சி.கேதாரராஜா (பாதுகாப்பு உத்தியோகத்தர் பெற்றோலியக் கூட்.)

# ஊர்சுற்றுக் காவியம்

## (சடங்கின் வேளையில் வெண்கல உடுகு அடிக்கும் போது மாத்திரம் பாடப்படுகின்றது)

திருச்சிற்றம்பலம்

01. வீசுகர மேகநிற வேத நுதலால் கருணை
மேவு மத வாரண் வினாயக வினோதா
சேர்சுருதி பார தமிழ் மேருவினில் கோடு கொடு
சேம முறவே எழுது சேர் கருணையோனே
கூசு மதி சேர் நுதலி கோமள வல்லிக்கோர்
கொஞ்சு மதலைக் கினிய குஞ்சர முகத்தோன்
பேசு தமிழின் கதைகளே பாடுதற்கு ஒரு
பிழைகள் வராமல் அருள் பேழை வயிறோனே

02. சீரிதான பணிகாரம் அவல் எள்ளுண்டை
செந்தேனுடன் பயறு செவ்விள நீரும்
வாரியே குடவயிறு தன்னிலே வைக்கின்ற
வள்ளலே யானைமுக வர்த நற்பரனே
நாரிபா கன்றிருக் கொம்பனையே நம்பியே
நாளும் அடியார்கள் வினைபோய கல வேணும்
பாரி தாய் எம்மைப் பரிந்தடிமை கொள்வாய்
பாரதம் கோடதனினால் எழுதுவோனே

03. பருவகம் புயர் தனம் பொலியும் மங்கையரிடம்
பலவிதம் தொழுது செந்தக மனும் திருவெனும்
குருவெனும் பொருள் நினைந்திரு பதம் பெறவுமென்
கொடி மலர்ந்தடியேனை அடிமைகொண்டாள்வாய்
இருதடங்கு வடுதங்கிரி மகிழ்ந்துலகில் வந்
தினிய செஞ்சடையிலம் புவி புனைந் அழகனும்
திரு வலம் பலவு அம்பிகை மகிழ்ந்திட நடம்
திகழ் புனைந்தடி தொழும் சிவ சிதம்பரனே

04. விதம் பட இரண்டருகும் வேத மிசை பாட
விதங்கமல குங்குமம் குவிர்குவிர் ரென்ன
சதங்கையொடு தண்டைகள் அலம்ப முடிமீதே
சலம்சல சலம்சல வெனுங்கொடி ததும்ப
பதங்களோடு தொந்த தோம் தோமென இசைப்ப
பதஞ்சலி பராக்கிர்ம பதத்தை முனி காண
சிதம்பர சிதம்பரவெனும் பெரிய அன்பொடு
திரண்டட வந்த வினை சிந்தியோடிடுமே

05. தடவரைகள் கிடு கிடென வடிவேலை ஏவுநற்
சஞ்சலப் படாமுடி தற்பராசண்டன்
உடலிணைகள் நெறு நெறு என விழியிணைகள் பிதுங்கிட
உலகுதிசை கிடு கிடென உம்பர் உல கெல்லாம்
அடையலயர்கள் மட மடென நிமிடமிட இந்திரர்கள்
அழகு நடமானதொரு மயிலினமிசை ஏறும்
கடல் அலறு படநெடிய வடிவேலை ஏவுநற்
கந்தர் திரு மலரடிகள் கனவில் மறவேனே

06. திருவை உமையவளும் மழுவிடை அரனும் ஒரு நாள்
தெளிய உபதேசமருள் வடவை முகமதனில்
சுருதரிய மது கரமும் தினமும் உமை குழல்சொரிய
இரு செவியில் விழ அரனும் சொலுமொழியை முனிவார்
சரிசல திமிசை ஏறிய மகரமெனவலை கயிறு
தனையும் இரு தவிடு பொடி செய்து ஊர வரையும்
உருஅயில விடுகுமரன் உறுதி செறி கதிரை நகர்
ஒரு முருகர் என வினைகள் உறுதி செடிபுகுமே

07. திரு மருவு வளரு முண்டகமும் முழுநிலமும்
செறி வாவியும் புதிய மது மாலை மலரும்
தருமேவு சோலையும் சாந்துகுங்குமமும்
தனதான பதியெனவே ஓது கோமயிலும்
கருதரிய திருநாடு எமது நகர் எனவே
கனல் மீதில் ஏற்றசிலை வேடனான
மருவருவு தொடையனைகள் கதிர் காமத்திலுறை
மலரடிகள் ஒருபொழுதும் மனதில் மறவேனே.

08. பல கனிகள் சொரி தினைகள் விளைபுனம் தனிலடர்
பகர்கிளிகள் புறவினொடு பலகனிகள் கடிதுனை
அலகயலை நிகர் அணைய அழகுடைய விழிவள்ளி
அவளை மணம் மருவ வரும் தவசிவடிவெனவே
வலைகுறவன் எதிர்கிழவன் எமது புவியடிகள் தொழ
வருபவர்கள் இருகைதொழ வழமைசெறி கொடுரம்
உலகு புகழ் செறிகதிரை நகரில் வரு குமரரென
ஒருமுருகர் என வினைகள் உறுதி செடிபுகுமே

09. பரகதியை யாவையும் நாவிலுறை நித்தமும்
பங்கயச் செல்வியைப் பவளவாயாரைக்
கருதரிய இவை ஓதுகண்ணாளைக்
கற்பூர மேனிதனில் ஒப்பாரிலாளைக்
பதும முகில் அணைய தொரு குங்குமக் குழலியை
பாடியிரு சங்கீர்த பாரமுலையாளைச்
சரஸ்வதி என்னுடைய நாவிலும் கனவிலும்
தமிழ் வளர்த்தாளை ஒரு சற்றும் மறவேனே

10. திங்கள் போலும் திருமேனி உடையாளைச்
செந்தாமரைக் குலத்தாளை ஒப்பாளைச்
பொங்கு புனலாலே எழுந்த நற் திருவே
பொய்யின்றி மெய்யாக வந்துதித்தவளே
தங்கள் பழி கொள்ளென்று பாண்டியனிடம் சென்று
சத்துரு சடாமுடித் உயிர் மீளவந்தாய்
அங்கோணாமைக் கடவை தங்கு கண்ணகையார்
அடித்தாமரை பாதமலர் நாளு மறவேனே

11. வட்டவாரிக் கடல்கள் சூழ் உலக மீது
வாழும் மூலஸ்த்தான் தேவதைகள் எனவே
இட்டமாய் நற்கனிகள் சொரிந்திடும் பெண்பனையை
இன்றுமுதல் ஆண் பனையதாய் நினைத்தவளே
பட்டதொரு பாலகனையும் பிழைப்பித்தாய்
பாண்டியனை வென்று பழி மீண்டு கொளவந்தாய்
மட்டுலாவிய சோலை ஐங்கோணாமைக் கடவை
மருவு கண்ணகையை என் மனதில் மறவேனே

12. கார்பெற்ற விரிதிரைக்கடல் மீது பெட்டகம்
கண்டு மானாகருடன் மாசாற்று வாரும்
பேர் பெற்ற பெட்டகம் எனக்கெனவும் மாசாற்றார்
உள் நிதி எனக்கென்று மானாகருமுரைக்க
பேர் பெற்ற மாசாற்றாரை கண்டுநாணி
பின்னிடவும் மானாகர் முன்னிடவரும் சொல்
சீர் பெற்ற தம்பிலுவில் ஊர் வாழ வருகின்ற
செல்வி கண்ணாகையை என் சிந்தை மறவேனே

13. சுட்டியாய் உயர் பொன்னின் ஆறுதலை மூழ்கியே
தோகை மாதேவி நீர் ஆற்றிலோர் புதினம்
எட்டியே நீரிச்சுழியில் வண்டு பூவாசத்தை
இனிதுண்பதற்கு உவமை ஏதெனப் புகலீர்
செட்டிதனை ஒர் மழுவினால் வதைத்திடும் அம்மை
சிந்தையுற்றிங்கு வாவென்றளைத்தருளும்
பட்டி மேடதனில் வாழ்கின்ற கண்ணகை திருப்
திருப்பாதமலர் தன்னை ஒருநாளும் மறவேனே

14. சேரமுனையில் திரவியங்களை அழைத்து
மாதவிக் களித்திட முத்தென அறிந்து
ஆரமுனையில் சவடி பொற்பணிகள் செப்பிலிட்
அவர் கையில் கொடுமென்ற அன்னமின்னிடையே
பாரமுனை யொற்றதிருவேல் விழிக் கரும் பென
பணிவோர்கள் பிணி தீர வருபேடைமயிலார்
வீரமுனை ஊர்வாழ வருகின்ற கண்ணகைதன்
பாதமலர் நாமமொரு நாளும் மறவேனே

15. மட்டுலவு பொற்பதிபுரத்து மதுரைப்பதியில்
வாழும் உயர் செட்டியை வதைத்திட அறிந்து
இட்டபெருமட்ட கிரியைச் சரி சொல்
வட்ட முலையைத் திருகி மதுரைநகர் சுட்டரசழித்தாய்
திட்டெனவே இப் பணிவிடைக்குதவி
சேரவே இக்கருணை நாடியருள் புரிவாய்
கட்டுடன் நடத்துமுயர் காரேறு சோலைவளர்
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

16. வண்டு நிகரான மொழி கெண்டை நிகரான விழி
வாலை எதிர் தோனுதல் மடந்தை எதிர்சீறி
தண்டிகை வழக்கதனை மீண்டு செய் பாண்டியன்
தானையும் எரித்து இடையர் தன்சேரி காத்தாய்
எண்டிசையில் உள்ளபரிபாலரோடு போடிமார்
எழில் வீரர் மற்றுமுள எல்லவரையும் தினம்
கண்டு பணிகின்றதொரு கார் ஏறு சோலைஎர்
கண்ணயை எண்ணவினை காதமோடிடுமே

17. சிலையொத்த புருவத்தி கணையொத்த நய நெற்றி
சிவ சித்திர வடிவொத்த திருமுத்து நகையாள்
மலையொப்ப நவரெட்ண வடிவொத்த தனத்தி
வஞ்சிக் கொடி இடைச்சி மதுரச் சொல் மொழியாள்
புலைமித்திட முடிக்கும் அடிமை கொள் தானவர்கள்
புகழ் பெற்று வாழ நற்கருணையது புரியும்
கலை முத்து தமிழ் மிக்க காரேறு சோலைவளர்
கண்ணகையை எண்ணவினை காதமேடிடுமே

18. வில்முனை நிகரொத்த விழி சித்திர
மிக்க கவி செய்பு கலை கற்ற தமிழோர்கள்
சொல்முளைய தென்னவே கட்டுடன் நடத்துமொரு
சுகமுற்று வாழ்வுதரு வரிசை பொற்கொடியாள்
நெல்முளை மிகுந்தறம் பெருகமானிடர் வாழ
நித்தமும் திங்கள் மும்மாரி பொழிகின்ற
கல்முனை நகர்க்குற வாழ்கின்ற கண்ணகை
என்ன வினை சாதமோடிருமே

19. எத்திசையும் மெய்க்கவே தேவருடன் திருநாள்
என்றுமோர் ஆண்டினில் நடத்தி யாவரையும்
குற்றமற மானிடர்கள் எல்லவரையும் தினம்
குறைவற நடத்திவரும் குணரெட்ண மயிலே
கொற்றவனை வாதடி அன்று வென்றே ஆயர்
குலமதனை அஞ்சலென்றிடும் அன்ன மின்னே
உற்ற புகழ் சேர்கின்ற வெற்றி செறி பாண்டிருப்
பூர்வாழ வருகின்ற உலக மாதாவே

20. காரணி நாரணி காளி கங்காளி
கண்ணன் சகோதரி வண்ணமக மாரி
பூரணி நாரணி பொன்னின் மாமங்கையே
புகழ் மேவும் பூலோகம் வாழும் நாயகியே
ஏரண்ணி முக்கண்ணி வேத நாயகியே
ஏழையடியார்களை ஈடேற்றுவாயே
வீரமாகாளியே தெட்சணா தேவியே
பேர் பெரிய கல்லாறு வாழும் நாயகியே

21. புகழ் மேவு மானாகர் மகளான திருவே
பூவையே உனை நினைந்திட வந்த வினைகள்
துகள் போலவே பறந்திடும் உனது கற்பால்
சுந்தரம் சேர்கின்ற சந்தணக் கிளியே
நிகழாமல் அடிபேணும் அடியவர் தமக்கென்று
நிறைசெல்வமே கொடுத்தருள வந்தவளே
மகிழூர்தன் நகர் வாழ வருகின்ற கண்ணகை தன்
மலரடிகள் ஒருபோதும் மனதில் மறவேனே

22. பரிவுறு சொல் இடையர் தம் அகமதில் இருமெனவும் ஒரு
பரிபுரம் தனை தெருவில் விலை சொல்ல முன்னாள்
பெரிய தொரு தெருவினிடை எதிர்வரு கொல்வன் இடறு
பிழைகள் செய் கள்வன் என மாறன் எதிர் கொடுபோய்
தெரிசென மேல் அறிவினொடு குழலவிள
முலைதிருகி மதுரை நகர் எரி செய்த
கரிய சுரிகுழல் அன்ன மின்னிடையே எருவில் நகர் வாழ்
கமலமயில் இருபெண்ணடிகள் கனவில் மறவேனே

23. இடமிகு பொன்னாடரங் கதனில் உயர் சோழன் முன்
எழில்கொளணி கோலமும் பூட்டி மாதேவிதன்
குடமுலையின் மேல்நிறைந்திடு வட முலாவுதனம்
குதிகள் செய் நாடகம் கண்டு கோவலரும்
மடமினொடு ஆசைகொண்டரிய தெரு வீதியில்
வருவிரகதாக மதில் மனமது மகிழ்ந்தே
திடமிகுசொல்லால் உயர்ந்திடும் எருவில்நகர் வாழ்
செந்திருவை நாளும் என் சிந்தை மறவேனே

24. பாருலகில் உள்ளவர்கள் தாழ் பணிந்தேற்றப்
பரிவு செறி ஆச்சியரிடந்தனில் இருந்து
தாருலவு சயனமதிலே கனவு கண்டு
தன்மனதில் அதிக துயர் வந்து சேர்திடவே
ஏருலவு என்கணவர் கோவலர் தமக்கு
ஏது துயர் வந்ததோ என்று வழிசென்ற
சீருலவு களுவாஞ்சி நகர் குளக் கட்டில் வாழ்
செல்வி கண்ணகையை என் சிந்தை மறவேனே

25. மலர் மேவு குளிர் சோலை வரு கோலமயிலாள்
வரி மேவு குயில் ஓசை வருகீத மொழியாள்
தலமேழும் அறியாத வணிகேசர் குலமீது
தனிலே ஒர் அவதாரம் தருவாய் பெண் அமுதாய்
பலமேள முரசோடு தவில் தாரை
பல நாத சரவோசை கின்னரம் பல நாளுமதிர
நலமேவு செட்டிபாளைய மீதில் வாழ்கின்ற
நாயகி தன் நாமமொரு நாளு மறவேனே

26. எண்ணமுள்ள பரிவார வீரர்களுமே தழைத்
எழில்பெற்ற இராசசிங்க மன்னனும் வாழ்க
திண்ணமுடனே புவிகள் எங்கும் தழைத்தோங்க
திங்கள் மும்மாரி மழை பொங்க நிதம் எங்கும்
வண்மையுள்ள முற்குகர்களும் கன்று காலியும்
வாழ்கவே வரம் அருள வந்த மண்முனையூர்
கண்ணகையை என்னுடைய நாவிலும் கனவிலும்
கருதவினை ஒருகோடி காதமோடிடுமே

27. உற்ற புகழ் சேர்கின்ற செட்டி வேளாளரும்
உயர்வுற்ற முற்குகருடன் மற்றுமுள்ளோரும்
கொற்றவர்கள் பரிவார வீரர்களும் ஆயிரம்
கோடி காலம் வாழ்க நாடியருள் புரிவாய்
செத்த தொரு வேளாண்மை விளையவே மழை வெள்ளம்
பெருகவே திங்கள் மும்மாரி பொழிகின்ற
கற்றவர்கள் வந்தாறுமூலை நகர் வாழ்கின்ற
கண்ணகையை எண்ண வினை காதமோடிடுமே

28. சீர்வணிகர் பெருமான் சிலம்பு விலை கூறத்
தெருவினிடை தாட்டானும் எதிர் கொண்டு வரவே
பாராளி மீதிலே கள்ளவன் இவனென்று
பழிதரச் சொல்லியே வழுதி முன்னுரைக்க
ஏர்மேவு தனம் திருகி எறிந்து மதுராபுரியில்
இந்து குல மன்னனை எரித்த நாயகியே
கார் மேவு சோலை சூழ் நிலாப்பணையில் வாழும்
கண்ணகையை எண்ண வினை காதமேடுடிமே

29. தவமே செய் அடியவர்கள் பாதமலர் சூழ
தமிழோர்க்ள இசைபாட விடையரனும் ஒருநாள்
உபதேசம் ஒரு நாளும் மறவாமல் அடியேனை
உரமீது தவறாமல் உணர்வேகொள் திருவே
சிவனார் தன் அருளாலே உயர் பூவுலகில் யான்
திருநாளில் அருள்பூசை தினமே கொள்திருவே
நவமாமணி உலாவு நல் காம நகர் வாழ்
நாயகி தன் நாமமொரு நாளூ மறவேனே

30. அங்கோணாமமைக் கடவை கார் ஏறுநகர் எருவில்
ஆனதம்பிலிவில் எழில் வீரமுனை மகிழூர்
மங்கை சேர்பட்டி மேடு உயர் செட்டிபாளையம்
வந்தாறு மூலை நகர் மற்றுமுள பதிகளும்
திங்கள் சேர்ஒத்த நுதல் எங்கள் மீதினில் பெரிய
திவ்வியமாக விளையாடி எப்பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு மங்கைமாதின் பெருமை
என் நாவிலும் கனவிலும் என்று மறவேனே

**திருச்சிற்றம்பலம்**

மூலாதாரம் :
எருவில் கண்ணகியம்மன் ஆலய ஏட்டுப் பிரதி

# அகிலம் போற்றும் மட் எருவில் நகர் கண்ணகியம்மன் சடங்குமுறைக் கோல் நடனப் பாடல்

**தாளம்**

தெந்தின தினனத் தினதின தினனத்
- தின தின தினனத் தினனானா
தெந்தின தினனத் தினதின தினனத்
- தின தின தினனத் தினனானா

**விநாயகர் துதி**

அகிலம் போற்றும் எருவில் நகர்
அன்னை கண்ணகி சடங்குமுறை
பயிலும் கோல் நடம் பாடிடவே
பகவான் கணபதி காப்பாமே - தெந்

கஜமுகா சூர சங்காரனே
கலை நடம் புரியும் நாயகனே
கற்புடைமாது கண்ணகியாள்
காவியம் பாட அருள் எனக்கே !- தெந்

அகத்தியன் அடைத்த காவிரியை
அகிலம் தழைக்கச் சிறை மீட்க
காக்கை வடிவம் ஆகிவந்த
கணபதி தமிழைத் தா எனக்கே- தெந்

**கண்ணகியம்மன் துதி**

அம்மா அம்மா சரணமம்மா
அன்னை கண்ணகி சரணமம்மா
உன்னைத் தொண்டர்கள் பூஜிக்கும்
கோல் நடம் பாடக் காப்பாவாய்

எருவில் இயற்கைக் கொடையம்மா
இங்கே கோயில் உனக்கம்மா
இரு கைச் சிலம்பு நாயகியே
உன் புகழ் பாட அருள் எனக்கே

கொற்றவன் கோவலன் கொலை கண்டு
கோபக் கனலாய் எறித்தவளே
பெற்றவளே நின் திருச் சடங்கு
முறைகளை ஓத வரமருளே

**அம்மன் சடங்குகளும் வழிபடும் குடிமரபினரும்**

குடிவழி வந்த குல மக்கள்
அடியவர் என்றும் தாய் உனக்கு
படிமுறைச் சடங்கு நிகழ்வுகளைப்
பார் அறிந்தே புகழ் ஓதிடுமே - தெந்

எருவில் ஊரைக் காப்பவளே
எமக்கருள் புரியும் தாயவளே
உருகி உருகிச் சடங்காற்றும்
உத்தம குலங்களைக் கார் தாயே!

தீந்தமிழ் மரபு காத்தவளே !
திருநிறை அன்னை கண்ணகியே!
உந்தன் ஆலயத் திருக்கதவு
திறந்தால் எருவில் சிரிக்குமம்மா! - தெந்

குளுத்தி ஆடும் முதல் வாரத்
திங்கள் நாளில் ஊர்காவல்
மாலைப்பொழுது வேளையிலே
மஞ்சள் மணக்கும் எருவிலம்மா - தெந்

மறுநாள் செவ்வாய் நாளன்று
மாதா உந்தன் திருக்கதவு
மங்கள வாத்தியம் தானதிர
மலர் மண கமழத் திறக்குமம்மா - தெந்

பார்புகழ் பணிகொணார் குடியார்
பண்புடை குலத்தார் தாயேஉன்
பேர் புகழ் ஆலயத் திருக்கதவைச்
சீருறத்திறத்தல் பெருமையம்மா ! - தெந்

தொடராய் இரவு பகல் சடங்கு
தாயே நிந்தன் திருச்சடங்கு
நடத்தும் உயர்குடிக்குலமக்கள்
நாயகி நீயறி அறியம்மா - தெந்

ஏருயர் எருவில் பெத்தான்குடி
எங்கும் பெயர் புகழ் துலங்கும் குடி
பேர்பெறு இரவுப் பூசை விழா
பெருமகள் கண்ணகி உனக்கடியே ! - தெந்

திருமகள் நீயருள் எருவில் வாழ்
கரவாகுப் பணிக்கொணார் குடி மக்கள்
பெருமை சேர் அக்குல மக்களுக்கு
பகலில் திருவிழா தாயாரே - தெந்

திருநகர் எருவில் வாழ் களுதாவளை
தீந்தமிழ் குலத்து பெத்தான்குடி
உருகிப் இரவுப் பூசையினை
உருக்கமுடன் உனக்காற்றுமடி - தெந்

கனம்பெறு கச்சிலா குடியார்
காவியம் போற்றும் குடிமக்கள்
பகலில் பூசை செய்துன்னை
வழிபடும் நடைமுறை மகிமையடி - தெந்

வேற்றுமையில்லா வேளாளர்
குடிஉயர் மக்கள் தாயேநின்
ஒற்றுமையோங்க இராப் பூசை
ஆற்றும் அழகே அழகடியே - தெந்

எத்திக்கும் புகழ் பத்தினாச்சி
குடி ஊர் குலத்து மக்களவர்
தித்திக்கும் பகல் பூசை விழா
செய்தே உன்னைப் போற்றிடுவார் - தெந்

மாதா மருத்துவர் குடிமக்கள்
உள்ளம் அமைதிகொள் குல மக்கள்
கற்புடை மாதே கண்ணகியே
இரவுப் பூசை ஆற்றிடுவார் - தெந்

திட்டமுறைப்படி செட்டிகுடி
திருநிறை குலத்துப் பெருமக்கள்
சட்டப் படியாய் பகல் பூசை
பத்தினி உனக்கு ஆற்றிடுவார் - தெந்

கண்டன்குடியார் மரபுமுறை
கன்னிக்கால் சனிக்கிழமையிலே
மண்டியிட்டே வெட்டிடுவார்
மாபெரும் சக்தி கண்ணகியே - தெந்

கோவலன் உந்தன் மணவாளன்
கோலம் காட்டும் கன்னிக்கால்
வெட்டும் நாள் வெகுசிறப்பம்மா
வேதம் அதனுள் அடக்கமம்மா - தெந்

கோப்பி குடியார் தோள் சுமந்து
கூடி எல்லாக் குடியினரும்
கிடு கிடு மேளம் குரவையுடன்
கன்னிக்கால் வரும் காட்சியம்மா

கோவலர் கண்ணகி கல்யாணம்
ஞாயிறு பகலில் கோலாகலம்
கோத்திரம் உயரும் கோப்பிகுடி
குலத்து மக்கள் சடங்கம்மா - தெந்

அரசாட்சிக்கோர் படையாட்சி
அகிலம் அறியும் குடிமக்கள்
இரவுப் பூசை கிடுகிடுப் பாய்
இயற்றிடும் பக்தி பெரிதம்மா - தெந்

உலகிப்போடி உயர்குலத்தோர்
உலகம் போற்றும் குடிமக்கள்
பகலில் பூசை உனக்காற்றி
பக்தி மார்க்கம் கொண்டனரே - தெந்

திங்கள் மாலை வட்டுக்குத்து
திருமுறைப் பூசை விழா அம்மா
திருமுகக் குளுத்தி அதிகாலை
திங்கள் ஊரே திரளுமம்மா - தெந்

வட்டுக்குத்து திருக்குளுத்தி
வடிவரசி நின் விழாக்கோலம்
திட்டமுறைப்படி நடைபெறுமே
திருவருள் நிறையும் மனங்களெல்லாம் - தெந்

முற்குக குலத்தின் மூத்தகுடி
காலிங்காகுடி மக்களுடன்
திருநிறை எருவில் வாழ் மகுடம்
மண்முனைப் பெத்தான் குடி மக்கள் - தெந்

சுழற்சி முறையில் தாயே நின்
வட்டுக்குத்துச் சடங்குடனே
குளுத்தி திருநிறைக் காட்சிகளை
உளத்தில் மகிழச் செய்திடுவார் - தெந்

வசந்தம் கூடும் வைகாசிப்
பூரணை சார்ந்து வரும் திங்கள்
இசைந்தே மக்கள் திருக்குளுத்தி
ஆடும் நாளே அழகம்மா ! - தெந்

எருவில் ஊரின் இன் குலத்தோர்
எல்லா மனங்களும் ஒன்றிணைந்தே
திருநிறைக் கற்பின் செல்வியரே
ஆற்றும் பணிகள் அற்புதமே - தெந்

வேப்பிலை வாசம் நிறைந்தளே
மஞ்சள் முகத்துப் பேரழகி
கூப்பிய கரமே மக்களெல்லாம்
குடிகுடியாகக் குதூகலமே - தெந்

வெடி வெடி வெடித்து முழக்கமிட
வீட்டுக்கு வீடு நிறை கும்பம்
கடகட மேளம் பறை மேளம்
காதுகள் இனிக்கும் நாதஸ்வரம் - தெந்

குடிகுடி மரபாய் மடைப்பெட்டி
கூடிப் பெண்கள் ஆண்களெல்லாம்
குரவை அரோஹரா ஒலியெழவே
தூக்கிச் சுமந்து வரும் காட்சி - தெந்

சந்தன குங்குமம் கமகமக்க
சரிகைச் சேலைகள் பளபளக்க
மஞ்சல் மணமே ஊர் நிறைய
மாண்புறு வேட்டி சால்வையுடன் - தெந்

வீதிகள் எங்கும் விழாக்கோலம்
இடையிடை தோரண அலங்காரம்
வீடுகள் எங்கும் கலாசாரம்
மிளரும் காட்சி இதமம்மா - தெந்

பூம்புகாரின் பூமகளே
பொன்னின் மகுட நாயகியே
அம்மா உந்தன் திருச்சடங்கு
அன்பின் களமே ஊரம்மா! - தெந்

ஆக்கம் -

**கலைச்சுடர், கலாபூஷணம் கோயிலூர் தனிகா**

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் கும்மிப்பாடல்கள்

மோனைப் பொருளே முக்கண்ணன் முதல்மகனே
பானை வயிற்றுப் பராபரனே - யானைமுகா
கண்ணகி விழாக்கண்டு களிகூரும் தமிழ்க்குலத்தின்
எண்ணத்தில் நிறைந்திருப்பாய் என்று

கற்புக் கரசியாம் கண்ணகியின் - திருப்
பொற்பாதம் பணிந்தே முற்குலத்தோர்
அற்புதம் நிறை பண்பாட்டினையே - நான்
அழகுத் தமிழில் பாடவந்தேன்

முற்குலத்தோரின் கருநகராம் - எங்கள்
முன்னோர் ஆண்ட பெருநகராம்
எக்குலத்தோரும் எடுத்தியம்பும் - எருவில்
பற்றெனும் புகழ் பெற்ற பதிநகராம்

தேச வழமைச் சட்டமதை - எட்டுத்
திசையிலும் செலுத்தி ஆண்டகுலம்
பாசமுடனே பலகுலமும் - மெச்சப்
பாங்குடன் வாழ்ந்ததெம் முற்குலமே !

முத்தமிழ் முழங்கும் தமிழ்நகராம் - எங்கும்
முக்கனி விளையும் பழநகராம்
எத்திசையும் மக்கள் எடுத்தியம்பும் - நல்
எழில் வளம் கொண்ட எருவிலதாம்

எண்திசையும் கோவில் கொண்டநகர் - எங்கும்
இறையருள் பொழியும் பக்திநகர்
கண்ணகி பத்தினி கோயில் கொண்டே - எமைக்
கண்போல் காத்திடும் கருணை நகர்

அழகொளிர் கண்ணகி ஆலயத்தில் - மக்கள்
ஆண்டுக்கொருமுறை கண்ணகிக்கு
பழம் பெரும் மரபுடன் விழாவெடுக்கும் - எங்கள்
பண்பாட்டினை நாம் பாட்டிசைப்போம்.

அன்னையாள் கண்ணகி ஆலயக் கதவினை
ஆண்டுக்கொருமுறை திறந்திடவே
உன்னியே பணிக்கொணா குலமக்கள் குன்றாக
ஊர்காவல் செய்துமே விழாவெடுப்பர்

எருவில் பெத்தான் குலமக்கள் - ஒன்றாய்
இணைந்தே பெருமைகொள் கண்ணகிக்காய்
பெருமையுடன் பெருவிழாவெடுத்தே - தாயின்
பேரருள் துணையே தொடர்ந்திடுவர்

எருவில் வாழ் கரைவாகு பணிக்கொணா குலமக்கள்
எழிலுறு பத்தினி கண்ணகித்தாய்
பெருமையாய்ப் பெற்றி பெறநினைத்து - பெரும்
பேறுற விழாவது நிகழ்வுறுமே

எருவில் வாழ் கஞ்தாவளைப் பெத்தான் - குலம்
கனிவுடன் கண்ணகி தாள் பணிந்தே
ஒருமையாய் உணர்வது பொங்கிடவே
உமையாள் கண்ணகி பாதம்பணிவர்

மெச்சிடவே கச்சிலா குலமக்கள் - அன்பாய்
மேன்மைகொள் பத்தினி கண்ணகியின்
உச்சி குளிரால் விழா வெடுத்தே பெரும்
உவப்புடன் திருவிழா காண்பனரே

எருவில் வாழ் வேளாலர் குலத்தோர்கள் - பெரும்
பேறுடை கண்ணகித் திருமகளின்
ஊருடை யோர்க்கெலாம் அருள்வேண்டி - நல்
உறவுடன் தாயினை வணங்கிடுவர்

பத்தினித் தாயவள் தொண்டுசெய்யும் - எருவில்
பத்தினாச்சி குல மக்கள்
உத்தமி பத்தினி கண்ணகிக்கு - உளம்
உவப்புற பெருவிழா எடுப்பினரே

மருத்துவக் குலமக்கள் மாண்புறவே - மகிமையுற
மாதா கண்ணகித்தாய்
கருத்துடன் பத்தினி தாள்பணிந்தே - உளக்
கனிவுடன் கண்ணகி பாதம்பணிவார்

மட்டிலாச் செட்டி குலமக்கள் - அனைவர்
மனமதும் மகிழ்வுற மாட்சியுடன்
காட்சி தரும் எங்கள் கண்ணகித்தாய் - மனம்
களிப்புறக் காலை விழா தொடருமே

விண்ணதிரக் கண்டன் குலமக்கள் - எங்கள்
வெற்றித் தமிழ்மகள் கண்ணகியின்
வண்ணத் திருக்கல்யாணத்தின்
கன்னிக் காலினை வெட்டிட வலம் செல்வா

கட்டுக் கோப்புடைக் கோப்பிகுலம் - அம்மன்
கன்னிக் காலினைச் தோள்சுமந்து
பட்டுகள் அணிவித்தே பஞ்ச கால்கள் - துலங்கப்
படிப்பர் கல்யாணக் கதைதனையே !

படையாட்சி குலத்துப் பெருமக்கள் - பெரும்
படையாய்த் திரண்டே பவனிவந்து
நடைபெற்ற நற்றாய் விழாவெல்லாம் - என்றும்
நலமுடன் எழிலுறப் போற்றிடுவர்

உத்தம உலகிப்போடி குல - மக்கள்
ஒன்றிணைந்தே தாயார் கண்ணகியின்
சத்திய வாழ்வு நிலைத்திடவே - மனம்

மண்முனைப் பெத்தான் குல மக்கள் - மாதா
மாண்புறு கண்ணகி வட்டுக்குத்து
பண்புறு விழாவினை பகல் எடுக்க
படிப்பர் கலிங்கர் திருக்குளிர்த்தி

வருடம் மாறியே கலிங்ககுலம் பேறாய்
வட்டுக்குத்துப் பூசை செய்ய
மண்முனைப் பெத்தான் குலமக்கள் நிலம்
மகிழ்ந்திடப் பிடிப்பர் திருக்குளிர்த்தி.

**ஆக்கம் :**
**எருவில் கலிங்கன்**

## சிலப்பதிகாரத்தில் "மூன்றுக்கள்"

01. **மூன்று நாடு :** சோழ நாட்டில் கண்ணகி பிறப்பு, பாண்டிய நாட்டில் வழக்குரைப்பு, சேர நாட்டில் தெய்வமானவள்.
02. **மூவேந்தர்கள்:** சோழன், பாண்டியன், சேரன்
03. **மூன்று காண்டங்கள் :** சோழ நாட்டின் தலைநகர் புகார் (புகார்காண்டம்)
பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரை (மதுரைக்காண்டம்)
சேர நாட்டின் தலைநகர் வஞ்சி (வஞ்சிக்காண்டம்)
04. **முத்தமிழ் :** இயல், இசை, நாடகத்தைக் கூறுகின்றது.
05. **முக்கோணக்காதல் :** கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோருக்கிடையிலான காதலை வெளிப்படுத்துகின்றது.

06. **மூன்று தத்துவங்கள்:**
அ. அரசியல் பிழைத்தோர்க் கறங் கூற்றாவதூவும்.
ஆ. உரைசால் பத்தினையை உயர்ந்தோர் ஏத்தலும்
இ. ஊழ்வினையுறுத்து வந்தூட்டும்.

## இயற்கை எழில் மிகு எருவிலூர்
## "ஸ்ரீ கண்ணகியம்மன் மேல் கும்மிப்பாடல்கள்"

தாளம் :- தந்தனத் தான தன்னா தானே தனத்
தானதந்தனத் தானானே
தந்தனத் தான தன்னாதானே தனத்
தான தந்தனத் தானானே

பாடல்

01. செந்நெற் கதிர்கள் சிறக்குமெழில் எங்கள்
செந்தமிழ் அன்னை சிரிக்குமெழில்
பொன்னகர் எருவில் கண்ணகியம்மனைப்
போற்றியே கும்மிகள் பாடிடுவோம்.

02. வேழமுகத்து வினாயகனே வெற்றி
நாதமுழக்கம் ஒலிப்பவனே
பானை வயிற்றுப் பெருமானே பிள்ளை
யார் திருப்பாதங்கள் போற்றிடுவோம்.

03. அன்னை கண்ணகி அம்மனைப் போற்றியே
அட்சரக்கும்மிகள் பாடிடவே
பிள்ளையார் எங்கள் பெருமானே தமிழ்
தந்து நிறைத்திடக் காப்பாமே!
தந்தனத் தான தன்னா தானே

04. ஆண்டுகள் ஆண்டுகள் பல்லாண்டு இங்கே
ஆலயம் கொண்டே எழுந்தருளி
நீண்டபெருவளம் கொண்ட எருவிலூர்
மக்களைக்காத்திடும் கண்ணகிக்கே!

05. கும்மிகள் செம்மொழி தானிணைத்து எங்கள்
குலமகள் கண்ணகித்தாயாரின்
அற்புதம் கருணை பேரருளை இங்கே
அரிவையரே கொட்டிப் பாடுங்கடி

06. அம்மா அம்மா கண்ணகிக்கு இங்கே
ஆண்டுகள் தோறும் சடங்குவிழா
சும்மா சும்மா இல்லையடி தோழி
சொர்க்க விழாவது தானடியே
தந்தனத் தான தன்னா தானே

07. காலணி சிலம்பு ஓசையெழ எங்கள்
கற்புக் கரசி கண்ணகியாள்
சேலை முகக் கரை தானொளிர இங்கே
சேர்ந்தே மணக்குது மஞ்சளடி

08. எருவிலூரெல்லாம் தோரணங்கள் பார்
எங்குமே வேப்பிலைக்கும்பமடி
அறுகு மஞசள் நீர் வீதியெலாம் தோழி
ஆகாயம் முட்டமணக்குதடி

09. வீதிகள் எங்கும் விளக்கெரிய இங்கே
வெடிவெடித்து ஓசையெழ
அம்மனுக்கேற்ற பறை மேளம் தோழி
ஊதுகுழல் எங்கும் ஓசையடி
தந்தனத் தான தன்னா தானே

10. அன்னைய ரெல்லாழ் அணி திரண்டு இங்கே
கற்பூரச்சட்டிதலையேந்தி
அம்மனை வேண்டியே தாழ்பணிந்து போடும்
அரோஹரா கோசத்தைக் கேளுங்கடி

11. வெள்ளை மேற்தட்டி அலங்கரிக்க அந்த
வேப்பிலை வாசம் கமகமக்க
உடுக்கை ஓசைக்கிசைவாகப் பக்தர்
காவியப் பாடல் முழங்குதடி

12. அம்மன் வாறாள் வீதி உலாப் பெரும்
அணிகள் ஆடைகள் தானொளிர
அம்மன் வாறாள் ஊர்வலமே தோழி
ஆரத்தி காட்டியே ஆடுங்கடி
தந்தனத் தான தன்னா தானே

13. எங்கள் எருவிலூர் எங்கணுமே முழுச்
சந்தன குங்கும வாடையடி
கற்பூர தீபம் எரியுதடி அம்மன்
கண்ணகி கால்கள் நீராடுதடி

14. கன்னிக்கால் வெட்ட எழுந்தருளியம்மன்
காவியம் இசைக்க வாறாளடி
சென்னியிலே கரம் கூப்பியே பக்தர்கள்
தேவியைப் போற்றிப் பணிந்தாரடி

15. எருவிலூர்க் குல மக்கள் மனங்களில்
எறிக்கும் தாரகைத் தண்ணொளிபோல்
உருகும் பக்தியை உலகமெங்குமே
கண்டுமே நின்று வியக்குதடி

தந்தனத் தான தன்னா தானே

16. குளுத்தி ஆடவே அம்மாள் வாறாள்
கோயிலைச் சுற்றி வலம் வாறாள்
எறிந்து வாறாள் பஞ்சாமிர்தம்
எங்கள் எருவிலூர் மாமணமே

17. கோப சொரூபத்தைத் தானடக்கி இங்கே
குளுத்தி ஆடும் அம்மனுக்கு
பாவக் கண்ணூறுகள் சேராமல் பெரும்
பக்தர்கள் முக்காடு தானணிவார்

18. மானாகர் தன்மகள் கண்ணகியாள் அந்த
மாசாத்துவார் மகன் கோவலரை
மாலையிட்டே மணவாளனாக இங்கே
ஏற்ற கதை பெருந் தத்துவமே!

தந்தனத் தான தன்னா தானே

19. சிலம்பின் உள்ளீடு நாகமணி அந்தப்
பரல்கள் சேர்த்தும் தத்துவமே
ஒற்றைச் சிலம்பினை பாண்டியனின் முன்பு
மன்றில் உடைத்ததும் தத்துவமே!

20. கோவலனார் கொலை பாண்டியனின் அந்தக்
கொலைக்கு வித்திட்ட தத்துவமே
ஆர்வலர் மதுரை மாநகரம் அங்கே
அக்கிணி மூண்டதும் தத்துவமே!

21. கண்ணகி அம்மன் அவதாரம் இங்கே
காற்சிலம்பொன்றுடன் பூமியிலே
எண்ணிய சபதம் தான் முடிக்க மண்ணில்
அன்னை உமையவள் தோன்றினளே!

தந்தனத் தான தன்னா தானே

22. கோவலன் வணிகன் மாதவியாள் இந்த
வாணிவிச்சி எனும் முற்பிறப்பு
ஆடி அழிந்த தொடர்கதையே எங்கள்
அம்மன் அவதார மீள் கதையே!

23. அம்மா அம்மா கண்ணகியே எங்கள்
எருவிலூரின் மாதாவே
உன்னை நினைந்துளம் தான் கசிந்து அம்மா
உள்ளூரப் பக்தி பெருகுதடி

24. அன்னையர்க் கன்னையாய் எங்கள் மனை
அறங்கள் காக்கும் பத்தினியே
உன்னைப் பணிந்துளம் தான் கசிந்து அம்மா
உள்ளூரப் பக்தி பெருகுதடி

25. வாழிய வாழிய எங்கள் அன்னையிவள்
கண்ணகியம்மன் புகழ்வாழி
வாழிய வாழிய சைவமும் தமிழும்
வாழிய எருவில் மக்களுமே!

தந்தனத் தான தன்னா தானே

ஆக்கம் :

**கலைச்சுடர், கலாபூஷணம் கோயிலூர் தணிகா**

## வசந்தன் பாடல்கள் காவியநாயகியின் வரலாறு

தரு : தான தன் நாதன தான தன் நாதன
தான தன் நாதன தானானா
தான தன் நாதன தான தன் நாதன
தான தன் நாதன தானானா

திருநிறைச் செல்வி கண்ணகியின் கதை
சிறப்புடன் பாடியாட வரமருள்வாய்
மருவான வேழமுகவனுடன் கலை
வாணித்தாயும் வந்து வாழ்த்துரைப்பாய்

தான தன் நாதனா............

பாண்டிய நாட்டு அரசனுக்கு
மூன்று கண்கள் இருந்ததுவே
வேண்டிய மட்டும் அரசனிடம் சக்தி சொல்லி
வேடிக்கையாய் கண்களை மறைத்துவிட்டார்.

தரு...........

மன்னவன் கண்களை மாற்றிட எண்ணியே
மாங்கனியாக வடிவெடுத்து
திண்ணமாய் எண்ணிய காரியம் முடித்திட்ட
திருமகள் கண்ணகி என்றறியேன்.

தரு.....

பாண்டி மா தேவியின் கையில் அகப்பட்ட
பக்குவமான மாங்கனியை
தாண்டிட முடியாமல் தக்க பொன்கலசத்தில்
தரித்து வைத்தாள் தேவியும் தான்

தரு.....
தேவி பொன் கலசத்தில் வைத்திட்ட மாங்கனி
மூன்றாம் நாள் குழந்தையாய் உருவெடுக்க
வேதியர் சொற்படி பேழைக்குள் அதை வைத்து
ஆழிக்கடலில் அதை விடுத்தார்

தரு.....
கடலில் விடப்பட்ட பேழையும் சென்று
அலையலையாக மிதந்து வந்து
திடலாய் உருவான காவிரிப் பூம்பட்டிணத்தை
சென்று அடைந்து நின்றதுவே

தரு.........
பேழையைக் கண்டவர்கள் மானாகர் மாசாத்தார்
இருவரும் பேழையைத் திறந்து பார்க்க
காளை போல் பெண்குழந்தை உள்ளேயிருந்ததைக்
கண்டு எடுத்தார் கான் மானாகர்

தரு..........
மானாகர் கூறினார் மாசாத்துவாரிடம்
இப்பெண் குழந்தைக்கு உன்மகனை
நானாகத் தருவனே நண்பனே மாசாத்தா
நட்பு என்றும் நிலைத்திருக்க

தரு............
மானாகர் எடுத்திட்ட பெண்குழந்தைக்கு
கண்ணகை என்று நாமம் சூட்டி
தானாக வளர்த்திட்டார் குழந்தை நன்றாய்
பன்னிரெண்டு வயது வரை

தரு........
மானாகர் மசாத்துவாரிடம் கூறிய
வார்த்தையை நன்றாய் மதிக்கவென்று
தேனாகத் திருமணத்தை செய்து முடித்திட
திட்டம் ஒன்றை வகுத்தனரே

தரு......
கண்கையார்கரும் கோவலர்க்கும்
கோலாகலமாகத் திருமணத்தை
திண்ணமாய் மாசாத்துவாருடன் கூடியே
சிறப்பாய் நடத்தி வைத்தனரே

தரு........
சோழமாமன்னனின் மாளிகையில் வந்து
ஆடல் அழகி மாதவியாள்
தாளம் பிசகாமல் தரமாய் நடித்து
தகுந்த பரிசையும் பெற்றுச் சென்றாள்

தரு.....
மாமன்னன் சோழனும் மாதவிக்கீந்த
மகிழ்வான மாலையை விற்று வர
தாமாகக் கூனியிடம் தருவித்தனுப்பினாள்
தகுந்த தருணம் இதுவெனவே

தரு.....
கூனி விற்க வந்த மாலையைக் கோவலன்
ஆயிரம் பொற்காசு கொடுத்து வாங்கி
தான் இம் மாலையைத் தனக்குள்ளதாகவே
தன் வசப்படுத்தி வைத்துக் கொண்டான்

தரு...
மாலையை வாங்கிய கோவலரும்
மாதவியின் வீடு சென்று இங்கு
தாயை மறந்து தன் தாரத்தை மறந்து
தான் வீட்டில் தங்கி வாழ்ந்தனரே

தரு....
இந்திர விழாவினில் மாதவியாள் நின்று
ஏற்ற வகையினில் நடனமிட்டு
தந்திரமாகவே எல்லோர் மனதிலும்
தனக்கோர் இடத்தினைப் பிடித்தனளே

தரு....
கடற்கரை வீதியில் மாதவியாள் நின்று
பாடிய பாடலைக் கோவலனும்
திடமாகக் கோவலன்மனதை வெறுத்து
தீவிரமாய் கண்ணகி வீடு சென்றான்

தரு....
கண்ணகி நிலை கண்ட கோவலரும்
கதறி அழுதிட எண்ணம் கொண்டு
திண்ணமதாகவே என்னால் இவ் வினைப்பயன்
வந்ததை எண்ணி அழ நினைத்தான்

தரு....
கண்ணகி காலின் சிலம்பதை ஏந்தி
கோவலன் தன் கையில் கொடுத்திடவே
எண்ண முடியாமல் இருவரும் சேர்ந்து
அவ்விடம் விட்டு வெளியில் சென்றார்

தரு.....
கோவலன் கண்ணகி கவுந்தியடிகள்
மூவரும் மதுரை நோக்கி பயணமாகி
தேவையற்ற பிரச்சினை பல வந்து
திடமுடன் வகை சொல்லி நடந்தனரே

தரு.....
காலைப்பொழுது உதயத்திற்கு முன்
காட்டை விட்டு மூதூர் செல்ல
வேளைக்கு முன் நாங்கள் சென்றிடவே
வேகமாய் நடந்துவந்து விட்டோம்

தரு.....
கண்ணகியுடன் கவுந்தி அடிகளையும் விட்டு
கோவலன் மாத்திரம் தனியாக
எண்ணிய கருமத்தை ஈடேற்ற எண்ணி
மதுரை மாநகருக்குச் சென்றனரே

தரு.....
அரசனின் பொற்கொல்லன் அங்கு வந்து
உமக்கென்ன வேணும் என்று கேட்க
சரசமாக கோவலன் சொன்னான்
சிலம்பை விற்றிட வேணுமென்றான்

தரு.....
பொற்கொல்லன் கோவலன் கைச்சிலம்பை
தன்கையை நீட்டி வாங்கிக் கொண்டு
தக்கசமயம் இதுவென எண்ணி
சடுதியாய் அரசனிடம் சென்றான்

தரு.....
தங்கள் அரசியின் பொற்சிலம்பென்று
கை கட்டி வாய் பொத்தி நின்று சொல்லி
வங்கமாய் பொய்யுரை எடுத்து கூறி
இவன் கள்வன் தண்டனை வழங்கென்றான்

தரு.....
அரசனிடம் நான் பொய் கூறவில்லை என்று
கோவலன் சொல்லியதை ஏற்காமல்
சரசமாய் கோவலன் சிரசினை அறுத்து
கொடும் வதை செய்யப்பட்டான் கோவலனும்

கோவலன் கொலை செய்யப்பட்டானென்று
கண்ணகியின் காதில் கேட்டிடவே
காவலனாய் காளி உருவெடுத்து கண்ணகி
கோவலன் கொலையுண்ட இடமே சென்று

தரு....
கண்ணகி கோவலனையெழுப்பி
கொலையுண்ட விபரத்தை கேட்டறிந்து
திண்ணமாய் அரசனிடமே சென்று
திசை எட்டும் நடுங்கிட நீதி கேட்டான்

தரு......
மன்னவன் கூறினான் கள்வனை நான்
கொலை செய்யும் நீதியும் இங்கு உண்டு
எண்ணம் போல் கள்வனை செய்தேன்
இதில் இடையூறு என்றுமே ஒன்றுமில்லை

என் கணவன் கள்வன் அல்லவென்று
எடுத்து நான் உரைப்பேன் இப்பொழுது
உன் சிலம்பின் பரல் என்னவென்று
என்னிடம் உரைப்பாயே மன்னவனே

தரு......
என் சிலம்பின் பரல் முத்தென்று
எடுத்து நான் உரைப்பேனே உன்னிடத்தில்
உன் சிலம்பின் பரல் என்னவென்று
என்னிடம் நீரும் எடுத்துரைப்பாய்

தரு.....
மாணிக்கப் பரலே என் சிலம்பின் பரல்
இச்சிலம்புக்கு இணைச் சிலம்பு
நானிப்போ உடைக்கிறேன் தந்து பார் என்னிடம்
தயங்காமல் நீரும் மன்னவனே

தரு......
சிலம்பைக் கண்ணகி வாங்கிக்கொண்டு
சிதறிட நிலத்தில் அடித்த பின்பு
வலமாக இடமாக மாணிக்கப் பரல்
வரிசையாய் பறந்து சிதறியதே

தரு.....
மன்னவன் ஐயையோ என்றலறி
பொற்கொல்லன் கூறிய பொய்யை நம்பி
என்ன குறைகளை நாம் செய்தோம் என்று
ஏங்கித் தரையில் வீழ்ந்திறந்தான்

தரு.......
அரசியும் இதனைக் கண்டு வந்து
அரசனின் பாதங்களை வணங்கி
சிரசியில் கைகளை வைத்தலறி
சிதறியே நிலத்தில் வீழ்ந்திறந்தாள்

தரு.....
கண்ணகி பொற்கொல்லன் தனை யெரித்து
போகிற வழிதன்னையும் மெரித்து
விண்ணோர் போற்றிட மதுரை தன்னையும்
வீரமாய் இடமார்வை பிய்த்தெரித்தாள்

தரு....
இடைச்சேரி தன்னில் வந்து நிற்க
இடையர் மங்கையர் பலர் கூடி வந்து
தடையின்றி அகோரம் தனித்திறக்கி
தன் நலம் கருதாமல் வாழ்த்தினரே

தரு.....
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே
கண்ணகி அம்மனும் வாழ வாழியவே

**சுபம்**

**ஆக்கம் :**
மரபுக் கலைவேந்தர் கலாபூஷணம்
**வீர.இராசமாணிக்கம் J.P**
(அண்ணாவியார்)

# காவிய நாயகி கண்ணகை காதை
# கும்பி

## விநாயகர் காப்பு

சோழவள நாட்டிலே பிறந்து மாநாகர் தன் மகளாய் வளர்ந்து
தேடற்கரிய பெருஞ்செல்வக் கோமகன் கோவலனாரை மணம் புரிந்து
சேரநாட்டிற் சென்று தெய்வீக மெய்திய செல்வி கண்ணகை தம்கதையை
தூயதமிழில் நான் பாடுதற்குத் தும்பிமுகனே துணைபுரிவாய்

## சரஸ்வதி துதி

கோவலர் கண்ணகை தம் கதையை
கும்மியாகவே நான் பாட
நாவினில் வந்து நலம் புரிவாய்
நாமகளே கலைவாணித் தாயே!

(காவிய நாயகியின் காவியம் நீண்ட கும்மியின் சிறப்பு மிகு மாதவி அரங்கேற்றுக் காதையும், வழக்குரைக் காதையும் இங்கு வெளியிடுகின்றோம்)

ஆடற் கலையில் வல்லவள் மாதவி
மேடை அரங்கில் ஆடுதல் காண
தேடியே சென்ற கோவலனாரும்
மாதவிமேல் நல்ல மையல் கொண்டாரே

நாளோரிரவைக்கு ஆயிரத் தெண் களஞ்சிப் பொன்
நல்கியே கைப் பொருள் யாவுமிழந்து
தோழும் முகமும் வாடிய கோவலர்
கண்ணகி இல்லம் திரும்பி வந்தாரே

வந்த கணவனை வையாது கண்ணகி
வாஞ்சையாய்ப் பேசி இணைந்து இருக்கையில்
நேர்ந்த கதிதனைக் கூறிய கோவலர்
நிம்மதியாய் வாழப் பொருளில்லையென்றார்

வேண்டாம் கவலை நாம் வாழுதற்கு
காற்சிலம்பது என் காலினில் உண்டு
கொண்டுமே சென்று பாண்டிய நாட்டில்
கூறியே விற்று வாழலாம் வளமாய்

பாண்டிய நாட்டில் சிலம்பதை விற்க
பதியொடு இணைந்து நற்பாவை நடந்தாள்
பஞ்சு மென் கால்கள் கல்முள்ளில் நடக்க
விஞ்சிச் சிவந்ததே பஞ்சு மென் பாதம்

பாண்டிய நாட்டில் பால் தயிர் மலிந்த
சேரிப் பகுதியாம் மாதரி வீட்டில்
கொண்மே விட்டு அடைக்கலம் செய்து
கோவலர் சென்றாரே சிலம்பதை விற்க

தெருத் தெருவாக கூறியே வந்த தேசுமிகுந்த கோவலர்முன்னே
நடுத்தெருவில் வந்தான் நயவஞ்சத் தட்டான் ஒருவன்
பெருவிலையாக நான் விற்றுத் தருகுவேன்
பேசாது வாருமெனக் கூட்டிச் சென்றான்

பாண்டிய மன்னன் மாளிகை சென்று
பணிந்து வணங்கி அவன் முன்னே நின்று
பாண்டிமாதேவியின் காற்சிலம்புக் கள்வன்
பாதகனைக் கொல்லுமென வேண்டினானே!

மன்னன் பாண்டியன் மனையிற் சேடியர்
சிலரை அழைத்துச் சிலம்பைக் கொடுத்து
தன்னுடையதோ அது அல்லவோவென்று
அறிந்து வாரும் எனக் கூறியே விட்டான்

சிலம்பதைப் பார்த்த கோப்பெருந்தேவி
இச்சீர்மிகு சிலம்பு என்னுடை அல்ல
சிலம்பிலிருப்பதோ நாகமணிப் பரல்
தெய்வ மகளிற்கு உரியது என்றாள்

பாண்டிமாதேவியின் வார்த்தையைக் கேட்டுப்
பண்பில்லாத் தட்டான் பாங்காய் பொழிந்தான்
நான் செய்கின்ற தொழில் நானே அறிவேன்
நம்பியே கள்வனைக் கொல்லுக என்றான்

மன்னன் மதயானை ஒன்றை அழைத்துக்
கொல்லுக இவனை என்றேவி நிற்க
அன்னவன் தன்னை வலம் வந்த யானை
கொல்லாதகன்றே தூரம் சென்றதுவே

புல்லறிவு கொண்ட பாண்டிய மன்னன்
உண்மையுணராது பொல்லா மள்ளரைக் கூவி
கொல்லுக என்றிட மள்ளர்கள்தாமோ
கல்லுமனையிற் இடத்தியே கொன்றார்

கண்ணகியாகிய பெண்ணியல் நல்லாள்
தன்துணை கொலையுண்ட காட்சியதனைத்
தன்கனவில் கண்டுமே கதறிப் பதறி
விண்ணதிரலே ஐயகோவென்று புலம்பி எழுந்தாளே

கந்தம் கமழும் கண்ணகியாள் குழல்
காற்றில் பறக்க வீதியில் தேடி
சொந்தக் கணவன் கொலைக் களம் சென்று
தூல உடல் கண்டு கதறி நின்றாளே

விண்ணதை நோக்கியே ஊசி நூல் வேண்டி
தன் கணவனுடல் தைத்துப் பொருத்தி
என்ன நடந்த தென்றே வினாவி நிற்க
ஏந்தல் கோவலர் எல்லாம் உரைத்தார்

கதை கேட்டறிந்த கண்ணகை கண்கள்
கனத்துச் சிவந்து கனல் நெருப்பாக
வதை செய்த பாண்டியன் தன்னிடம் சென்று
வாதாடச் சென்றாள் தன்துணை கள்வனில்லையென்றே

பாண்டிய மன்னன் மாளிகை முற்றம்
பதைபதைப்பாக அடைந்தாள் கண்ணகை
வேண்டியே நின்றாள் வேந்தன் வரவை
பாண்டி மன்னனும் தலைவாசல் வந்தான்

கொற்றவன் நீயோ கொடுங்கோலன் நீயோ
கொலைப்பட்ட கோவலன் என்துணையென்று
சீற்றமாய்ச் சீறியே நீயே கள்வன் எனக்
காற்சிலம்பைக் கழற்றி எறிந்தாள்

தரைதனில் வீழ்ந்த சிலம்போ சிதறி
நெருப்புப் பொரியாய்ப் பறந்தது மன்னன்
மார்பினில் பட்ட பொரியால் வேந்தனும்
மயங்கியே உருகி வீழ்ந்திறந்தனனே

மன்னன் மாளிகை தன்னிலிருந்த
மாந்தர்களெல்லாம வீழ்ந்துயிர் போக்க
தன்னருகில் நின்ற தட்டானையும் சுட்டு
தன்கோபம் மேலுறத் தாளாது நின்றாள்

நின்றவள் தன் இட முலையைத் திருகி
தாக்கி எறிந்தாள் பாண்டிமாநாடு
வன்னமாய்ப் பற்றி எரியுதல் கண்டே
வேண்டினாள் தீயை இடைச்சேரி வேகாது என்றே

அந்த நல்வேளையில் சீத்தலைச் சாத்துர் வந்தே
அன்னையே நின் கோபமாறிட வேண்டும்
இந்த உலகம் எழிலாய்த் தழைத்திட
எப்போ நீ வருகுவீர் எனவேண்டி நின்றார்

தெய்வநிலை அடைந்த கண்ணகியும்
வைகாசி திங்கள் வருகுவேனென்று
பொய்யாத வார்த்தை தனைப் புகன்றுமே
பொன்னுலகேறி நின்றாள் பார்போற்ற

முடிவு

நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்
நீண்ட தமிழ்ப் பெருங் காப்பியம் ஒன்று
விஞ்சு தமிழில் இளங்கோவடிகள்
மேன்மையாய்ப்பாடி அறம் வளர்த்தாரே

செந்தமிழ் வல்லோன் இளங்கோவடிகள்
செப்பிய இச்சிலம்புக் கதையை
பைந்தமிழால் பாடினேன் கும்மியாகப்
பாரிலுள்ளோர் படித்தின்புறவென்றே


ஆக்கம் :
**ஐ.சுப்பிரமணியம் J.P (W.I)**
(ஓய்வுநிலை நிருவாக உத்தியோகத்தர்
தலைவர்
ஸ்ரீ புளியடிப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை

# இயற்கை வனப்பால் சூழ்ந்து எழிலுடன் காட்சி தரும் எருவில் திருநகரின் அருளொளியாள் அன்னை ஸ்ரீ கண்ணகி யம்மனுக்கு காவடிச் சிந்துப் பாடல்கள்

ஐந்து கரத்தானை முகமுதலே போற்றி
அறுமுகனார் மூத்தவனே அரனே போற்றி
வெந்தழலாய் உருவமதை உச்சரித்து
வெறிகொண்ட கஜமுகனைச் சங்கரித்தாய் போற்றி

எந்தனுளம் எருவிலுறை சிலம்பின் செல்வி
எழலரசி கண்ணகிக்குச் சிந்து பாட
வந்தெனது நாவினிலே தமிழைத் தந்து
வரமளிப்பாய் கணபதியே கும்பிட்டேனே!

மண்முனை தென் எருவில் எனும் மகுடம் சூடும்
மாண்புமிகு அரசியலின் களமே ஆகும்
தொன்மை மிகு வயல்வெளிகள் சூழக்காணும்
செந்நெல் மணிக் கதிர்களிங்களே நடனமாடும்
கன்னல் மொழித்தழிழ் அழகு சொரியக் கேட்கும்
கார்முகிலும் திரண்டிங்கே மழையைக் கொட்டும்
எண்ணமெலாம் என்றைக்கும் உந்தன்பக்கம்
எருவிலுறை கண்ணிகியே சரணம் தாயே!

மானாகர் மகளாகக் கிடைத்தாயம்மா
மாசாத்துவார் மரு மகளாய் ஆனாய்
பெண்ணாகப் பெயர் விளங்க அழகு சூடிப்
பெரும் பேறாய்க் கோவலர்க்கு மனைவி ஆனாய்
கண்ணாக இல்லறத்தைக் காத்து நின்றாய்
காதலித்தாய் கணவனையே தெய்வமாக
எந்நாளும் எருவில் நகர் அருளும் தேவி
எழிலரசி கண்ணகியே சரணம் தாயே !

ஆடல் மகள் மாதவியாள் அழகு கண்டு
அவள் ஆட்ட நடம் கண்டு மெய்மறந்து
கூடல் நிலை உருவாகக் குதூகலித்த
கோவலரை மாலையிட்டு வசமாய்க்கொள்ள
தேடரிய கணவனையே தியாகம் செய்து
திரு நகராம் பூம்புகாரில் அடக்கம் கொண்டாய்
நாடறிந்த பெட்டகமே கற்பின் செல்வி
நாயகியே எருவிலுறை மாதே போற்றி !

செல்வமெல்லாம் மாதவியின் குலத்துக்காக்கி
சிறப்பெல்லாம் இழந்து வெறும் பெண்ணாய் நின்று
உள்ளத்தில் நிறைந்த ஒளிகுன்றாவண்ணம்
ஒரு மனதாய்க் கோவலரை நினைந்துருகி
அள்ள அள்ளக் குறையாத அன்பே ஆகி
ஆருடம் காத்து நின்ற வீரசக்தி
பிள்ளைகளைக் காத்து நிற்கும் பிரியமாதா
எருவிலூர் தனிலுறையும் தாயே போற்றி !

சந்தேகம் வலுவோங்கச் சகியாராகி
சரித்திரமே வேறுதிசை வடிவமாகி
வந்துவிட்டார் மாதவியை விட்டகன்று
வடிவழகர் கோவலனார் பதியைத் தேடி
பந்தமுறு தாயே நின் பத்தாவைத்தான்
பக்குவமாய் அரவணைத்துப் பாதுகாத்தாய்
சொந்தமுறு எருவில் நகர் வாழும் தேவி
சுடரொளியே நின்பாதம் போற்றி ! போற்றி !

மாதவியாள் தாசிகுலம் மாதாஉந்தன்
மதிப்பபிடவே முடியாத பொருளையெல்லாம்
தேவி நின் திருப்பதியைத் தேடிவந்து
தினசரி ஓர் இரவுக்கு ஆயிரத்தெட்டுக்
களஞ்சிப் பொன் பொன்னாகச் சூறையாடிக்
கடுகளவும் இல்லாது வற்றவைக்க
காற்சிலம்பு இரண்டோடு காட்சி தந்த
கண்ணகியே எருவிலூர் தாயே போற்றி !

காற்சிலம்பு ஒன்றினையே கழற்றி அந்தோ
கண்ணாளன் கோவலனின் கரங்கள் ஈந்து
மதுரை நகர் சென்றங்ககே விற்று விட்டு
வருகவென வறுமையினைப் போக்கிக்கொள்ள
பெருமனது உடையவளாய் வழியனுப்பி
பிசகாது கண்நோக்கிப் பார்த்து நின்றாய்
உருகுதம்மா உன் உள்ளக் கிடக்கைகண்டு
உத்தமியே எருவிலுறை தாயே போற்றி !

மதுரையிலே சிலம்புதனைக் கூறிச்சென்ற
மாதவத்தோன் கோவலனைக் கள்வனாக்கி
சதிபுரிந்த பொற்கொல்லர் சேதிகேட்டு
விதிவரைந்தான் பாண்டியனும் கொல்கவென்று
கெதி என்னே! கொடுமையது கொடுமையன்றோ
படுவதைக்குக் கோவலனார்.ஆளாய்ப்போக
மதிமுகத்தோய் மாதா நீ தீயாய்ப் போனாய்
மண்டியிட்டோம் எருவிலுறை தாயே போற்றி !

மறுசிலம்பைக் கரம்ஏந்தி மாதா நீயே !
மறுகணமே பேயாகிக் கோலமானாய்
சிறு குற்றம் செய்யாத கணவன் உந்தன்
கோவலானார் கள்வனெனக் கொலையாய்ப்போன
உறுமெனவே எழுந்து வந்த சேதிகேட்டு
ஓவென்று ஆவென்று கத்திப் போனாய்
பெருமைபெறு எருவில் நகர் வாழும்தாயே
பத்தினியே கண்ணகிநின் பாதம் போற்றி !

கொலையுண்ட கோவலரைக் களத்தே கண்டாய்
கூவென்று பிணத்தினையே வாரி ஏந்தி
ஊசிநூல் கொண்டங்கே உடலைத் தைத்து
உண்மையினை கணவரிடம் கேட்டறிந்தாய்
உருமாறிப் பதை பதைத்துத் துடித்துப் போனாய்
ஒருநொடியில் மதுரை நகர் வாசல் புக்காய்
திருமகளே கண்ணகியே எருவில் வாழும்
தேவியரே நின்பாதம் போற்றி !போற்றி !

பாண்டியத்துப் பேரவையே அதிர்ந்து போகப்
பேயாகிப் பூதமதாய் நிமிர்ந்து போகப்
மாண்டுவிட்ட தன் கணவன் கள்வனென்று
மதியுரைத்த பாண்டியனே நீதி எங்கேயென்று
நீண்டுரைத்த வழக்குரைக்கு நிகர்தான் என்னே!
நியாயத்தைக் கேட்டுரைத்த வடிவு என்னே!
வேண்டுவரம் தந்தெம்மைக் காக்கும் தேவி
எருவிலூர் தனிலுறையும் தாயே போற்றி!

பாண்டியனே உன்தேவி சிலம்பு என்றாய்
பத்தா என்கோவலரைக் கள்வனென்றாய்
வேண்டுகிறேன் உன் தேவி சிலம்பினுள்ளே
உள்ளீடு என்னவென்று உரத்துக்கேட்க
கொற்கை நிறை முத்துக்கள் என்று மன்னன்
கூசாது மறு மொழியைப் பகன்றபோது
பற்கடித்துப் பாண்டியனை விழித்து நின்றாய்
பதிவிரதா எருவிலுறை தாயே போற்றி !

மாணிக்கப் பரல்களடா என் உள்ளீடு
மதிகெட்ட மன்னவனே உடையுன்தேவி
சிலம்பினையே என்றுரைக்கப் பாண்டி மன்னன்
சிதறிடவே உடைத்திட்டான் கொற்கை முத்து
மறுசிலம்பை உடையென்று மாதா நீயும்
மன்னவனைச் சினங்கொண்டாய் தாயே உன்னை
பொறுமையுடன் கும்பிட்டோம் எருவில் வாழும்
பூமகளே கண்ணகியே சரணம் தாயே !

மறு சிலம்பில் மாணிக்கப் பரல்கள் கண்டாய்
மனம் கொதிக்க நின் சிலம்பை உடைத்தெறிந்தாய்
மாணிக்கப் பரல்களையே மன்னன் கண்டான்
மதிமயங்கிக் கண்ணீரைச் சொரிந்து நின்றான்
நீதிக்கு உலைவைத்த பாண்டிநாடு
நெருப்பலையால் எரிந்து விடச் சக்தியானாய்
சோதியே சுடரொளியே எருவில் வாழும்
கற்பரசி கண்ணியே சரணம் தாயே !

அடியவர்கள் அம்மா நின் சந்நிதிக்கே
அலையலைலையாய்த் திரண்டு வரும் காட்சி என்னே !
அரோகரா கோசமுடன் குரவைக் கூத்து
அம்மா நின் திருக்கோயில் அழகுக்கோலம்
கற்பூரச்சட்டி ஏந்தும் பெண்கள் கூட்டம்
காவடிகள் ஆடிவரும் பக்தர் கூட்டம்
கற்புடைய மாதா நின் கருனை தாரும்
எருவில் நகர் உறைகின்ற தாயே போற்றி !

பட்டமரம் தழைக்க வைத்த பாவாய் நிந்தன்
பதிவிரதா தர்மத்தின் மாண்பு கண்டோம்
கெட்டவர்க்கு முத்தெறிந்து வாட்டும் உந்தன்
கிருபையினைக் காணக் கண் கோடி வேண்டும்
நெல்மணிகள் குவியல்களைப் பொலியவைத்து
நிறைவான பக்தர்களை அதிரவைத்தாய்
கண்மணியே கற்புநெறி காத்த தாயே
கலைவாழும் எருவில் நகர் உறையும் மாதே !

யானையிலே ஏறிவலம் வந்து வாஞ்சியூர்
வடிவரசி நின்கோயில் புகுந்து அங்கே
தேனமுதே நின் திருவுருவச் சிலையை ஏற்றி
திருநகராம் எருவிலுறை கோயில் வைத்து
வானவரும் வந்து நிதம் பணிந்து ஏக
வழிமுறைகள் விதிமுறைகள் காட்டி நின்றாய்
ஞானமுறு பூம்புகாரின் கற்பின் செல்வி
எருவிலுறை மாமகளே ! சரணம் தாயே !

வேப்பிலைக்கு உள்ளிருந்து ஒளியைக்காட்டி
வீரமாதா நின் திருவின் உருவம் காட்டி
நேத்தி வைக்கும் பக்தர்களுக்கு கருனைக்காட்டி
நிறைகும்பத்தழகியரே வதனம் காட்டி
காத்து நிற்பாய் எங்களையே கருணை மாதா
காரிருள் போல் வினைகள் எம்மைச் சூழாவண்ணம்
ஆத்தா நின் ஆலயத்தே எழுந்து வந்து
ஆறுதலைத் தந்திடுவாய் எருவில் மாதா !

வைகாசிப் புரணையைத் தொடரும் திங்கள்
வன்னி வழி நடந்தவளே தாயே உந்தன்
திருக்குளுத்தி திருநாளைக் கண்டு எங்கள்
தீவினைகள் அழிந்துவிடக் கண்டோமம்மா
பெண்ணியலைக் காத்து நின்ற பெரியசக்தி
பேசரிய கற்பரசி காவல் தெய்வம்
நந்நகராம் எருவிலுறை தாயே உந்தன்
நற்பாதம் நாளெல்லாம் துதி செய்வோமே !

**ஆக்கம் -**
**கிராமிய நடனவேள் கலாபூணம் கலைச்சுடர்**
**கோயிலூர் தணிகா**

தெய்வப் பெண்ணாகிய உமை மானிடப் பெண்ணாக கண்ணகியாக பிறக்கின்றாள். மானிடப் பெண்ணாக வாழ்ந்த போதும் அவள் தெய்வீக மாட்சிமையுடையவளாகவே மிளிர்கின்றாள் என்பதற்கு அவளிடம் காணப்பட்ட குணாதிசயங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

01. காற்சிலம்புடன் பிறந்தமை.
02. பத்தினித்தன்மையுடையவளாக இருத்தல்.
03. நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறியும் திறன்.
04. சாபமிட்ட போது பலித்தல்.
05. இறந்த கணவனை எழுப்பி நடந்தவற்றைக் கேட்டறிதல்.
06. கோவலனைக் கொலை செய்தவர்களை தண்டித்தல்.
07. கோவலனுக்கு உதவியவர்களுக்கு தண்டனையிலிருந்து தப்பிவித்தல்.
08. தனக்கு உதவியவர்களுக்கு அருள் பாலித்தல்.
09. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டியமை.
10. தான் தெய்வப் பெண் என்பதை நிரூபித்தமை.

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை

01. தலைவர் : திரு.மா.சுந்தரலிங்கம்
02. செயலாளர் : திரு.க.அமிர்தலிங்கம் GSO
03. வண்ணக்கர் : திரு.க.அற்புதராசா (தெளிகருவி இயக்குனர் மலேரியா)
04. மணியகாரர் : திரு.சோ.தினகரன்பிள்ளை

### குடித்தலைவர்கள் (பூசை ஒழுங்கு முறைப்படி)

05. எருவில் பணிக்கொணாக்குடி : திரு.சோ.பவளசிங்கம்
06. எருவில் பெத்தான் குடி : திரு.ச.பேரின்பநாயகம் JP (முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி)
07. எருவில்வாழ்கின்ற கரவாகு பணிக்கொணாக்குடி : திரு.சீ.யோகராசா
08. எருவில் வாழ்கின்ற களுதாவளைப் பெத்தான்குடி : திரு.சா.தாமோதரம்பிள்ளை குருக்கள்
09. கச்சிலா குடி : திரு.இ.சிவப்பிரகாசம் (முன்னாள் கிளைமுகாமையாளர் கூட்டுறவு)
10. வேளாளர்குடி : திரு.தி.சத்தியசீலன் (வெளிக்கள உத்தியோகத்தர் S.W.O)
11. பத்தினாச்சிக்குடி : திரு.க.சங்கரப்பிள்ளை
12. மருத்துவக்குடி : திரு.பெ.இராஜேந்திரன்
13. செட்டிகுடி : திரு.வே.கீர்த்திவர்மன் (சிறைச்சாலை பாதுகாப்பு உத்.)
14. கண்டன் குடி : திரு.இ.ஏரம்பமூர்த்தி
15. கோப்பிகுடி : திரு.சி.சத்தியநாதன் (அதிபர்)
16. படையாண்டகுடி : திரு.மா.துரைசாமி
17. உலகிப் போடிகுடி : திரு.சா.பரமானந்தம் (அதிபர்)
18. எருவில் வாழ்கின்ற மண்முனைப் பெத்தான் குடி : திரு.வ.திருச்செல்வம்
19. காலிங்கா குடி : திரு.இ.சின்னத்துரை (ஓய்வுநிலை சிற்றூழியர் நீர்ப்பாசன திணை.)

## இப்புனித பணிக்கு என்னோடு இணைந்த இவர்கள் நன்றிக்குரியவர்கள்

01. நூல்வெளியிட அங்கீகாரம் அளித்தவர்கள்
**எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலனசபையினர்**

02. **கும்மி, கோல் நடனம் காவடிச் சிந்து, வசந்தன் கூத்து பாடல்கள் இயற்றியவர்கள்**
    01. கலாபூசணம், கலைச்சுடர் கோயிலூர் தணிகா
    02. கலாபூசணம், மரபுக்கலை வேந்தன், வீர.இராசமாணிக்கம், (அண்ணாவியார்)
    03. கவிஞர், எருவில்கலிங்கன்
    04. திரு.ஐ.சுப்பிரமணியம் (JP) (ஓய்வு நிலை நிருவாக உத்தியோகத்தர்)

03. அருளாசியுரை வழங்கிய கிரியாஜோதிசிவகிரி அகோரசிவாச்சாரியார் சிவஸ்ரீ இரா.கு.கோபாலசிங்கம் குருக்கள், அபிதாலயம்

04. ஆசியுரை வழங்கிய திரு. கோபால் பத்தினியன், பிரதமகுரு ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்

05. வாழ்த்துரை வழங்கியவர்கள்
திரு.மா.சுந்தரலிங்கம், தலைவர், ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரியாலனசபை.
எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரியாலனசபையினர்.

06. வெளியீட்டுரை வழங்கிய திரு.சி.சத்தியநாதன் (அதிபர்) தலைவர் கோப்பிகுல ஒன்றியம், எருவில்

07. பாடலை பாடியவர்கள் :
கலாபூசணம், கோயிலூர் தணிகா
திரு.மு.இளைஞன்
திரு.பொ.விநோதன் (நீர்க்குழாய் பொருத்துனர், மட்.போதனாவைத்தியசாலை)
திருமதி.ர.மகேந்திரன் (சுகாதாரப்பணியாளர், மத்திய மருந்தகம், களுதாவளை)
செல்வி.லோ.லக்ஷியா

08. இசைவடிவம் கொடுத்தவர்
திரு.பிரசன்னா - ஆராதனா இசைக்குழு

09. ஒலிப்பதிவு
திரு.ந.ரேணுகாந்தன், பயனியர் சவுன்ட் சேர்விஸ், எருவில்

10. புத்தக வெளியீடு
கோப்பிகுல ஒன்றியம், எருவில்

11. இறுவெட்டு வெளியீடு
பயனியர் சவுன்ட் சேர்விஸ், எருவில்

11. வெளியீடு செய்வதற்கு நிதியுதவி நல்கியவர்கள்
அமரர்.சி.குணரெத்தினம் (வட்டவிதானை) அவர்களின் நினைவாக
மகன் கு.டேவிற்சுந்தர் (கட்டார்)

திரு.த.தபேந்திரன்

12. நூல்கள் தந்து உதவியவர்
தமிழ் ஆசான். திரு.சா.பத்மகுமார் B.A Tamil (Hons) PGDE, M.A

13. சரவை பார்த்தவர்
திருமதி.க.கஜேந்திரன் (D.O) B.A Tamil (Hons)

14. முன்அட்டைப் படம்
திரு.எஸ்.ஆதித்தமூர்த்தி

15. புத்தகத்தை அழகாக வடிவமைத்த
பிறிலியன்ட் பிரிண்டர்ஸ், கல்முனை
கோல்ரன் அச்சகம், கல்முனை

**திரு.எஸ்.ரகுபதி**
தொகுப்பாசிரியர்.

